# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 01 | வள்ளுவர் ஆண்டு 2047 | மார்கழி 15, வெள்ளிக்கிழமை 30.12.2016 | கதிர் 55


## அரசமைப்பு வழிகாட்டல் குழுவின்
# இடைக்கால அறிக்கை இப்போதைக்கு இல்லை!

### மார்ச் ஜெனிவா கூட்டம் முடியும் வரை இழுத்தடிப்புப் போக்கே தொடருமாம்

கொழும்பு, டிசெம்பர் 30

**புதிய அரசமைப்பின் நகல் வடிவத்துக்கு வழிவகுக்கக்கூடிய அரசமைப்பு வழிகாட்டல் குழுவின் அறிக்கை இப்போதைக்கு வராது.**

**எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் இலங்கை விவகாரம் ஆராயப்படும் வரை, இந்த இடைக்கால அறிக்கை விடயம் இழுபடும் என கொழும்பில் உயர் அரசியல் வட்டாரங்கள் 'காலைக்கதிரு'க்குத் தகவல் வெளியிட்டன.**

இனப்பிரச்சினைக்கான தீர்வு உள்ளிட்ட விடயங்களை உள்ளடக்கியதாகப்புதியஅரசமைப்பை உருவாக்கும் நோக்கத்துடன் முழு நாடாளுமன்றமுமே அரசமைப்புச் சபையாகவும் மாற்றப்பட்டிருப்பது தெரிந்ததே.

அந்தஅரசமைப்புச்சபையின்

பக்கம் 19 »

## ஐ.தே.க - மைத்திரி இன்று சந்திப்பு

கொழும்பு, டிசெ.30

ஐக்கிய தேசியக் கட்சியின் இளம் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் இடையில் இன்று முக்கிய சந்திப்பொன்று இடம்பெறவுள்ளது.

நல்லாட்சி அரசில் உள்ள சிறீலங்காசுதந்திரக்கட்சியின்நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஐக்கிய தேசியக் கட்சி மீது கடுமையான விமர்சனங்களை முன்வைக்கின்றனர் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளு

பக்கம் 20 »

## பலாலியிலிருந்து நாட்டு மக்களுக்கு மைத்திரி உரை

கொழும்பு,டிசெ.30

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நாட்டு மக்களுக்கு முக்கிய உரையொன்றை நிகழ்த்தவுள்ளார்எனத்தகவல்கள்வெளியாகியுள்ளன.

இந்த உரை யாழ்ப்பாணம் பலாலியில் உள்ள முப்படைகளின் தலைமையகத்தில் இருந்து ஜனவரி 4ஆம் திகதி

பக்கம் 20 »

## இலங்கை – இந்திய மீனவர் பிரச்சினை: இன்றும் டில்லியில் பேச்சு தொடர்கிறது

### ஜனவரி 2 இல் கொழும்பில் உயர்மட்டப் பேச்சு

கொழும்பு டிசெ.30

இலங்கை - இந்திய மீனவர்களின் பிரச்சினை தொடர்பாக நேற்று புதுடில்லியில் ஆரம்பமான இருதரப்புபேச்சு இன்றும் தொடரும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தச் பேச்சுக்களில் பங்கேற்பதற்காக இலங்கை அதிகாரிகள் குழுவொன்று இந்தியா சென்றுள்ளது.

இலங்கை கடற்றொழில் அமைச்சின் செயலாளர் மங்கலிக தலைமையிலான இந்தக் குழுவில் கடற்படை அதிகாரி ஒருவரும் இடம்பெற்றுள்ளார்.

மீனவர் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது தொடர்பாக இலங்கை

பக்கம் 20 »

## கூட்டமைப்பு ஒருங்கிணைப்புக் குழுவை ஜனவரி 6இல் கூட்டுகின்றார் சம்பந்தன்

கொழும்பு, டிசெ. 30

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சிகளின் தலைவர்களைக் கொண்ட கூட்டமைப்பு ஒருங்கிணைப்புக் குழுவின் கூட்டத்தை எதிர்வரும் ஜனவரி 6ஆம் திகதி கூட்டியிருக்கின்றார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க் கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன்

அன்றையதினம் மாலை 4.30 மணிக்கு எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் இந்தக்கூட்டம்நடைபெறும்என அங்கத்துவக்கட்சிகளின் தலைவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டிருக்கின்றது.

இந்த ஒருங்கிணைப்புக் கூட்டம் நீண்டகாலம் கூட்டப்படாத நிலையில், அதனை அவசரமாகவும், அவசியமாகவும் கூட்ட வேண்டிய நிலை எழுந்திருப்பதாகக் குறிப்பிட்டு, கூட்டத்தை உடனடியாகக் கூட்டுமாறு அங்கத்துவக் கட்சிகளுள் ஒன்றான ஈ.பி.ஆர்.எல்.எவ், சில தினங்க

பக்கம் 20 »

அளப்பு அருணாசலம்



அப்ப... போயஸ் தோட்டத்தில... நிழல் நிஜமான மாதிரித்தான்...!

## 2017இல் அரசைக் கவிழ்த்து ஆட்சியை பிடிப்பதே தம் திட்டம் என்கிறார் மஹிந்தர்



கொழும்பு, டிசெ.30

2017ஆம் ஆண்டுக்குள் தற்போதுள்ள அரசைக்கவிழ்ப்பதே தமது நோக்கம் என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இலங்கையில் பணியாற்றும் வெளிநாட்டு ஊடகங்களின் ஊடகவியலாளர்களுடன் நேற்று முன்தினம் நடத்திய சந்திப்பின்போதே மஹிந்த ராஜபக்ஷ இவ்வாறு கூறியுள்ளார்.

அங்கு அவர்மேலும்தெரிவிக்கும் போது –

"நாடாளுமன்றத்தில் அரசுக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை இருக்கின்ற போதிலும் தற்போதைய அரசியல் நிலைவரங்கள் தொடர்பில் ஆராயும் போது எதிர்காலத்தில் மாற்றத்தை ஏற்படுத்த முடியும்.

ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் சிறீலங்கா சுதந்திரக் கட்சி என்பவற்றுக்கு இடையில் தற்போது முறுகல் நிலைமை காணப்படுகின்றது. இவ்வாறான சூழலுடன் நாடொன்று முன்னோக்கிச் செல்ல முடியாது." – என்றார்.

19ஆவது அரசமைப்புத்திருத்தத்தின் பிரகாரம் இரண்டு தடவைகள் மாத்திரமே ஜனாதிபதி ஒருவருக்கு அதிகாரத்தில் இருக்க முடியும் என்ற வரையறை நிர்ணயிக்கப்பட்டுள்ளமையால்

பக்கம் 19 »

## பகல் கனவு காண்கின்றார் மஹிந்தர் என்கிறது அரசு!

அரசைக் கவிழ்ப்பது தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பகல் கனவு காண்கின்றார் என அரசு தெரிவித்துள்ளது.

ஜனநாயக அரசுக்கு இப்படியான அச்சுறுத்தல் விடுக்கப்படுவதன் மூலம் யார் சூழ்ச்சிக்காரர்கள் என்பது தெரியவரும் என்றும் அரச தொழில் முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சர் கபீர் காசிம் கூறியுள்ளார்.

மஹிந்த ராஜபக்ஷ 10 வருடங்கள் இந்த நாட்டின் ஜனாதிபதியாக ஆட்சியில் இருந்து சர்வாதி

பக்கம் 19 »

## அ.தி.மு.க. பொதுச் செயலாளராக ஜெயலலிதாவின் தோழி சசிகலா

### கட்சியின் பொதுக்குழு நேற்று தீர்மானம்

சென்னை, டிசெ.30

அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் (அ.தி.மு.க.) இடைக்காலப் பொதுச் செயலாளராக, தமிழக முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவின் தோழியான சசிகலா நடராஜன் தெரிவுசெய்யப்பட்டிருக்கின்றார்.

நாளை சனிக்கிழமை அ.தி.மு.க. தலைமை அலுவலகத்தில் இடம்பெறும் நிகழ்வில் அவர் பொதுச்செயலாளராகப்பொறுப்பேற்பார் எனத் தெரியவருகிறது.

நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற அ.தி.மு.க. பொதுக்குழு கூட்டத்திலேயே கட்சியின் பொதுச் செயலாளராக சசிகலாவை நியமனம் செய்வது என்று தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

பக்கம் 20 »

## யாழ். சிறையில் 39 இந்திய மீனவர்களும் சாகும் வரை உணவு தவிர்ப்புக்கு முஸ்தீபு!

யாழ்ப்பாணம், டிசெ.30

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கும் இந்திய மீனவர்கள் 39 பேரும் அடுத்து வரும் தினங்களில் சாகும்வரையான உண்ணாவிரதப்போராட்டத்தில் குதிப்பதற்குத் தயாராகி வருகின்றனர் என உள் வீட்டுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அடுத்து வரும் இரண்டொரு தினங்களுக்குள் தங்களை விடுவிப்பதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால் தாங்கள் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தில் குதிப்பர் என்று அந்த மீனவர்கள் சார்பில் தெரிவிக்கப்பட்டது.

இந்திய மத்திய அரசு, இலங்கை அரசு, தமிழக மாநில அரசு – ஆகிய மூன்றுமே தங்களைக் கைவிட்டுவிட்டன என்று வேதனையுடன் மனம் புழுங்குகின்றனர் இந்தக் கைதிகள்.(உ)

# கூட்டு பகலில் மைத்திரியுடன்! இரவில் மஹிந்தவுடன்!!

## அவர்களாலேயே சட்டமூலம் தோற்கடிக்கப்பட்டதாம்

கொழும்பு, டிசெ. 30

அபிவிருத்தி விசேட ஏற்பாடுகள் சட்டமூலத்தைத் தோற்கடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கும் நபர்கள் 'பகலில் மைத்திரியுடனும், இரவில் மஹிந்தவுடனும் இருப்பவர்கள் எனவும் இவர்கள் 'பகலில் மைகேல்; இரவில் டானியல்' பாத்திரத்தில் நடிப்பவர்கள் எனவும் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

'சுப்பர் பவர்' அமைச்சர்களை உருவாக்கும் தேவை ஐக்கிய தேசியக் கட்சிக்கு இல்லை. 'சுப்பர் பவர்' நாட்டை உருவாக்கும் தேவையே கட்சிக்கு உள்ளது.

அபிவிருத்தி விசேட ஏற்பாடுகள் சட்டமூலத்தை எதிர்ப்போர், பஸில் ராஜபக்ஷ, நாமல் ராஜபக்ஷ போன்றவர்கள். 'சுப்பர் பவர்' அமைச்சர்களாக வாழ்க்கை வாழ்ந்த போது எதனையும் வாய் திறந்து பேசவில்லை.

அபிவிருத்திச் சட்டமூலம் மாகாண சபைகளில் தோல்வியடைந்தாலும் அது மீண்டும் கொண்டுவரப்படும். 'சுப்பர் பவர்' அமைச்சு என்று அமைச்சுக்கள் எதுவுமில்லை. நாட்டை அபிவிருத்தி செய்யும் தேவையே ஐக்கிய தேசியக் கட்சிக்கு இருக்கின்றது.

டிலான் பெரேரா தற்போது ஊடகங்களுக்கு முன்னால் வீரராக மாறியுள்ளார். தனது தொகுதிக்குச் சென்று 12 பேரைக் கூடத் திரட்ட முடியாத அவர், அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவுக்கு வெட்டச் சென்று மூக்குடைபட்டுள்ளார்.

குளியாப்பிட்டிய வொக்ஸ் வேகன் கார் தொழிற்சாலைக்கான அடிக்கல்லை ஜனவரி 3 ஆம் திகதி பிரதமர் நாட்டி வைப்பார். இதனுடன் மேலும் சில தொழிற்சாலைகளுக்கான வேலைகளும் ஆரம்பிக்கப்படும். – என்றார்.

இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்த்தன கருத்தத் தெரிவிக்கும் போது –

சீனாவுடன் இணைந்து ஆரம்பிக்க உள்ள அம்பாந்தோட்டை கைத்தொழில் வலயத்தின் மூலம் 4 லட்சம் பேருக்குத் தொழில் வாய்ப்பு கிடைக்கும்.

'சுப்பர் பவர்' அமைச்சரின் அமைச்சுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்ய முடியாது எனக் கூறப்படும் கதையில் உண்மையில்லை. பஸில் ராஜபக்ஷவுக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையில் எந்த உடன்பாடுகளும் இல்லை. – என்றார்.

ஊடக சந்திப்பில் கருத்து வெளியிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஹெக்டர் அப்புஹாமி –

நல்லாட்சி அரசில் இருக்கும் சிலர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிராகச் சதி செய்கின்றனர்.

நாட்டில் கொண்டாடப்படும் வைபவங்களில் ஜனாதிபதியின் புகைப்படங்களைப் பயன்படுத்த ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு உரிமையில்லை என மேல் மாகாண முதலமைச்சர் இசுருதேவப்பிரிய கூறியுள்ளார்.

ஆனால் ஐக்கிய தேசியக் கட்சி தெரிவு செய்த ஜனாதிபதியின் உருவப்படத்தைப் பயன்படுத்த ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு உரிமையுள்ளது. – என்றார்.

## காணி கொள்வனவுக்கு நிதி அன்பளிப்பு

மானிப்பாய் பிரதேச வைத்திய சாலையை விஸ்தரிப்பதற்கு காணி கொள்வனவு செய்வதற்கு கொடையாளர்களிடம் இருந்து வைத்தியசாலை நோயாளர் நலன்புரிச் சங்கம் நிதி உதவியைக் கோரியுள்ளது.

இந்தக் கோரிக்கைக்கு இணங்க, லண்டனைச் சேர்ந்த ஈஸ்வரன் என்பவர் சுமார் ஐந்து லட்சம் ரூபா நிதியை அன்பளிப்பாக வழங்கியுள்ளார் என வைத்தியசாலை நோயாளர் நலன்புரிச் சங்கச் செயலாளர் இ.மனோகரன் தெரிவித்துள்ளார்.

மேலும், 2015 ஆம் ஆண்டு இறைபதமடைந்த அமரர் சிவபாலன் நாகேஸ்வரியின் ஞாபகார்த்தமாக அவரது குடும்பத்தினர் ஐம்பதாயிரம் ரூபா நிதியை அன்பளிப்பாக வழங்கியுள்ளனர் என்றும் அவர் மேலும் கூறினார். (ம-21)

## விவசாயபீட மாணவருக்கான அறிமுக வழிகாட்டல் நிகழ்வு

### ஜனவரி 5 ஆம் திகதி ஆரம்பம்

சுன்னாகம், டிசெ.30

கிளிநொச்சி அறிவியல் நகரில் அமைந்துள்ள, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் விவசாய பீடத்துக்கு 2015/2016 கல்வியாண்டுக்குத் தெரிவுசெய்யப்பட்ட புதுமுக மாணவர்களுக்கான அறிமுக வழிகாட்டல் நிகழ்வு எதிர்வரும் ஜனவரி மாதம் 5 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 10 மணிக்கு கிளிநொச்சி விவசாய பீடத்தில் ஆரம்பமாகவுள்ளது.

அனைத்து புதுமுக மாணவர்களும் அன்றைய தினம் தவறாது சமுகமளிக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

விடுதி வசதி தேவைப்படும் மாணவர்களுக்கான விடுதிகள் 4 ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு வழங்கப்படும் எனவும் பதிவாளர் அறிவித்துள்ளார். (ம-54)

## பிரபாவைப் புகழ்ந்த விஜயகலா மீது தெற்கு அரசியல்வாதிகள் பாய்ச்சல்!

### அது ஐ.தே.க வின் கருத்தா என விமல் வீரவன்ஸ கேள்வி

கொழும்பு, டிசெ.30

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனைப் போன்று உலகில் சிறந்த தலைவர் வேறெவரும் இல்லை என்று புகழ்ந்த சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரனின் கருத்து தெற்கு அரசியல்வாதிகளை சூடேற்றியுள்ளது. இதனால் அவர்கள் விஜயகலா மீது கடும் விமர்சனங்களை முன்வைத்து வருகின்றனர்.

பிரபாகரன் இன்று இருந்திருந்தால், அவர் பிரதமர் பதவிக்கோ நாடாளுமன்ற உறுப்பினர் பதவிக்கோ தகுதியானவராக இருப்பார் என விஜயகலா மகேஸ்வரன் கூறிய கருத்து அரசியல் ரீதியில் குழந்தைத்தனமான பேச்சு என நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

இது குறித்து கருத்து வெளியிட்டுள்ள அமைச்சர் தயாசிறி ஜயசேகர, விஜயகலாவின் மடத்தமான செயற்பாடுகளில் இது ஒரு பகுதி எனவும் அவர் தனது பிரபலத்தை தற்காத்து கொள்ள இப்படியான கருத்துக்களை வெளியிட்டு வருகிறார் எனவும் கூறியுள்ளார்.

இராஜாங்க அமைச்சர் விஜயகலாவின் கருத்தை பெரிதாக பொருட்படுத்த தேவையில்லை. அது முட்டாள்தனமாக கருத்து. இதனை பயன்படுத்தி இரண்டு தரப்பினருக்கு இடையில் மோதல்களை உருவாக்கிக் கொள்ளக் கூடாது என இராஜாங்க அமைச்சர் லக்ஷ்மன் செனவிரத்ன குறிப்பிட்டுள்ளார்.

பயங்கரவாதத் தலைவர் ஒருவர் இந்த நாட்டின் பதவிகளை வகிக்க முடியாது என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கவிந்த ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பிரபாகரனை நியாயப்படுத்தும் வகையில் விஜயகலா மகேஸ்வரன் வெளியிட்டுள்ள கருத்து ஐ.தே.க வின் உத்தியோகபூர்வ நிலைப்பாடா? என நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ கேள்வி எழுப்பியுள்ளார்.

இதனை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் கருத்தாகக் கருத முடியுமா எனவும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

மேலும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரிவினைவாத நிலைப்பாட்டுக்கும் அப்பாலான ஒரு பிரிவினைவாத நிலைப்பாட்டிலேயே ஐக்கிய தேசியக் கட்சி உள்ளதாகவும் விமல் வீரவன்ஸ கூறியுள்ளார்.



கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றியபோதே இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் பிரபாகரனைப் புகழ்ந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

## கட்டுவன் ஐயப்பன் ஆலய தீர்த்தோற்சவம்

வலி.வடக்கு உயர்பாதுகாப்பு வலயத்தில் இருந்து தற்போது விடுவிக்கப்பட்டுள்ள கட்டுவன் ஐயப்பன் ஆலய தீர்த் தோற்சவமும் கொடி இறக்கமும் இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணி முதல் நடைபெறும்.

மீள்குடியேற்றப் பிரதேசமாகவும் – வலி.வடக்கில் முழுமையாக விடுவிக்கப்படாத பிரதேசமாகவும் – கட்டுவன் ஐயப்பன் ஆலயப் பகுதி அமைந்துள்ளமையால் ஒரு நேர பூசை வழிபாடே இடம்பெறுகின்றது எனத் தெரிவிக்கப்பட்டது.

## மரக்கறி, மாமிசங்கள் விற்பனைக்கு வலி.வடக்கு பிரதேசசபை கட்டுப்பாடு

சுன்னாகம், டிசெ.30

வலி.வடக்கு பிரதேச சபை எல்லைக்குட்பட்ட சந்தைகளில் இருந்து ஒரு கிலோமீற்றர் தூரத்துக்குள் வர்த்தக நிலையங்கள், வீதியோரங்கள் போன்ற இடங்களில் மரக்கறி, மீன், கோழி இறைச்சி, ஆட்டிறைச்சி என்பனவற்றை விற்பனை செய்வது தடை செய்யப்பட்டுள்ளதாக வலி.வடக்கு பிரதேச சபைச் செயலாளர் இ.பகீரதன் அறிவித்துள்ளார்.

மேலும் சபையின் எல்லைக்குட்பட்ட பொது இடங்களிலும் வர்த்தக நிலையங்களுக்கு முன்பாகவும் வீதியோரங்களிலும் கழிவுப் பொருள்கள் போடுதல் தடைசெய்யப்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ம-54)

## அரசியல் கைதிகளின் பிள்ளைகளுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன

மன்னார், டிசெ.30

மன்னாரைச் சேர்ந்த, தமிழ் அரசியல் கைதிகளின் பிள்ளைகளுக்கு மன்னார் பிரஜைகள் குழு நேற்று வியாழக்கிழமை கற்றல் உபகரணங்களை வழங்கியது.

வடமாகாண சபை உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.பிரிமூஸ் சிறாய்வாவின் மாகாண சபை நிதி ஒதுக்கீட்டின் கீழ் பெற்றுக் கொள்ளப்பட்ட கற்றல் உபகரணங்களே நேற்று வழங்கப்பட்டன.

மன்னார் பிரஜைகள் குழுவின் அலுவலகத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை இ.செபமாலை, மன்னார் பிரஜைகள் குழு உறுப்பினர் அந்தோனி சகாயம், மன்னார் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் மாட்டீன் டயஸ் ஆகியோர் இணைந்து உபகரணங்களை வழங்கிவைத்தனர்.

மன்னார், வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ஆகிய 5 மாவட்டங்களைச் சேர்ந்த 40 அரசியல் கைதிகளின் பாடசாலை செல்கின்ற பிள்ளைகளுக்கே இந்த உபகரணங்கள் வழங்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

## மேல் மாகாண சபையிலும் நிராகரிக்கப்பட்டது சட்டமூலம்

கொழும்பு, டிசெ.30

அபிவிருத்தி விசேட ஏற்பாடுகள் சட்டமூலம் மேல்மாகாண சபையில் 24 மேலதிக வாக்குகளால் நிராகரிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சட்டமூலம் தொடர்பான வாக்களிப்பு மேல் மாகாண சபையில் நேற்று இடம்பெற்றது.

இதன்போது சட்டமூலத்துக்கு ஆதரவாக 28 வாக்குகளும் எதிராக 52 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஜனநாயகக் கட்சி உறுப்பினர்கள் சட்டமூலத்துக்கு ஆதரவாகவும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு மற்றும் மக்கள் விடுதலை முன்னணி உறுப்பினர்கள் சட்டமூலத்துக்கு எதிராகவும் வாக்களித்தனர்.

கிழக்கு மாகாணசபையைத் தவிர எஞ்சிய எட்டு மாகாண சபைகளிலும் இந்தச் சட்டமூலம் நிராகரிக்கப்பட்டுவிட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தச் சட்டமூலம் தொடர்பான யோசனை கடந்த 23ஆம் திகதி கிழக்கு மாகாண சபையில் முன்வைக்கப்பட்டது. எனினும் அது தொடர்பான வாக்கெடுப்பு ஜனவரி 24ஆம் திகதியே இடம்பெறவுள்ளது என கிழக்கு மாகாண சபையின் செயலாளர் தெரிவித்துள்ளார். (உ)

# பொருத்து வீடுகள் தொடர்பில் ஒற்றுமையுடன் செயற்படுங்கள்

## சமூக மட்ட அமைப்புகளிடம் சிறிதரன் எம்.பி. கோரிக்கை

முல்லைத்தீவு,டிசெ.30
பொருத்து வீட்டுத் திட்டம் தொடர்பாக விழிப்புணர்வோடும் சமூக ஒற்றுமையோடும் கூட்டாக பயணிக்கும் கடமை அனைவருக்கும் உண்டு.

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் தெரிவித்துள்ளார்.

சமூக மட்ட அமைப்புகளுக்கு இந்த விடயம் தொடர்பாக அனுப்பிய தெளிவூட்டல் கடிதத்தில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

பொருத்து வீட்டுத்திட்டம் எமது தமிழ் கலாசார விழுமியங்களுக்கும் எங்களுடைய காலநிலைகளுக்கும் உகந்ததல்ல. சமையலறை அற்றது. இரும்புச் சட்டங்களுக்கு நடுவே றெஜிபோம் சுவர்கள்.

இவ்வாறான வீடுகளைப் பெறுவது தொடர்பில் சற்றுச் சிந்தியுங்கள். யுத்தத்தால் பாதிக்கப்பட்ட எமது மக்களிடம் இந்த 21 லட்சம் ரூபா பணத்தை வழங்கி அவர்களே தங்களது வீடுகளை அமைக்கவும் பொருள்களைக் கொள்வனவு செய்யவும் உள்ள உரிமை பறிக்கப்பட்டுள்ளது.

3 லட்சத்து 25 ஆயிரம் ரூபாவுக்கும், 5 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவுக்கும் 8 லட்சம் ரூபாவுக்கும் அழகான வீடுகளை அமைத்த எமது மக்களிடம் 21 லட்சம் ரூபாவை வழங்க மறுத்து தற்காலிக பொருத்து வீடுகளை வழங்குவதன் நோக்கம் என்ன?

இது பற்றித் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள், வடக்கு மாகாண சபை முதல்வர், வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள், ஜே.வி.பி., சகவாழ்வுத் துறை அமைச்சர் மனோ கணேசன் உட்பட அனைவரும் பொருத்து வீட்டுத்திட்டத்துக்கு எதிராக பலமாக குரல் எழுப்பினோம்.

இலங்கைத்தீவின் முற்போக்கு அரசியல் சமூக இயக்கங்களும் கிளிநொச்சி மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியமும் புத்திஜீவிகளும் இந்தத் திட்டத்தை எதிர்த்து நாட்டின் ஜனாதிபதி, பிரதமர் ஆகியோருக்கு மகஜர்கள் அனுப்பியிருந்தனர்.

எனவே,பொது அமைப்புக்களின், சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள், கிராம மட்ட அமைப்புக்களைச் சார்ந்த பிரதிநிதிகள் இந்த விடயங்களைக் கவனத்தில் எடுத்து மக்கள் மயப்படுத்தி மக்கள் தெளிவான தீர்மானம் எடுப்பதற்கு ஒன்றிணைந்து பணியாற்றுமாறு உங்கள் அனைவரையும் உரிமையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.- என்றுள்ளது.

(ஐ-70-81)



## இளங்கலைஞர் மன்ற கலையரங்கு நாளை

யாழ்ப்பாணம், டிசெ.30
யாழ்.இளங்கலைஞர் மன்றம் நடத்தும் மாதாந்தக் கலையரங்கு, நாளை சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு நல்லூர் சட்டநாதர் வீதியில் அமைந்துள்ள இளங்கலைஞர் மன்றக் கலா மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்தநிகழ்வுக்குசிறப்பு விருந்தினராக மிருதங்க வித்துவான் கலாபூஷணம் எஸ்.வரதராஜ சர்மா கலந்து கொள்ளவுள்ளார்.

மாலை 5 மணிக்கு கே. மதுஷிகன்,சி.நிதர்சன் ஆகியோரின் பாட்டுக்கு வயலின் அ.ஜெயராமன், மிருதங்கம் நா.வசந்.

தொடர்ந்து 6 மணிக்கு பாட்டு ப. சிவமைந்தன், வயலின் அ.ஜெயராமன், மிருதங்கம் நா.வசந், முகர்சிங் என். சதீஸ்குமார்.

ஆர்வலர்களை இதில் கலந்து கொள்ளுமாறு மன்ற நிர்வாகத்தினர் கேட்டுக்கொண்டுள்ளனர். (இ)

## யாழ். பல்கலையில் தொல்லியல் கண்காட்சி





யாழ்ப்பாணம், டிசெ.30
யாழ். பல்கலைக் கழக தொல்லியல் துறை மாணவர்களின் ஏற்பாட்டில் தொல்லியல் கண்காட்சி யாழ். பல்கலைக் கழகத்தில் நேற்றுக் காலை 9.30 மணியளவில் தொல்லியல்துறை மாணவன் பொ.வருண்ராஜ் தலைமையில் நடைபெற்றது.

கடந்த 6 மாத காலமாக மன்னார் கட்டுக்கரை பகுதியில், யாழ். பல்கலைக் கழக தொல்லியல்துறை மாணவர்களால் மேற்கொள்ளப்பட்டஅகழ்வாராய்ச்சியின்போது கண்டு பிடிக்கப்பட்ட வரலாற்றுச் சுவடுகள் இந்த நிகழ்வில் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன.

இதேவேளை, அகழ்வாராய்ச்சி தொடர்பான 'தேடல்' சஞ்சிகையின் இரண்டாம் பாகம், அகழ்வாராய்ச்சியின் தொன்மையை உணர்த்தும் நாட்காட்டி என்பன யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணத்தால் நேற்று வெளியிட்டு வைக்கப்பட்டன.

பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம், கௌரவ விருந்தினர்களாக யாழ். பல்கலைக்கழக கலைப்பீட பதில் பீடாதிபதி கலாநிதி க.சுதாகர், யாழ். பல்கலைக் கழக வரலாற்றுத்துறை பேராசிரியர் செ.கிருஷ்ணராஜா யாழ். பல்கலைக்கழக தொல்லியல் இணைப்பாளரும் சிரேஷ்ட விரிவுரையாளருமான ப.புஷ்பரட்ணம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

(ஐ-10)

## தமிழர்களின் வரலாறுகளை திட்டமிட்டு அரசு அழிக்கிறது

### முல்லை. இந்து மாமன்ற அங்குரார்ப்பணத்தில் சாந்தி எம்.பி. தெரிவிப்பு

முல்லைத்தீவு, டிசெ.30
தமிழர்களின் வரலாறுகளை அரசு திட்டமிட்டு அழிக்கின்றது.

தமிழ் மக்களின் வரலாறுகளை அழிக்கும் வகையில் வடக்கு-கிழக்கில் புத்தர் சிலைகள் மற்றும் விகாரைகள் அமைக்கப்படுவதற்கு எதிராக மைத்திரி, ரணில் நல்லாட்சி அரசு எந்தவொரு நடவடிக்கையும் மேற்கொள்ளாது உள்ளமை கவலையளிக்கிறது.

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறிஸ்கந்தராசா குறிப்பிட்டார்.


முல்லைத்தீவு மாவட்ட இந்து மாமன்ற அங்குரார்ப்பண நிகழ்வு நேற்றுக் காலை முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறிஸ் கந்தராசா, மாவட்ட கலாசார உத்தியோகத்தர் மற்றும் கரைதுறைப்பற்று, ஒட்டுசுட்டான், புதுக்குடியிருப்பு,மாந்தை கிழக்கு, துணுக்காய் ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளைச் சேர்ந்த இந்து மாமன்ற உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறிஸ்கந்தராசா இவ்வாறு தெரிவித்தார். சோழர் காலத்தில் எவ்வாறு தென் இந்தியாவில் அறநெறி வளர்க்கப்பட்டதோ அதேபோன்று வடக்கு - கிழக்கிலும் அறநெறி வளர்க்கப்பட வேண்டும் என்று மேலும் தெரிவித்தார். (ஐ-81)





## கணினிக் கல்வியை மேம்படுத்தத் திட்டம்

வரணி நாவற்காடு மாணவர்களின் கணினிக் கல்வியை மேம்படுத்தும் விதமாக கணினி நிலையம் அமைப்பதற்குத் தேவையான கணினிகளை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வடமாகாண சபை உறுப்பினர் சி.அகிலதாஸ் வழங்கியுள்ளார்.

இந்தக் கணினிகள் கையளிப்பு நிகழ்வு நேற்று வரணி நாவற்காடு கிராம அபிவிருத்திச் சங்கக் கட்டடத்தில் சங்கத்தின் தலைவர் கு.சபேசன் தலைமையில் இடம்பெற்றது.

இதன் போது மாணவர்களுக்குக் கணினிகளை வழங்கி, மரக்கன்றுகளையும் நட்டு வைத்தார்.

இதன்போது அடுத்த ஆண்டு நிதி ஒதுக்கீட்டில் இரண்டு லட்சம் ரூபா ஒதுக்குவதாகவும் உறுதியளித்துள்ளார். (ஐ-23)





# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, editor@kalaikkathir.lk
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## ஒட்டு அரசின் வெற்று முயற்சி

ரணிலின் நல்லாட்சி அரசினால் பிரேரிக்கப்பட்ட அபிவிருத்தி (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலத்தை வரிசையாக ஏழு மாகாண சபைகள் நிராகரித்து விட்டன. எஞ்சிய இரு மாகாணசபைகளும் இனித்தான் இந்தச் சட்ட மூலத்தைப் பரிசீலனைக்கு எடுக்கப் போகின்றன. அவையும் இதனை அங்கீகரிக்குமா அல்லது நிராகரிக்குமா என்பதை பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

வடமேல் மாகாணசபை, தென்மாகாணசபை, சப்ரகமுவ மாகாணசபை, ஊவா மாகாணசபை, வடக்கு மாகாணசபை, மத்திய மாகாணசபை, வடமத்திய மாகாணசபை ஆகிய ஏழுமே இந்தச் சட்டமூலத்தை நிராகரித்திருக்கின்றன.

இந்தச் சட்டமூலத்தை ஏன் அவை அனைத்தும் ஒட்டுமொத்தமாக நிராகரித்தன? வழமையான மற்ற சட்டமூலங்களை நாடாளுமன்றம் தன்பாட்டில் நிறைவேற்றும்போது இந்தச் சட்டமூலத்தை மட்டும் அரசு மாகாணசபைகளுக்கு அதனை அனுப்பி அங்கீகரிக்கக் கோருவது ஏன்?

மாகாண சபைகளுக்கு எனப் பிரத்தியேகமாக குறித்தொதுக்கிய விடயங்களில் மத்திய அரசு தலையீடு செய்யக் கூடியதான சட்டமூலம் எதையும் மத்திய அரசு தயாரிக்குமாயின், அதை நிறைவேற்ற முன்னர் அனைத்து மாகாணசபைகளிடமும் மத்திய அரசு அதுக்கான ஒப்புதலை பெற வேண்டும் என அரசமைப்பு வற்புறுத்துகின்றது. அத்தகைய சட்ட மூலத்தை ஏதேனும் ஒரு மாகாண சபை நிராகரிக்குமாயின் அந்தச் சட்டமூலத்தை நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையுடனும், சர்வஜன வாக்கெடுப்பு ஒன்று மூலம் மக்கள் அனுமதியுடனும்தான் அதற்குப் பின்னர் நிறைவேற்றமுடியும்.

மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் - 2012 ஆம் ஆண்டில்- இதேபோல 'திவிநெகும' என்ற சட்டமூலத்தை அப்போதைய அரசு கொண்டு வந்தது. மாகாணசபைகளுக்கு இருக்கும் பல அதிகாரங்களை அப்போது பொருளாதார அபிவிருத்தி அமைச்சராக இருந்த பஸில் ராஜபக்ஷவுக்கு வழங்குவதற்கு வகை செய்யும் சட்டமாக அது இருந்தது.

ஆனால், அப்போது கிழக்கு மாகாண சபை (முதலமைச்சராக பிள்ளையான் இருந்த காலத்தில்) உட்பட எட்டு மாகாணசபைகளும் ஆளும் தரப்பின் வசம் இருந்ததால் அந்தச் சட்டமூலத்துக்கு அந்த எட்டு மாகாணசபைகளும் ஒட்டுமொத்தமாக ஆதரவளித்தன. வடக்கு மாகாணசபைக்கு தேர்தல் நடைபெறாததால் அப்போது வடக்கு மாகாணசபை இயங்கவில்லை. அதற்குப் பதிலாக வடக்கு மாகாணசபையின் ஆளுநர் ஜெனரல் சந்திரசிறியின் இணக்கத்தை எழுத்தில் பெற்று, அதனை மாகாணசபையின் கருத்தாகக் காட்டி, ஒன்பது மாகாணங்களிலும் அந்தச் சட்டமூலத்துக்கு ஆதரவும், அனுமதியும் கிட்டியிருந்ததாகத் தெரிவித்து. அரசு சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில் நிறைவேற்ற முனைந்தது.

அதனை எதிர்த்து, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நீதிமன்றத்துக்கு சென்றது. ஜனாதிபதியினால் அவரது விருப்புக்கு ஏற்ப நியமிக்கப்பட்ட ஆளுநரின் சிபார்சை ஒட்டுமொத்த வடக்கு மாகாண மக்களினதோ, வடக்கு மாகாணசபையினதோ கருத்தாக கொள்ள இயலாது என உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்தது. அந்தத் தீர்ப்பை துணிச்சலாக வழங்கியமைக்காகத்தான் அப்போதைய பிரதம நீதியரசர் திருமதி ஷிராணி பண்டாரநாயக்க, மஹிந்த அரசினால் சட்டமுறையற்ற விதத்தில் அப்பதவியிலிருந்து துரத்தப்பட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இப்போது கொண்டு வரப்பட்டுள்ள அபிவிருத்தி விசேட சட்டமூலமும், அத்தகையதே. 1970 களின் கடைசியில் துரித மகாவலி அபிவிருத்தி என்ற பெயரில் ஜெயவர்த்தனா அரசினால் முன்னெடுக்கப்பட்ட பல நடவடிக்கைகள் போல, தற்போதைய அரசும் பல்வேறு துறைகளில் துரித அபிவிருத்தியை விரைந்து முன்னெடுப்பதற்காவே இந்தச் சட்டமூலம் கொண்டு வரப்படுவதாக நல்லாட்சி அரசின் சார்பில் கூறப்பட்டது.

இந்தச் சட்டமூலம் தேசிய கொள்கைகள், பொருளாதார விவகார அமைச்சர் என்ற முறையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு கட்டுமட்டில்லாத அதிகாரங்களை வழங்க வகை செய்கின்றது என்றும் -

புதிதாக ஒருவர் மகா அமைச்சராக ('சூப்பர் மினிஸ்டர்' ஆக) உருவெடுக்க இந்தச் சட்டமூலம் வழி வகுக்கின்றது என்றும் -

எதிர்க்கட்சிகள் ஆரம்பத்தில் இருந்தே கூப்பாடு போடத் தொடங்கிவிட்டன. பிறகென்ன....? ஒட்டுப் போட்ட கூட்டணியான நல்லாட்சி அரசின் தரப்புக்கள் கன்னை பிரித்து நின்றன.

இந்தச் சட்டமூலம் மாகாணசபைகளின் பரிசீலனைக்கு வந்தபோது பிரதமர் ரணிலின் ஐ.தே.கட்சி உறுப்பினர்கள் மட்டுமே அதனை ஆதரித்தனர். நல்லாட்சி அரசில் அங்கம் வகிக்கும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் பெரும்பாலானோர் கூட்டு எதிரணியுடன் சேர்ந்து நல்லாட்சி அரசின் சட்டமூலத்துக்கு ஆப்பு வைத்து காலை வாரிவிட்டனர்.

புதிய அரசமைப்பு என்ற பெரும் அரசியல் விஷப் பரீட்சைக்குள் இறங்கவிருக்கும் 'நல்லாட்சி' அரசுக்கு அதற்குக் கீழ் மட்டத்தில் - மக்கள் மட்டத்தில் - இருக்கும் ஆதரவுத் தரத்தை பரிசீலிப்பதற்கான 'அமிலச் சோதனையாகவும்' மாகாணசபைகளின் இந்தத் தீர்ப்பு அமைந்திருக்கின்றது.

ஒட்டுப் போட்ட இந்தக் கூட்டணி அரசை வைத்துக் கொண்டு, ஜனாதிபதி மைத்திரிபாலவும் பிரதமர் ரணிலும் என்ன செய்யப் போகின்றார்கள் - வெறுமனே ஆட்சியை இழுத்தடிப்பதைத் தவிர? காலம்தான் பதில் கூறவேண்டும்.

# பால்மாக்களின் விலையை அதிகரிக்க அனுமதியில்லை

## நுகர்வோர் அதிகார சபை தீர்மானம்

கொழும்பு, டிசெ.30

இறக்குமதி செய்யப் படும் பால்மாக்களின் விலையை அதிகரிக்க அனுமதி வழங்குவ தில்லை என்று நுகர்வோர் விவகார அதிகார சபை தீர் மானித்துள்ளது.

முக்கியமான பால்மா நிறுவனங்கள் சில இறக்குமதி செய்யும் பால்மாக்களுக்கான வில்லையை அதிகரிக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளன.

இதற்கமைய ஒரு கிலோ கிராம் பால்மாவுக்கு 100 தொடக்கம் 117 ரூபாவும், 400 கிராம் பால்மாவுக்கு 40 தொடக்கம் 46 ரூபாவும் விலையை அதிகரிக்கு மாறு அந்த நிறுவனங்கள் கோரியுள்ளன என்று நுகர்வோர் விவகார அதிகார சபை சுட்டிக் காட்டியுள்ளது.

எது எவ்வாறு இருப்பினும், பால்மாக்களுக்கான இந்த விலை அதிகரிப்பு அவசியம் இல்லை என்று அதிகார சபை கருதுவதாகவும் தெரியவந்துள்ளது.

இதற்கமைய இறக்குமதி செய்யப்படும் பால்மாக்களுக்கான விலையை அதிகரிக்க ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லை என்றும் நுகர்வோர் விவகார அதிகார சபையின் தலைவர் ஹசித திலகரத்ன சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோ பால்மாவுக்கு 810 ரூபாவும் 400 கிராம் பால்மாவுக்கு 325 ரூபாவும் உயர்ந்தபட்ச கட்டுப்பாட்டு விலையாக விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ)

# பண்டிகைக் காலத்தில் நுகர்வோர் நலன்கருதி பல்வேறு நடவடிக்கை

## நுகர்வோர் சேவை அதிகார சபை ஏற்பாடு

கொழும்பு, டிசெ.30

பண்டிகைக் காலப்பகுதியில் நுகர்வோர் நலன் கருதி பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக நுகர்வோர் சேவை அதிகார சபையின் தலைவர் ஹசித திலகரத்ன தெரிவித்துள்ளார்.

நுகர்வோர் நலன்கருதி முற்றுகைகளை மேற்கொள்வதற்கு நுகர்வோர் சேவை அதிகார சபை நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

''இந்த மாதத்தில் இது வரையில் 12 ஆயிரத்து 84 முற்றுகை கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இவ்வாறு குறிப்பிட்ட வர்த்தகர்களுக்கு எதிராக வழக்குத் தொடர்வதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நுகர்வோரை தவறாக வழிநடத்தியமை, காலாவதியான பொருள்களை விற்பனை செய்தமை, உணவுப் பொருள்களில் சேர்க்கப்படாத இரசாயனங்களைப் பயன்படுத்தியமை ஆகிய தவறுகளுக்காக இந்த வர்த்தகர்களுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.''-என்றார். (எ)

## வாகன விபத்துகளால் உயிரிழந்தோர் இவ்வருடம் 2,900 பேர்

கொழும்பு, டிசெ.30

வாகன விபத்துக்களில் இந்த வருடத்தில் 2 ஆயிரத்து 900 பேர் பலியாகியுள்ளனர் என்று சுகாதார அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:

''இந்த வருடத்தின் டிசெம்பர் மாதம் 25 ஆம் திகதி வரையில் 41 ஆயிரம் பேர் வாகன விபத்துக்களில் சிக்கியுள்ளனர்.

''இதேவேளை 2015 ஆம் ஆண்டில் வாகன விபத்துக்களால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 2 ஆயிரத்து 816 பேர் என்று சுகாதார அமைச்சுக்குத் தகவல் கிடைத்திருந்தது. மோட்டார் சைக்கிள்களில் பயணிப்போரே அதிகளவில் விபத்துக்குள் ளாகின்றனர்.''-என்றார். (எ)

# அன்பளிப்புப் பொருள்கள் பெறுவதை பண்டிகைக் காலத்தில் தவிர்க்கவும்!

## லஞ்ச ஆணைக்குழு அரச அதிகாரிகளுக்கு அறிவுறுத்து

கொழும்பு, டிசெ.30

பண்டிகைக் காலத்தில் அரச அதிகாரிகள் அன்பளிப்புப் பொருள்கள் பெறுவதைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும் என்று லஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக் குழு தெரிவித்துள்ளது.

இது தொடர்பான அறிவிப்பு ஒன்றை, அந்த ஆணைக்குழு, பொது நிர்வாக அமைச்சகத்தின் செயலாளருக்கு அனுப்பி வைத்துள்ளது.

பண்டிகைக் காலங்களில் வியாபார நிறுவனங்கள் அரச அதிகாரிகளைக் கவருவதற்காக அன்பளிப்புப் பொருள்களை வழக்கமாக வழங்கி வருகின்றன.

இதன் காரணமாக பொது மக்கள் மத்தியில் அரச அதிகாரிகள் தொடர்பான தவறான எண்ணங்கள் ஏற்பட வாய்ப்புக்கள் உள்ளன என்று அந்த ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இந்தச் செயற்பாடுகள் ஊழல் மோசடிகளுக்கும் வழி வகுக்கும் என்று தெரிவித்துள்ள அந்த ஆணைக்குழு, அன்பளிப்புக்களைப் பெற்றுக் கொள்வதைத் தவிர்த்துக் கொள்ளுமாறு அரச அதிகாரிகளிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இதுகுறித்து கருத்துத் தெரிவித்த ஊழல்களுக்கு எதிராகச் செயற்பட்டு வரும் 'டிரான்ஸ்பரன்ஸி இண்டர் நேஷனல்' இலங்கை கிளையின் தலைவர் வழக்கறிஞர் லக்ஷான் டயஸ், ஊழல் விசாரணை ஆணைக்குழு எடுத்துள்ள இந்தத் தீர்மானத்தை வரவேற்பதாகக் கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

''விசேடமாக சுங்கம், வங்கி மற்றும் அரச துறையில் பணியாற்றும் உயர் அதிகாரிகளுக்கு பண்டிகைக் காலத்தில் வர்த்தக நிறுவனங்களின் மூலம் இலட்சக்கணக்கான அன்பளிப்புப் பொருள்கள் வழங்கப்படுகின்றன. சட்ட விரோதமான உதவிகளைப் பெற்றுக் கொள்வதற்காகவே அவர்கள் இதனை வழங்குகின்றனர். எனவே இது லஞ்சம். இவ்வாறு அன்பளிப்புப் பொருள்களை பெற்றுக் கொள்ளும் அரச அதிகாரிகளை அடையாளம் கண்டு அவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்க ஊழல் விசாரணை ஆணைக்குழு நடவடிக்கை எடுக்க வேண்டும்.''-என்றார். (எ)


### நாளை

31.12.2016
சனிக்கிழமை
திதி : துதியை பிற்பகல் 3.06 வரை
நட்சத்திரம்: உத்தராடம் பின்னிரவு 3.16 வரை
சுபநேரம் : 3.29 – 4.59
இராகுகாலம் : 9.29 – 10.59

காலைக்கதிர்
Kalaikkathir



## நாளை நிறைவு பெறவுள்ள பொம்மைகள் நாடகவிழா



யாழ்ப்பாணம், டிசெ.30

செயல் திறன் அரங்க இயக்கம் சிறுவர்களுக்காக ஒழுங்கு செய்து நடத்தும் பொம்மைகள் நாடகவிழா உண்மையில் தேவையான ஒன்றுதான்.

இன்றைய சூழலில் பெற்றோர், பிள்ளைகளின் மனநிலை தொடர்பாக சிந்திக்கத் தவறுகின்றனர் என்பது உண்மைதான். அது காலத்தால் கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது. இந்த அவசர யுகத்தில் சிந்தித்தல் என்பதற்கு பெற்றோருக்கு நேரம் போதாதுள்ளது.

இது ஒரு புறம் இருக்க, இந்தப் பொம்மைகள் நாடக விழாவைக் கண்டு களிக்க அங்கு வருகைதரும் ஒவ்வொரு குழந்தையும் மிகவும் உற்சாகத்துடன் உற்று நோக்குகின்றன. தம்மை மறந்து அந்தப் பொம்மைகளுடன் தாமும் இணைந்து - ஒன்றி மகிழ்வடைகின்றன.

பொம்மைகள் மேடையில் ஆடும் போது, பார்வையாளர்களான சிறார்களும் தாமும் பொம்மைகள் போல் ஆட முற்படுகின்றனர்; ஏன் ஆடவும் செய்கின்றனர்.

இவ்வாறான நிகழ்வுகள் வரவேற்கத்தக்கது என்பதே அங்கு வந்திருந்த பலரது கருத்தாக இருந்தது.

பிள்ளைகளின் மனநிலையில் ஒரு பூரிப்பு, உற்சாகம் காணப்பட்டதை அங்கு அவதானிக்க முடிந்தது.

உண்மையில் சொல்லப் போனால் இந்தப் பொம்மை நாடகங்கள் சிறார்களுக்கு மட்டும் உரியன அல்ல. பெரியவர்களும் பார்த்து நிறையக் கற்றுக் கொள்ளும் வகையில் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன.

சிறார்களுக்கு உரியன தானே என்று எண்ணி இதனைப் பார்வையிடாது எத்தனையோ பேர் தவறவிட்டிருப்பர். இந்தப் பொம்மைகளையும் அவை சொல்லும் கருத்துக்களையும் ஒவ்வொருவரும் நிச்சயம் பார்க்கவேண்டும்; கேட்கவேண்டும்.

நல்லூர் குறுக்கு வீதியில் அமைந்துள்ள செயல் திறன் அரங்க இயக்கத்தின் வளாகத்தில் இந்த நிகழ்வு நடைபெற்று வருகிறது. நாளை சனிக்கிழமையுடன் இந்த நிகழ்வு நிறைவடையவுள்ளது. மாலை 6.30 மணி தொடக்கம் 8.30 மணிவரை இந்த நிகழ்வு ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. (ஐ)

## பன்றித்தலைச்சி அம்மன் உற்சவம் திங்களன்று கொடி

மட்டுவில் பன்றித் தலைச்சி கண்ணகை அம்மன் தேவஸ்தான வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் 2 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் ஆலய பிரதமகுரு ஸ்ரீராம் தேவலோகேஸ்வரக் குருக்கள் தலைமையில் நடைபெறும்.

மகோற்சவத்தின் தேர்த்திருவிழா 10 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கும், தீர்த்தத் திருவிழா மறுநாள் புதன் கிழமை முற்பகல் 10 மணிக்கும் இடம்பெறும். (இ-22)



இலங்கையின் தலைசிறந்த வரலாற்றுப் பேராசிரியர்களில் ஒருவரான பேராசிரியர் சி.பத்மநாதன் பேராதனைப் பல்கலைக்கழக வரலாற்றுத்துறையால் அண்மையில் கலைப்பீட கருத்தரங்கு மண்டபத்தில் வரலாற்றுத்துறை தலைவர் தலைமையில் கௌரவிக்கப்பட்டார். பேராசிரியரின் சேவையைப் பாராட்டி Essays on history culture and foreign relations எனும் நூலும் வெளியிட்டு வைக்கப்பட்டது. நிகழ்வில் பேராதனைப் பல்கலைக்கழக துணைவேந்தர், கலைப்பீடாதிபதி, துறைத் தலைவர்கள், பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் மற்றும் மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். பேராசிரியர் சி.பத்மநாதன் தகைமைசார் பேராசிரியர் என்பதுடன் தற்பொழுது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வேந்தராகவும் கடமையாற்றுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ-21)

### யாழ்.மாநகர சபைக்குட்பட்ட பகுதிகளில்

# திண்மக் கழிவுகள் அகற்றும் விடயத்தில் ஜன.01 முதல் இறுக்கமான நடவடிக்கை

## ஆணையாளர் வாகீசன் அறிவிப்பு



யாழ்ப்பாணம், டிசெ.30

யாழ். மாநகர சபைப் பகுதியில் திண்மக் கழிவுகளை அகற்றும் நடவடிக்கைக்கு பொதுமக்கள் முழு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். எதிர்வரும் முதலாம் திகதியில் இருந்து யாழ். மாநகர சபையின் நடவடிக்கை இது விடயத்தில் இறுக்கமாகப் பின்பற்றப்படும்.

திண்மக் கழிவுகள் அகற்றும் எமது நடவடிக்கைக்கு வரியிறுப்பாளர்கள் அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். யாழ். நகரப் பகுதியில் வர்த்தக நிலையங்களைச் சேர்ந்தவர்களும் இந்தச் செயற்பாட்டுக்கு ஒத்துழைப்பு தருவார்கள் என வர்த்தகர் சங்கம் உறுதியளித்துள்ளது. - இவ்வாறு யாழ். மாநகர சபை ஆணையாளர் பொன்னம்பலம் வாகீசன் நேற்றுத் தெரிவித்தார்.

ஊடகவியலாளர்களுடனான நேற்றைய சந்திப்பில் ஆணையாளர் மேலும் கூறியவை வருமாறு :-

மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சின் தேசிய முன்னெடுப்பாக நாட்டிலுள்ள சகல மாநகர சபைகள் இருக்கின்ற இடத்தில் திண்மக் கழிவுகளைத் தரம்பிரித்து அகற்றுகின்ற செயற்திட்டம் கடந்த நவம்பர் மாதம் முதலாம் திகதி ஆரம்பிக்கப்பட்டது.

அந்தவகையில் 23 மாநகர சபைகளில் ஒன்றான யாழ். மாநகர சபையினராகிய நாமும் திண்மக் கழிவுகளைத் தரம் பிரிக்கும் செயற்பாட்டினை பாசையூர், அரியாலை, நாவாந்துறை, நல்லூர், யாழ். நகரப்பகுதி, வண்ணார்பண்ணை, குருநகர் போன்ற ஏழு வலயங்களில் இந்தச் செயற்றிட்டத்தை ஆரம்பித்திருந்தோம்.

### விழிப்புணர்வை ஏற்படுத்துவோம்

அந்த நிகழ்ச்சித் திட்டங்கள் மக்களை விழிப்புணர்வு செய்வதற்காக அமைந்திருந்தன. இதன் போது அதிகமான மக்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டு ஒத்துழைப்பு வழங்கினர். அத்துடன் திண்மக் கழிவுகளைத் தரம்பிரித்தல் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வுகளை யாழ். நகரப் பகுதியில் அமைந்துள்ள ஏழு பாடசாலைகளில் நடத்தியிருந்தோம். எதிர்வரும் 2017 ஜனவரி மாதம் முதலாம் திகதியிலிருந்து இந்த விழிப்புணர்வு செயற்பாட்டை அனைத்து இடங்களிலும் நடைமுறைப்படுத்த முடிவு எடுத்துள்ளோம்.

இந்த திண்மக் கழிவுகள் செயற்திட்டத்திலே வீதிகளில் கலப்பு திண்மக் கழிவுகளைக் கொட்டுபவர்களுக்கு எதிராக ஆயிரம் ரூபா தண்டப் பணம் அறிவிடப்படுகின்றது. இச் செயற்பாட்டிற்கு பொலிஸாரும் ஒத்துழைப்பு வழங்கியுள்ளனர்.

யாழ். நகரப்பகுதியில் ஒரு நாளைக்கு உருவாகின்ற திண்மக் கழிவு 106 தொன்களாகக் காணப்படுகின்றன. அந்த வகையில் யாழ்ப்பாணம் மாநகர சபையினால் 106 தொன்கள் திண்மக் கழிவுகளில் 82 தொன் திண்மக் கழிவுகள் சேகரிக்கப்படுகின்றன. அதில் 71 தொன்கள் குப்பைகள் பிரித்து அழியக் கூடியனவாகவும் உக்கக் கூடியனவாகவும் உள்ளன. மீதி 11 தொன்கள் மீள் சுழற்சிக்கு உட்படுத்தக் கூடியதும் அபாயகரமான இலத்திரனியல் பொருள்கள் சேர்ந்தவை.

### காக்கைதீவில் சேதன பசளை உற்பத்தி

உக்கக் கூடிய பிரித்து அழியக் கூடிய திண்மக் கழிவுகளை நாம் காக்கை தீவில் உள்ள மீள் சுழற்சி நிலையத்துக்கு அனுப்பி வைக்கின்றோம். அங்கு வீரியம் என்று சொல்லப்படுகின்ற சேதனப் பசளை உற்பத்தி நடைபெற்று வருகின்றது. இது வரைக்கும் மொத்தமாக 8ஆயிரம் கிலோ கிராம் பசளை உற்பத்தி பெறப்பட்டுள்ளது. அவற்றை மக்களுக்கு விற்பனை செய்துள்ளோம். இங்கு பிளாஸ்ரிக் பொலித்தீன் பொருள்களை மீள் சுழற்சிக்குஉட்படுத்தி அவற்றை தனியாருக்கு விற்பனை செய்துள்ளோம். அத்துடன் 6ஆயிரத்து 100 தொன் இலத்திரனியல் கழிவுகளையும் தரம் பிரித்துள்ளோம். - என்றார். (இ-10)

## ஐயப்பன் பஜனை பெருவிழா நாளை

யாழ்.வண்ணை கன்னாதிட்டி காளி அம்பாள் தேவஸ்தான மணி மண்டபத்தில் ஸ்ரீ அரிஹரசுதன் ஐயன் ஐயப்ப சுவாமியின் மகரஜோதி மண்டல விரத சக்தி பூஜை பெருவிழா நாளை சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இப் பூஜை காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகி ஐயப்பன் பஜனை, கணபதி ஹோமம் விசேட பூஜைகள், படி பூஜையைத் தொடர்ந்து கருப்பன் பூஜை நடைபெறவுள்ளது. மதியம் அன்னதானமும் இடம்பெறும். (இ)



இணுவில், மருதனார்மடம் ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் ஆலயத் தேர்த்திருவிழா நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்றது. பெருந்திரளான அடியார்கள் ஆஞ்சநேயர் பெருமானை வழிபட்டு அருள் பெற்றனர். (இ-54)

## பணியாளர் கௌரவிப்பு நாளை சாவகச்சேரி வைத்தியசாலையில்

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் கடமையாற்றி ஓய்வுபெற்ற மற்றும் இடமாற்றம் பெற்றுச் சென்ற அலுவலர்கள் மற்றும் பணியாளர்களைக் கௌரவிக்கும் நிகழ்வும் ஆண்டிறுதி ஒன்று கூடலும் நாளை சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு வைத்திய சாலை கேட்போர் கூடத்தில் இடம்பெறும்.

வைத்தியசாலை ஊழியர் நலன்புரி சங்கத் தலைவர் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு விருந்தினர்களாக யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் க.நந்தகுமார் மற்றும் சுகாதாரத் திணைக்கள அலுவலர்கள் கலந்து கொள்வர். (இ)

# மதுபானசாலைகளை அகற்ற கோரி நேற்று மண்முனைப்பற்று மக்கள் ஆர்ப்பாட்டம்

## பிரதேச செயலகத்துக்கு முன்னால் ஒன்று கூடி கோஷம்



மண்முனைப்பற்று,டிசெ.30

மட்டக்களப்பு மாவட்டத்தில் தற்பொழுது 57 மதுபான சாலைகள் இருக்கின்றன. புதிதாக 13 மதுபானசாலைகள் விஸ்தரிக்கப்பட உள்ளன. குறிப்பாக மண்முனைப்பற்றில் மாத்திரம் 7 மதுபான சாலைகள் உள்ளன. குடியிருப்புப்பகுதிகள், கோவில்கள் மற்றும் பாடசாலைகளுக்கு அருகில் மதுபானசாலைகள் காணப்படுகின்றன. இதனால் இங்குள்ள மக்கள் பல அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர். இங்குள்ள மதுபான சாலைகளை அகற்றுவதற்கான நடவடிக்கையை உரிய அதிகாரிகள் எடுக்காது போனால் தொடர்ச்சியான போராட்டங்களை முன்னெடுப்போம்.

-இவ்வாறு வலியுறுத்தி மண்முனைப்பற்று பிரதேச மக்கள் நேற்று வியாழக்கிழமை மண்முனைப்பற்று பிரதேச செயலகத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டம் ஒன்றில் ஈடுபட்டனர்.

மட்டக்களப்பு மாவட்ட அரச சார்பற்ற அமைப்புகளின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நடத்தப்பட்ட இந்த ஆர்ப்பாட்டத்தில் மண்முனைப் பற்றுப் பிரதேச வாழ் மக்கள் பலரும் கலந்து கொண்டனர்.

இதேவேளை இந்த ஆர்ப்பாட்டத்தில் 'சீரழிக்காதே சீரழிக்காதே மதுவால் சமூகத்தைச் சீரழிக்காதே', 'வைக்காதே வைக்காதே மதுபான சாலைகளை குடியிருப்புகளுக்கு அருகில் வைக்காதே', 'ரத்துச் செய் ரத்துச் செய் வெளிமாவட்ட உரிமத்தை ரத்துச் செய்' போன்ற பதாகைகள் ஏந்தப்பட்டிருந்தன.

இந்த ஆர்ப்பாட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாகாணசபை உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். இந்த மதுபானசாலைகளை 14 நாள்களில் மூடக் கோரி ஜனாதிபதிக்கு அனுப்பி வைப்பதற்கான மகஜரை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் மண்முனைப்பற்று பிரதேச செயலாளர் சத்தியானந்தி நமசிவாயத்திடம் கையளித்தனர்.

இந்த ஆர்ப்பாட்டம் தொடர்பில் மக்கள் தெரிவித்தவை வருமாறு:-

மண்முனைப்பற்று -ஆரையம்பதி பிரதான வீதியிலுள்ள மதுபானசாலைகளால் தினமும் பிரச்சினைகள் ஏற்படுகின்றன. இவற்றை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பல தடவைகள் கோரியபோதும் இதுவரையில் அதற்கான நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை.-என்றனர். (ச)

## கடலில் மூழ்கி குடும்பஸ்தர் சாவு!

திருகோணமலை,டிசெ.30

திருகோணமலை சம்பூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கடல்பரப்பில் நீராடிய குடும்பஸ்தர் ஒருவர் நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை உயிரிழந்துள்ளார் .

சம்பூர் பகுதியைச் சேர்ந்த 3 பிள்ளைகளின் தந்தையான கணபதிப்பிள்ளை வரதகுணராசா (வயது 50) என்பவரே உயிரிழந்தவர் ஆவார்.

மதுபோதையில் இருந்த பிரஸ்தாப நபர் கடற்கரையிலிருந்து 200 மீற்றருக்கும் அதிகமான தூரம் நீந்திச் சென்று நீராடிய போதே உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ச)

## வெட்டுக்காயங்களுடன் அம்பாறையில் சடலம் மீட்பு!

அம்பாறை-சியம்பலாண்டுவ பிரதான வீதியில் வெட்டுக் காயங்களுடன் சடலம் ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

மீட்கப்பட்ட சடலம் தொடர்பில் எவ்வித தகவல்களும் கிடைக்கப் பெறவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில் இந்தச் சடலம் தொடர்பான விசாரணைகளை பொலிஸார் ஆரம்பித்துள்ளனர். (ச)

# மட்டக்களப்பு மாவட்டத்தில் உணவகங்களுக்கு தரக்குறியீடு



மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள உணவகங்கள் தரம் பிரிக்கப்பட்டு அவற்றுக்குத் தரக்குறியீடுகளை வழங்கும் பணிகள் நேற்றுமுன்தினம் புதன்கிழமை முன்னெடுக்கப்பட்டன.

மட்டக்களப்பு மாவட்டத்துக்கு அண்மைக்காலமாக வெளிநாட்டு, உள்நாட்டு சுற்றுலாப்பயணிகள் அதிகரித்துவரும் நிலையில் உணவகங்களில் சுகாதாரமான உணவுகளைப் பெற்றுக்கொள்ளும் வகையில் இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதன் முதல் கட்டமாக மட்டக்களப்பு மாநகரசபைக் குட்பட்ட பகுதிகளில் உள்ள உணவகங்களுக்கு தரநிர்ணய சான்றிதழ்கள் பொருத்தும் வேலைத்திட்டங்களை மட்டக்களப்பு மாநகரசபையும், சுகாதாரத் திணைக்களமும் இணைந்து மேற்கொண்டன.

இந்தத் திட்டம் மட்டக்களப்பு மாநகரசபை ஆணையாளர் எம்.உதயகுமார் தலைமையில் முன்னெடுக்கப்பட்டது. இதன்போது இங்குள்ள உணவு விடுதிகளுக்கு நேரடியாகச் சென்று மாநகர ஆணையாளர் அவற்றைப் பொருத்தி வைத்தார்.

பயணிகள் மற்றும் பொது மக்கள் சுகாதாரமான உணவுகளைப் பெற்றுக்கொள்வதற்கான வழிவகைகளை ஏற்படுத்தும் வகையிலேயே இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று மட்டக்களப்பு மாநகர ஆணையாளர் எம்.உதயகுமார் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மட்டக்களப்பு மாநகர சபைக்குட்பட்ட பகுதிகளில் 68 உணவு கையாளும் நிறுவனங்கள் ஆய்வுசெய்யப்பட்டு ஒன்பது நிறுவனங்களுக்குச் சிறந்த உணவகத்துக்குரிய 'ஏ' சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. 20 உணவகங்களுக்கு திருப்தி என்ற அடிப்படையில் 'பி' சான்றிதழ் வழங்கப்பட்டன. 'சி' தரம் பெற்ற உணவகங்களும் 'டி' தரம்பெற்ற உணவகங்களும் மதிப்பீட்டில் குறைந்த புள்ளிகளைப் பெற்ற நிறுவனங்களாக உள்ளன.

அண்மைக் காலமாக மட்டக்களப்புக்கு அதிகளவில் வருகை தரும் உள்நாட்டு, வெளிநாட்டு பிரயாணிகள் இந்த உணவகங்களையே அதிகமாகப் பயன்படுத்துகின்றனர் .இவற்றைக் கருத்திற் கொண்டே இந்த உணவகங்களின் தரம் மதிப்பீடு செய்யப்பட்டன. -என்றார். (ச)

## 2016 இல் இடம்பெற்ற வீதி விபத்துக்கள் 59 பேர் உயிரிழப்பு; 300 பேர் காயம்!

### மட்டக்களப்பு மாவட்ட புள்ளிவிவரத் தகவல்

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஜனவரி முதலாம் திகதி முதல் இதுவரையான காலப் பகுதியில் வீதி விபத்துகள் காரணமாக 59 பேர் உயிரிழந்துள்ளனர். 300 பேர் காயமடைந்துள்ளனர்

- இவ்வாறு காத்தான்குடி பொலிஸ் நிலையத்தின் பதில் பொறுப்பதிகாரி ரி.ஜெயசீலன் தெரிவித்தார்.

வீதி விபத்துகளை இல்லாமல் செய்யும் செயற்றிட்டம் காத்தான்குடியில் நேற்று முன்தினம் புதன்கிழமை முன்னெடுக்கப்பட்டது. அதில் கலந்து கொண்ட போதே அவர் இதனைக் கூறினார்.(ச)

## நுளம்பு பெருகும் சுற்றுச் சூழல்: 70 பேருக்கு சிவப்பு அறிவித்தல்!

நிந்தவூர் பகுதியில் நுளம்புகள் பெருகக்கூடிய வகையில் சுற்றுச்சூழலை வைத்திருந்த 70 பேருக்கு சிவப்பு அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது என்று சம்மாந்துறைப் பொலிஸ் நிலைய சுற்றுச்சூழல் பாதுகாப்புப் பொறுப்பதிகாரி எம். எஸ்.அப்துல் மஜீட் நேற்று வியாழக்கிழமை தெரிவித்தார்.

இந்தப் பிரதேசத்தில் கடந்த இரண்டு நாட்களாகப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களும், பொலிஸாரும் இணைந்து சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர். இதன்போதே 70 பேருக்குச் சிவப்பு அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இவர்கள் சுற்றுச்சூழலை 14 நாள்களுக்குள் துப்புரவு செய்ய வேண்டும். தவறும் பட்சத்தில் இவர்களுக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# சேதமடைந்த கட்டடங்களை அகற்றும் நடவடிக்கை

### நேற்று முதல் கல்முனையில் ஆரம்பம்



கல்முனை,டிசெ.30

கல்முனைக்குடிக் கடற்கரை வீதியின் கிழக்குப் புறமாக 65 மீற்றருக்கு உட்பட்ட பகுதியில் சுனாமி அனர்த்தத்தால் சேதமடைந்த கட்டடங்களை இடித்து அகற்றும் வேலைத்திட்டம் நேற்று வியாழக்கிழமை முதல் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கல்முனை மாநகரசபை மற்றும் கரையோரப் பாதுகாப்புத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

தற்போது கல்முனையில் நுளம்புகள் பெருகுவதற்கு ஏதுவாக இக்கடற்கரைச் சூழல் அமைந்துள்ளது. இதனால் சேதமடைந்த கட்டடங்களை அகற்றுவதன் மூலம் நுளம்புகள் உற்பத்தியாவது தவிர்க்கப்படுவதுடன், மதுபானம் மற்றும் போதைப் பொருள் பாவனை உள்ளிட்ட குற்றச் செயல்கள் ஒழிக்கப்படுவதற்கும் வாய்ப்பாக அமையும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச)

## கொலைகளுடன் தொடர்புடைய இருவரின் விளக்கமறியல் நீடிப்பு

திருகோணமலை,டிசெ.30

திருகோணமலை மாவட்டத்தின் கன்னியாவில் இடம்பெற்ற முக்கொலையுடன் தொடர்புடைய சந்தேகநபர் மற்றும் கிண்ணியா சூரங்கல் பகுதியில் கர்ப்பிணிப் பெண் கொலை செய்யப்பட்டமையுடன் தொடர்புடைய சந்தேக நபர் ஆகிய இருவரையும் ஜனவரி 10ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு, நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த நவம்பர் மாதம் 13ஆம் திகதி கன்னியா பகுதியைச் சேர்ந்த ராஜலக்ஸ்மணன் (வயது-35) என்பவர், மனைவி நித்தியா (வயது -32) மகள்கள் காயத்திரி (வயது -10) சந்தியா (வயது - 08) ஆகிய மூவரையும் வாளால் வெட்டிக் கொலைசெய்த குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டிருந்தார்.

இதேவேளை, கிண்ணியா சூரங்கல் பகுதியைச் சேர்ந்த பிர்னாஸ் (வயது -18) என்பவர் கர்ப்பிணிப் பெண்ணான மனைவியை கழுத்து நெரித்துக் கொலை செய்த குற்றச் சாட்டில் கைது செய்யப்பட்டிருந்தார். இவர்கள் இருவருக்குமே விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது. (ச)

# தாஜுதீன் கொலை தொடர்பான விசேட வாக்குமூலம் வழங்கத் தயாராகிறார் அனுர சேனாநாயக்க!

கொழும்பு, டிசெ.30

முன்னாள் சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் அனுர சேனாநாயக்க தாஜுதீன் கொலை தொடர்பில் விசேட ஒப்புதல் வாக்குமூலம் வழங்க தயாராகி வருகிறார் என்று தகவல் வெளியாகியுள்ளது.



பிரபல றக்பி விளையாட்டு வீரர் வசீம் தாஜுதீன் கொலை தொடர்பான தகவல்களை மறைத்தார் என்ற குற்றச்சாட்டில் சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் அனுர சேனாநாயக்க கைது செய்யப்பட்டு, விளக்மறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில், குற்றப் புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளருக்கு அவர் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற வழக்கு விசாரணைகளின் போது குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் இதனை கொழும்பு மேலதிக நீதிவான் நிஷாந்த பீரிஸிடம் அறிவித்துள்ளனர். நீதிமன்றமும் அதற்கான அனுமதியை வழங்கியுள்ளது.

தாஜுதீன் கொலை சம்பந்தமாக அனுர சேனாநாயக்க விசேட வாக்குமூலம் வழங்க தயாராகியுள்ள நிலையில், ராஜபக்ஷ குடும்பத்திற்குள் கடும் குழப்பமான நிலைமை ஏற்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

குறிப்பாக தாஜுதீனை கொலை செய்யப் பயன்படுத்தப்பட்ட டிபெண்டர் வாகனம், சிரந்தி ராஜபக்ஷவுக்கு சொந்தமான சிறிலிய சவிய என்ற அமைப்பு பயன்படுத்திய வாகனமாகும்.

மேலும், சம்பவம் இடம்பெற்ற தினத்தில் ஜனாதிபதி மாளிகை மற்றும் தங்காலை கால்டன் இல்லம் ஆகியவற்றில் இருந்து நாரஹேன்பிட்டி பொலிஸ் நிலையத்திற்கு தொலைபேசி அழைப்புகள் எடுக்கப்பட்டிருந்தன.

இந்தக் காரணங்களால் கொலையுடன் ராஜபக்ஷ குடும்பத்தினருக்கு தொடர்பு இருக்கின்றது என்றுபரவலாக பேசப்பட்டு வருகிறது.

இதனைத் தவிர தாஜுதீன் இறுதிச் சடங்கில் கலந்து கொள்வதற்காக வெளிநாட்டில் இருந்து வந்த அவரது சகோதரர், நாரஹேன்பிட்டி பொலிஸ் நிலையத்தின் குற்றத்தடுப்பு பிரிவின் முன்னாள் பொறுப்பதிகாரியால் மிரட்டப்பட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பில், முன்னாள் பொறுப்பதிகாரியிடம் வாக்குமூலம்பெற நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

# மீனவர் பேச்சுவார்த்தையில் பங்கேற்க இலங்கை குழு இந்தியாவுக்குப் பயணம்

கொழும்பு, டிசெ.30

இலங்கை - இந்திய மீனவர் பிரச்சினை தொடர்பான அதிகாரிகள் மட்டப் பேச்சுவார்த்தையில் பங்கேற்பதற்காக கடற்றொழில் மற்றும் நீரியல் வள அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் தலைமையிலான குழு நேற்று இந்தியாவுக்குப் பயணமாகியுள்ளது.

கடற்றொழில் அமைச்சின் செயலாளர், கடற்றொழில் மற்றும் நீரியல் வளத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ஆகியோருடன், கடற்படைத் தரப்பிலும் பிரதிநிதியொருவரும் இந்தப் பேச்சுவார்த்தையில் பங்கேற்கவுள்ளார்.

இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா சுவராஜ் உள்ளிட்ட இந்திய அதிகாரிகளுடன் இலங்கை பிரதிநிதிகள் இன்று பேச்சு நடத்தவுள்ளனர்.

இந்திய மீனவர்களின் சட்டவிரோத மீன்பிடி முறைகள் மற்றும் இழுவை மீன்பிடி உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்து இந்த சந்திப்பில் முக்கிய கவனம் செலுத்தப்படவுள்ளது.

இரு நாட்டு மீனவர் பிரச்சினை தொடர்பான முதல் கட்டப் பேச்சுவார்த்தை கடந்த நவம்பர் மாதம் புதுடில்லியில் நடைபெற்றிருந்தது.

இந்தப் பேச்சுவார்த்தைகளில் கடற்றொழில் அமைச்சர் மஹிந்த அமரவீரவும் பங்கேற்றிருந்தார்.

இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தை ஜனவரி மாதம் 2 ஆம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ளது.

இந்தப் பேச்சுவார்த்தைக்கு முன்னதாக டில்லியில் அதிகாரிகள் பேச்சுவார்த்தை இன்று நடைபெறவுள்ளது.

கொழும்பில் நடைபெறவுள்ள இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தையில் இந்தியாவ்வ பிரதிநிதித்துவப்படுத்தி வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா சுவராஜ் மற்றும் விவசாய நலன்புரி அமைச்சர் ராதா மோகன் சிங் ஆகியோர் பங்கேற்கவுள்ளனர்.

அத்துடன் இலங்கை சார்பில் கடற்றொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர மற்றும் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர ஆகியோர் பங்கேற்கவுள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

# விமல் வீரவன்ஷவுக்கு மீண்டும் அழைப்பாணை

கொழும்பு, டிசெ.30

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஷவுக்கு பொலிஸ் நிதிக் குற்ற விசாரணை பிரிவில் முன்னிலையாகுமாறு மீண்டும் நேற்று அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது.



நீதிமன்ற உத்தரவிற்கு அமைய வாக்குமூலம் ஒன்றை பெறுவதற்காக அவருக்கு அழைப்பாணை நேற்று அனுப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

வாக்குமூலம் வழங்குவதை விமல் வீரவன்ச தொடர்ந்தும் தவிர்த்து வருவதாக பொலிஸ் நிதிக் குற்றப் பிரிவினால் கடந்த 16 ஆம் திகதி நீதி மன்றத்துக்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

நேற்று முன்தினமும் விமல் வீரவன்ச ஐந்து மணிநேர விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# அம்பாந்தோட்டை குறித்த குற்றச்சாட்டுகள்; ஜனாதிபதி மைத்திரியிடம் சீனத் தூதுவர் கவலை



கொழும்பு, டிசெ.30

அம்பாந்தோட்டைத் துறைமுக உடன்பாடு குறித்து எழுந்துள்ள குற்றச்சாட்டுகள் தொடர்பாக சீனத் தூதுவர் யி ஷியாங்லியாங், ஜனாதிபதி மைத்திரியிடம் கவலை வெளியிட்டுள்ளார்.

இலங்கைக்கான சீனத் தூதுவர் யி ஷியாங்லியாங் நேற்று முன்தினம் காலை கொழும்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை அவசரமாகச் சந்தித்துள்ளார். இதன்போதே அவர் தனது கவலையை வெளியிட்டுள்ளார்.

அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீன நிறுவனத்துக்கு குத்தகைக்கு வழங்கும் உடன்பாடு விடயத்தில் இரகசிய தரகு இடம்பெற்றிருப்பதாக இலங்கை அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் ஜாதிக ஹெல உறுமய மற்றும் ஜே.வி.பி., கூட்டு எதிரணியைச் சேர்ந்தவர்கள் குற்றச்சாட்டுகளை முன்வைத்திருந்தனர்.

இந்தக் குற்றச்சாட்டுகள் குறித்து சீனா அதிருப்தி அடைந்துள்ளது.

குறிப்பாக, இலங்கை அரசாங்கத்தில் இடம்பெற்றுள்ள ஜாதிக ஹெல உறுமய, அம்பாந்தோட்டை உடன்பாட்டுடன் தொடர்புடைய சில அமைச்சர்கள், சீனாவுக்குச் சென்று தரகுப் பணம் பெற்றனர் என்று குற்றம் சுமத்தியுள்ளது.

இத்தக் குற்றச்சாட்டு தொடர்பான சீனாவின் கவலையை ஜனாதிபதியிடம் நேரில் சந்தித்து சீனத் தூதுவர் யி ஷியாங்லியாங் தெரிவித்துள்ளார்.

# தொழில்நுட்ப பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

கொழும்பு, டிசெ.30

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் இம்முறை தொழில்நுட்ப பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கை 30 ஆயிரமாக அதிகரித்துள்ளது என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் டபிள்யு.என்.ஜே.புஷ்பகுமார தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள் ஜனவரி மாதம் 12 ஆம் திகதிக்கு முன்னர் வெளியிடப்படும். 2015 ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சைப் பெறுபேறும் ஜனவரி மாதத்திலேயே வெளியிடப்பட்டது.

இம்முறை உயர்தரப் பரீட்சை கடந்த ஒகஸ்ட் மாதம் 2 ஆம் திகதி நடைபெற்றுது. பரீட்சையில் 3 இலட்சத்து 15 ஆயிரத்து 605 மாணவர்கள் தோற்றியிருந்தனர்.

உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் முன்னைய வருடங்களில் தாமதமடைந்திருப்பதாக சில தரப்பினர் குற்றஞ்சாட்டியுள்ளனர். எனினும், இவ்வாறான தாமதங்கள் எதுவும் இடம்பெறவில்லை.

மேலும், தொழில்நுட்பப் பயிற்சி செய்முறைப் பரீட்சைக்கான புள்ளிகள் கணினியில் சேர்க்கப்பட வேண்டும். இதற்கு சில நாள்கள் செல்லும் என்றும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் மேலும் தெரிவித்துள்ளார்.

# துப்பாக்கிகளுடன் மூவர் கைது!

கொழும்பு, டிசெ.30

திஸ்ஸமஹாராம - தம்பரவெவ பகுதியில் சட்டவிரோதமதமாக துப்பாக்கிகளை வைத்திருந்த மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இந்தச் சந்தேக நபர்களிமிருந்து 3 துப்பாக்கிகள் மீட்கப் பட்டுள்ளன. தங்காலைப் பொலிஸார் மேற்கொண்ட சுற்றி வளைப்பின் போதே இந்தத் துப்பாக்கிகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

## புதுக்குடியிருப்பு மத்தியஸ்தர் சபை நாளை கூடும்

புதுக்குடியிருப்பு மத்தியஸ்தர் சபை பொதுக்கூட்டம் நாளை 31 ஆம் திகதி சனிக்கிழமையே இடம்பெறவுள்ளது.

இந்தக் கூட்டம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் என்று முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

அன்றைய தினம் புது வருடம் என்பதால் இந்தத் திகதி மாற்றம் செய்யப்பட்டிருக்கின்றது என்று மத்தியஸ்தர் சபையின் தலைவர் ரி.சுந்தரலிங்கம் அறிவித்துள்ளார். (இ)

## மாணவர்களுக்கு சைக்கிள்கள்

கிளிநொச்சி மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 99 மாணவர்களுக்குச் சைக்கிள்கள் வழங்கப்படவுள்ளன.

கிளிநொச்சி மக்கள் அமைப்பின் வருடாந்த ஒன்று கூடல் நிகழ்வு எதிர்வரும் 14 ஆம் திகதி லண்டனில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் சேகரிக்கப்படும் நிதி மூலமும் நன்கொடையாளர்கள் உதவியின் மூலமும் இந்த உதவி மாணவர்களுக்குக் கிடைக்கவுள்ளது.

பாடசாலைகளில் கல்வி கற்கும் வறுமைக் கோட்டுக்கு கீழ் உள்ள மற்றும் பாடசாலைக்கு பயணம் செய்வதில் சிரமப்படும் மாணவர்களை இனம்கண்டு இவை வழங்கப்படவுள்ளன. (ஐ)

# பொருளாதார மத்திய நிலையம் அமைக்க மாங்குளம், மதகுவைத்தகுளத்தில் காணிகள்!

## இரு இடங்களிலும் நிர்மாணப் பணிகள் விரைவில் ஆரம்பம்

வவுனியா, டிசெ.30

வடக்கில் பொருளாதார மத்திய நிலையம் அமைப்பதற்கென இனங்காணப்பட்ட இரண்டு காணிகளும் மத்திய அரசின் கிராமிய பொருளாதார அபிவிருத்தி அமைச்சுக்குக் கையளிக்கப்பட்டுள்ளன.

இதனையடுத்து பொருளாதார மத்திய நிலையங்களில் நிர்மாணப் பணிகள் இரண்டொரு தினங்களில் ஆரம்பமாகும் என்று தெரியவருகின்றது.

வவுனியா மாவட்டத்தின் மதகுவைத்தகுளம் மற்றும் முல்லைத்தீவு மாவட்டத்தின் மாங்குளம் ஆகிய இரண்டு இடங்களிலுமே பொருளாதார மத்திய நிலையங்கள் நிறுவப்படவுள்ளன.

வவுனியா மாவட்டத்தில் பொருளாதார நிலையம் நிறுவுவதற்கென கடந்த ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கப்பட்டிருந்தது. ஆனால் இதற்குப் பொருத்தமான இடத்தைத் தெரிவுசெய்வதில் இழுபறி நிலைமையும் சர்ச்சைகளும் ஏற்பட்டன. மத்திய அரசு முன்வைத்த இடத்துக்கு வடக்கு மாகாண அரசு எதிர்ப்பு வெளியிட்டிருந்தது.

இறுதியில் மத்திய அரசும் வடக்கு அரசும் இணக்கத்துக்கு வந்து பொருளாதார வலயத்தை இரண்டு இடங்களில் அமைப்பது எனத் தீர்மானிக்கப்பட்டது. இதன் பின்னரும் அதற்கு எதிர்ப்பு வெளியிடப்பட்டது.

தொடர்ந்து இழுபறியில் இருந்து வந்த இந்த விவகாரம் தற்போது முடிவுக்கு வந்துள்ளது. இரு இடங்களிலும் மத்திய நிலையங்களை அமைப்பதற்கான இரு காணிகளையும் மாவட்டச் செயலாளர்கள் ஒதுக்கியுள்ளனர். அந்தக் காணிகள் கிராமிய பொருளாதார அபிவிருத்தி அமைச்சுக்குக் கையளிக்கப்பட்டுள்ளன. அதை அடுத்து நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. (இ)

### *வவுனியா மாவட்டத்தில்*

## 18 ஆயிரம் ஏக்கரில் உழுந்துச் செய்கை

வவுனியா மாவட்டத்தில் தற்போது 18 ஆயிரம் ஏக்கரில் உழுந்துப் பயிர்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று மாவட்ட கமநலசேவைகள் திணைக்கள உதவிப்பணிப்பாளர் ஆர்.விஜயகுமார் தெரிவித்துள்ளார்.

வவுனியா மாவட்டத்தில் சீரற்ற காலநிலை காணப்பட்ட போதும் மேட்டு நிலப் பயிர்ச் செய்கையாக விவசாயிகளால் 18 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் உழுந்துப் பயிர் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கடந்த காலங்களை விட இந்த முறை அதிகமாக உழுந்துப் பயிர் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மழை வீழ்ச்சி குறைவாக இருந்த போதும் பனியின் தாக்கத்தால் அந்தச் செய்கை பெரியளவில் பாதிக்கப்படவில்லை. இருப்பினும் தொடர்ந்து அதிக மழை பெய்யும் பட்சத்தில் உழுந்துச் செய்கை பாதிக்கப்படக் கூடிய நிலை ஏற்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.(ஐ-100)

## மீள்குடியேற்ற விசேட செயலணி தொடர்பில் மக்கள் முறைப்பாடு



மீள்குடியேற்ற விசேட செயலணி தொடர்பில் சில முறைப்பாடுகள் தமக்குக் கிடைக்கப் பெற்றுள்ளன என்று ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் கே.கே. மஸ்தான் தெரிவித்துள்ளார்.

மீள்குடியேற்ற விசேட செயலணியின் ஊடாக மேற்கொள்ளப்படும் வீட்டுத் திட்டத்தில் பயனாளிகள் தெரிவு, நிதி கையாடல் தொடர்பாகவே மக்களிடமிருந்து முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றன என்று அவர் குறிப்பிட்டார்.

நீராவிபிட்டி, தண்ணீரூற்று, கீச்சிராபுரம் மற்றும் குமாரபுரம் ஆகிய பகுதி மக்களுடனான சந்திப்பின் போதே மீள்குடியேற்ற விசேட செயலணி தொடர்பில் ஆராயப்பட்டதாக நாடாளுமன்ற உறுப்பினர் கே.கே. மஸ்தான் தெரிவித்தார். (ஐ-81)

# பேசாலையில் மக்களைச் சந்தித்த இராஜாங்க அமைச்சர் விஜயகலா



மன்னார், டிசெ.30

மன்னார் மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் அமைப்பாளர் ஏ.சமீயு முகம்மது பௌஸ்மியின் அழைப்பையேற்று புதன்கிழமை பேசாலை முருகன் கோவில் பகுதிக்கு விஜயம் மேற்கொண்டார். இராஜங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் அங்குள்ள அறநெறிப் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் இராஜங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் உரையாற்றினார்.

அவர் தொடர்ந்து உரையாற்றும் போது தெரிவித்தவை வருமாறு:-

இந்த அரசு ஆட்சியை மாற்றி நல்லாட்சி அரசாக உருவெடுத்துள்ளது. எந்தவித இனம், மொழி பேதமின்றி வேலைத் திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

இந்த வேலைத் திட்டம் கிராமங்கள் தோறும் சரியான முறையில் சென்றடைகின்றதா என்பதை மீள்பரிசோதனை செய்து கிராம அலுவலகர் மூலம் பிரதேச செயலாளருக்கும் இவரின் ஊடாக மாவட்ட செயலாளருக்கும் அவருக்கு ஊடாகத்தான் சம்பந்தப்பட்ட அமைச்சுக்குச் செல்கின்றது.

கடந்த கால அரசு, வட மாகாணத்துக்கும் கிழக்கு மாகாணத்துக்கும் வேறு மாகாணத்தவர்களை வரவழைத்து வேலைகளுக்கான வெற்றிடங்களை நிரப்பியது.

வடக்கு, கிழக்கு, மலையகங்களில் படித்த இளைஞர் யுவதிகள் இருந்தபோதும் வேறு மாவட்டங்களிலிருந்த பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்களைக் கொண்டு வெற்றிடங்களை நிரப்பினர். பின் ஆறு மாதங்களுக்குப் பின்னர் இவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டு சொந்த இடங்களுக்கு அனுப்பப்பட்ட சம்பவங்கள்தான் இடம்பெற்றன.

கடந்த வருடமும் இந்த வருடமும் நாங்கள் இச் செயல்பாட்டை இடை நிறுத்தியுள்ளோம். எங்கள் பகுதிகளிலுள்ள எங்கள் பகுதி படித்தவர்கள் மூலம் வெற்றிடங்களை நிரப்பிய பின்பே இடமிருந்தால் வெளி மாவட்டத்தினர்களைக் கொண்டு நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. உங்களுக்கு வீட்டுத் திட்டம், வேலை வாய்ப்புக் கிடைப்பதில்லை எனவும் இதனால் நீங்கள் பாதிப்பு அடைவதாகவும் தெரிவித்தீர்கள். இதற்கு உரியவர்களுடன் பேச்சு நடத்தி நடவடிக்கை எடுக்கப்படும்.

இந்துக்களாகவோ, கிறிஸ்தவர்களாகவோ, முஸ்லிம்களாகவோ அல்லது பௌத்தர்களாகவோ இருந்தாலும் சரி கிடைப்பவைகள் சமமாக பங் கீடு செய்யப்பட வேண்டும்.

இவ்வாறு பங்கீடு செய்யும் போதுதான் எல்லோரும் நன்மை பெறக்கூடியதாக இருக்கும்.- என்றார். (ஐ-112)

## தொலைபேசி முறைப்பாட்டால் முறியடிக்கப்பட்ட மண் கடத்தல்

வவுனியா, டிசெ.30

வவுனியா பிரதி பொலிஸ் மா அதிபர் அலுவலகத்தின் தமிழ் மொழி மூல தொலைபேசி முறைப்பாட்டுப் பிரிவுக்குக் கிடைத்த முறைப்பாட்டை அடுத்து மல்லாவி, ஐயன்குளம் பகுதியில் மேற்கொள்ளப்படவிருந்த மண்கடத்தல் முறியடிக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த விடயம் தொடர்பாக அவர்கள் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

கடந்த செவ்வாய்க்கிழமை வவுனியா பிரதிப் பொலிஸ்மா அதிபர் அலுவலகத்தின் தமிழ் மொழி மூல தொலைபேசி முறைப்பாட்டு பிரிவுக்கு அழைப்பு ஒன்று வந்துள்ளது.

மல்லாவி, ஐயன்குளம் பகுதியில் சட்டவிரோத மண் கடத்தல் இடம்பெறுகிறது என்று தகவல் கிடைத்திருந்தது.

இதனையடுத்து விரைந்து செயற்பட்ட வவுனியா பிரதி பொலிஸ்மா அதிபர் அலுவலகம், குறித்த சம்பவம் தொடர்பில் மல்லாவி பொலிஸாருக்கு உடனடியாகத் தகவல் வழங்கியிருந்தது. அதையடுத்து அந்தப் பகுதிக்குச் சென்ற பொலிஸார் அனுமதி பெறாது சட்ட விரோதமாக மண் கடத்தலில் ஈடுபட்ட உழவு இயந்திரத்தை மண் நிரப்பப்பட்ட நிலையில் மீட்டனர். அதன் சாரதியும் கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்ட நபர் முல்லைத்தீவு நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார்.- என்று தெரிவித்தனர்.

இதேவேளை, கடந்த 15 ஆம் திகதி மன்னார், சிலாபத்துறைப் பகுதியில் சட்ட விரோதமாக மண் களஞ்சியப்படுத்தி வைத்திருந்தமை தொடர்பில் வவுனியா பிரதிப் பொலிஸ்மா அதிபர் அலுவலகத்தில் தமிழ் மொழி மூல தொலைபேசி பிரிவுக்கு முறைப்பாடு கிடைத்துள்ளது.

இதனையடுத்து அங்கிருந்து பொலிஸாரால் மண் மீட்கப்பட்டது என்று மேலும் தெரிவிக்கப்பட்டது.

தமது பகுதிகளில் நடைபெறும் சட்டவிரோத நடவடிக்கைகள், குழு மோதல்கள் உள்ளிட்ட பிரச்சினைகள் தொடர்பில் தமிழ் மொழி மூல முறைப்பாடுகளுக்காக 076 622 4949, 076 622 6363 ஆகிய இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு முறைப்பாடு செய்ய முடியும் என்று பிரதி பொலிஸ் மா அதிபர் அலுவலகம் தெரிவித்துள்ளது. (ஐ-100)

# மாணவருக்கு இதுவரை 4 கோடி புத்தகங்கள் விநியோகம்

## நூல் பிரசுரங்களுக்குப் பொறுப்பான ஆணையாளர் நாயகம் தெரிவிப்பு



கொழும்பு, டிசெ.30 பாடசாலை மாணவர்களுக்கு இதுவரை 4 கோடி புத்தகங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன என்று கல்வி அமைச்சின் நூல் பிரசுரங்களுக்குப் பொறுப்பான ஆணையாளர் நாயகம் பத்மினி நாளிக்கா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு: ''பாடசாலை மாணவர்களுக்காக 4 கோடி பத்து லட்சம் பாடப் புத்தகங்கள் பிரசுரிக்கப்பட்டுள்ளன. இவற்றில் 4 கோடி புத்தகங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

பாடசாலைகளில் அடுத்த வருடத்துக்குத் தேவையான சகல பாடப்புத்தகங்களும் விநியோகிக்கப்பட்டுவிட்டன.

தற்போது குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.

பாடப் புத்தகங்களை கல்வி அமைச்சின் விற்பனை ஊக்குவிப்பு மத்திய நிலையத்திலும் பெற்றுக் கொள்ள முடியும்.

சர்வதேசப் பாடசாலைகளுக்குத் தேவையான பாடப் புத்தகங்களும் விநியோகிக்கப்பட்டுள்ளன.

தரம் ஒன்று மாணவர்கள் மற்றும் வேறு பாடங்களைத் தெரிவு செய்யும் வகுப்பு மாணவர்கள் ஆகியோருக்கான பாடப் புத்தகங்கள் முதலாம் தவணை ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் வழங்கப்பட இருக்கின்றன.''- என்றார். (எ)

# தமிழக முகாம்களில் 68 ஆயிரம் ஈழ அகதிகள் அடிப்படை வசதிகள் இன்றியே வாழ்கின்றனர்!

## சுமுக நிலை வந்தவுடன் நாடு திரும்ப அநேகர் விருப்பம்

இலங்கையில் யுத்தம் இடம்பெற்ற காலகட்டத்தில் லட்சக்கணக்கான தமிழர்கள் இந்தியா, கனடா, ஆஸ்திரேலியா, இங்கிலாந்து, சுவிற்சர்லாந்து, நோர்வே போன்ற நாடுகளில் அகதிகளாகத் தஞ்சமடைந்தனர்.

குறிப்பாக அதிகமானவர்கள் இந்தியாவில் தஞ்சமடைந்தனர். இவ்வாறு அகதிகளாக வந்தவர்கள் இராமேஸ்வரம், மண்டபம் உட்பட தமிழகத்தில் அமைக்கப்பட்ட 112 முகாம்களில் தங்க வைக்கப்பட்டனர். அத்துடன் கேரளா, கர்நாடகா, புதுச்சேரி, ஒடிசா, சட்டீஸ்கர் உட்படப் பல்வேறு மாநிலங்களில் அமைக்கப்பட்ட முகாம்களிலும் தங்க வைக்கப்பட்டனர்.

தற்போது தமிழகத்தில் உள்ள அகதிகள் முகாம்களில் 68 ஆயிரம் பேர் உள்ளனர். முகாம்களுக்கு வெளியே 32 ஆயிரம் பேர் தங்கியுள்ளனர்.

இதற்கமைய, இவர்களில் குடும்பத் தலைவருக்கு ரூ.1,000மும், மற்றவர்களுக்கு ரூ.720, சிறுவர்களுக்கு ரூ.500 (இந்திய ரூபா) என, தமிழக அரசு உதவித்தொகையாக வழங்கி வருகிறது.

இதுதவிர அரிசி உட்பட அத்தியாவசிய பொருள்கள் மானிய விலையில் வழங்கப்படுகின்றன. இந்த நிலையில் தமிழகத்தில் உள்ள அகதிகள் முகாம்களில் அடிப்படை வசதிகள் சரிவர செய்துதரப்படவில்லை என்று புகார் எழுந்துள்ளது. குறிப்பாக வேலூர், திருவண்ணாமலை மாவட்டங்களில் உள்ள அகதிகள் முகாம்களில் இந்தப் பிரச்சினை பெரியளவில் உள்ளதாக அகதிகள் வேதனை தெரிவிக்கின்றனர்.


### வசதிகள் இன்றி அகதிகள்

வேலூர் மாவட்டத்தில் மேல் மொணவூர், குடியாத்தம், மின்னூர், சின்ன பள்ளிகுப்பம், வாலாஜா அணைக்கட்டு, பாணாவரம் என 6 இடங்களிலும், திருவண்ணாமலை மாவட்டத்தில் அத்தியந்தல், அடி அண்ணா மலை, சொரக்கொளத்தூர், புதுப்பாளையம், தென்பள்ளிப்பட்டு, எலத்தூர், கஸ்தம்பாடி, பையூர், ஆரணி வேலப்பாடி, குன்னத்தூர், தவசி, பாப்பந்தாங்கல், ஊசூர் என 13 இடங்களிலும் இலங்கைத் தமிழர்களுக்கான அகதிகள் முகாம்கள் உள்ளன.

முகாம்களில் உள்ள குழந்தைகளுக்கான அங்கன்வாடி மையங்கள், பொதுகழிவறை வசதி, கழிவுநீர் கால்வாய், பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் வசதி என்று பல்வேறு அடிப்படை வசதிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. ஆனாலும், இவைகள் தொடர்ந்து பராமரிக்கப்படாததால் சாலைகளில் கழிவுநீர் செல்வதும், பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீருக்கான பொதுமேநீர் தேக்கத்தொட்டிகள் சேதமடைந்தும், போர்வெல்கள் பாழடைந்தும் காணப்படுகின்றன.

### மழைக் காலங்களில் பெரும் அவலம்

அதேபோல் அவர்களுக்கான குடியிருப்புகளின் கூரைகள், ஓடுகள் சிதிலமடைந்தும் காணப்படுகின்றன. பல முகாம்களில் மழைக்காலங்களில் அகதிகள் அருகில் உள்ள சமுதாய கூடங்களிலும், பள்ளி வளாகங்களிலும் தங்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இதுதொடர்பாக வருவாய்த் துறை அதிகாரிகளிடம் புகார் செய்தும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று வேதனை தெரிவிக்கின்றனர் அகதிகள்.



குறிப்பாக செய்யாறு அருகே பாப்பாந்தாங்கல், தவசி இலங்கை அகதிகளுக்கான முகாம்களில் வீடுகளின் சுவர்கள் இடிந்து வீடுகளில் உயிருக்கு பயந்து வசித்து வரும் நிலை உள்ளது. தங்களுக்கு புதிதாக வீடுகளைக் கட்டித்தரவும் குடிதண்ணீர் மற்றும் கழிப்பறை வசதி ஏற்படுத்தித் தர வேண்டியும் அவர்கள் ஏற்கனவே பலமுறை கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்தக் கோரிக்கை இதுவரை கண்டு கொள்ளப்படவில்லை என்று அவர்கள் வேதனை தெரிவிக்கின்றனர். செய்யாறு பாப்பாந்தாங்கல் கிராமத்தில் கடந்த 1990ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட அகதிகள் முகாமில் 74 குடும்பங்களைச் சேர்ந்த 247 பேர் வசித்து வருகின்றனர். இம்முகாமில் முதலில் மண்சுவரால் ஆன வீடும், மேற்கூரை தார் சீற்றினாலும் அமைக்கப்பட்டு இருந்தது. சில ஆண்டுகளுக்குப் பிறகு மேற்கூரை சிமெந்து சீற்றினால் புனரமைக்கப்பட்டன.

இக்கூரைகள் சேதம் அடைந்ததால் அனைத்து வீடுகளும் கடந்த 2013ஆம் ஆண்டு சீமை ஓடுகளாக மாற்றித் தரப்பட்டன. தற்போது இதுவும் சரிந்து வீடுகள் அனைத்தும் வானம் பார்த்த குட்டிச்சுவர்களாகக் காட்சியளிக்கின்றன. இதனால் மழைக் காலங்களில் அருகில் உள்ள கோயில், தேவாலயம், பள்ளிக் கட்டடங்களில் அகதிகள் தங்கி வருகின்றனர்.

### வசதிகள் போதா

இங்குள்ள கழிவறையும் 247 பேருக்குப் போதுமானதாக இல்லை. மினி பவர் பம்பு சேதம் அடைந்துள்ளது. இவர்களுக்கான குடிதண்ணீர்த் தேவைக்காக கடந்த 2014ஆம் ஆண்டு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கப்பட்டது. ஆனால் இதுவரை இது பயன்பாட்டிற்கே வரவில்லை. இதனால் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு செல்லும் பைப் லைன்கள் சேதமடைந்தும், குழாய்கள் சேதமடைந்தும் காணப்படுகின்றன.

எனவே, இங்குள்ள அகதிகள் புதிய வீடுகளை கட்டித்தரக் கோரியும், அடிப்படை வசதிகள் அனைத்தையும் செய்து தரக் கோரியும் செய்யாறு தாசில்தாரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். அதேபோல் தவசி கிராம முகாமில் 85 குடும்பங்களில் 269 பேர் வசித்து வருகின்றனர்.

இங்கும் ஆரம்பத்தில் தார்சீற் கூரையுடன் கூடிய மண் சுவரால் ஆன வீடுகளாக கட்டித்தரப்பட்டன. தற்போது இங்குள்ள வீடுகளும் சேதமடைந்துள்ளன. சிலர் மேற்கூரைகளை தென்னங்கீற்றுகளாலும், சிலர் பிளாஸ்டிக் பேப்பர்களாலும் மழைநீர் ஒழுகாதவாறு போர்த்தியுள்ளனர்.

### வீடுகள் கட்டித் தருமாறு கோரிக்கை

அப்படியும் மழை நீரில் இருந்து தப்பிக்க அருகில் உள்ள தேவாலயம், பள்ளிக்கட்டடம் ஆகியனவற்றில் தங்கி வருகின்றனர். இதனால் தங்களுக்கு புதிதாக வீடுகளை கட்டித்தர கோரியும், சாலை வசதி, கழிவுநீர் கால்வாயை சுத்தம் செய்து தரக்கோரியும் தாசில்தாரிடம் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

அதேபோல் 2014-15ஆம் ஆண்டு 6.50 லட்சம் ரூபா மதிப்பீட்டில் கட்டப்பட்ட அங்கன்வாடி மையக்கட்டடத்தையும் பயன்பாட்டுக்கு கொண்டு வர வேண்டும் என்றும் இவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். இலங்கை அகதிகள் முகாம்களின் நிலைக்கு உதாரணங்களாக திகழும் செய்யாறு பாப்பாந்தாங்கல், தவசி முகாம்களை போன்றே திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள பிற இலங்கை அகதிகள் முகாம்களும், வேலூர் மாவட்டத்தில் உள்ள இலங்கை அகதிகள் முகாம்களும் உள்ளன என்பதால் அவர்களுக்கான அடிப்படை வசதிகளை நிறைவேற்றித்தர மாநில அரசு சிறப்பு நிதியை ஒதுக்கித்தர வேண்டும் என்று இலங்கை தமிழர்கள் எதிர்பார்க்கின்றனர்.

### சொந்த இடத்துக்குத் திரும்ப பலருக்கு விருப்பம்

மேலும் எங்களுக்கு மானியத்தில் அத்தியாவசிய பொருள்களை வழங்குவதும், மாதாந்திர உதவித்தொகை வழங்குவதும் எவ்வளவு காலத்துக்கு நீடிக்கும் என்பது தெரியாது. ஆகவே, இலங்கையில் சுமுக நிலை திரும்பியதும் எங்களுக்கான பூர்வீக வசிப்பிடத்துக்கு திரும்புவதற்கான ஏற்பாடுகளை மத்திய அரசும், மாநில அரசும் மேற்கொள்ள வேண்டும் என்பது அகதிகள் ஒரு சாராரின் எதிர்பார்ப்பாக உள்ளது.

அதேநேரத்தில், 25 ஆண்டுகளுக்கும் மேல் தாய் தமிழகத்தில் அகதிகள் என்ற அந்தஸ்தில் தங்கியுள்ள எங்களில் மூத்தவர்கள் பலரும் இறந்துவிட்டனர். இப்போதுள்ள அகதிகளில் 90 சதவீதம் பேர் இந்திய மண்ணிலேயே தாய் தமிழகத்திலேயே பிறந்தவர்கள். அவர்கள் இங்கேயே வளர்ந்துள்ளனர். அவர்களுக்கு இலங்கை எப்படி இருக்கும் என்பதே தெரியாது. இந்த நிலையில் இந்திய குடியுரிமை வேண்டுவோர்களுக்கு அதை வழங்கி எங்களை இந்தியர்களாகவே பாவிக்க வேண்டும் என்பதையும் அகதிகளின் ஒரு பிரிவினர் கோரிக்கை விடுக்கின்றனர்.

(நன்றி: தினகரன் )




ரஷ்யா தூதுவர் துருக்கியில் சுட்டுக்கொல்லப்பட்ட பின்னரும் துருக்கி- ரஷ்யா- ஈரான் - சிரியா பிரதிநிதிகள் தமக்கிடையேயான பிரகடனத்தில் கையெழுத்திட்டனர்

20 டிசெம்பர் 2016 (செவ்வாய்) அன்று ரஷ்ய துருக்கி மற்றும் ஈரானிய உயர் அதிகாரிகள் மாஸ்கோவில் கூடி சிரியாவில் அமெரிக்காவால் தூண்டப்படும் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவரும் பிரகடனத்தில் கையெழுத்திட்டனர்.












Over the course of nearly a week of evacuations, 25,000 people have led rebel parts of east Aleppo CREDIT: JAWAD AL RIFAI/ANADOLU AGENCY

அமெரிக்கா ஆதரிக்கும் இஸ்லாமிய போராளிகளிடமிருந்து முக்கிய நகரமான அலெப்போ (Aleppo) நகரை ரஷ்ய ஆதரவு சிரிய படையினர் கைப்பற்றிய பின்னர் வெளிவந்த, இந்த உடன்பாடானது துருக்கிக்கான ரஷ்ய தூதர் அன்டிரே கார்லோவ் (Russia's ambassador to Turkey, Andrei Karlov) திங்கள் 19.12.2016 அன்று படுகொலை செய்யப்பட்டிருப்பினும் மூன்று நாடுகளுக்கும் இடையிலான உறவுகள் முன்னேறுவதற்கான நகர்வு என்பதை காட்டுகிறது.






இன்று, சிரிய நெருக்கடியை தீர்ப்பதை நோக்கிய உடனடி நடவடிக்கைகள் மீதான மாஸ்கோ பிரகடனத்தின் உள்ளடக்கம் தொடர்பாக வல்லுநர்கள் வேலை செய்கின்றனர். அது ஒரு முற்றிலும் மிக அவசியமான ஆவணம் என்று ரஷ்ய பாதுகாப்பு அமைச்சர் செர்ஜி ஷோய்கு தனக்கு நிகரான பொறுப்பிலுள்ள ஈரானிய அதிகாரி கொஸெயின் டெக்கான் உடனான ஒரு சந்திப்பின்போது குறிப்பிட்டார். (Today, experts are working on the text of the Moscow declaration on immediate steps towards resolving the Syrian crisis. It is a thorough, extremely necessary document, Russian Defence Minister Sergei Shoigu said at a meeting with his Iranian counterpart, Hossein Dehghan.)



Personnel carry the coffin containing the body of Russian Ambassador to Turkey Andrei Karlov, who was shot dead by an off&duty policeman while delivering a speech in an Ankara art gallery Dec. 19, after a memorial service in Moscow, Dec. 22, 2016. (photo by REUTERS/Sergei Ilnitsky)

ஷோய்கு சிரியாவில் அமெரிக்க மற்றும் ஐரோப்பிய முன்முயற்சிகளை நிராகரித்து, அமெரிக்காவாலோ அல்லது அவர்களின் பங்காளர்களாலோ எடுக்கப்படும் கூட்டு முயற்சிகள் மீது உடன்படுவதற்கான முயற்சிகள் ஒழிந்துபோயின. அவற்றுள் ஒன்று கூட களத்திலுள்ள நிலைமைகளின் மீது செல்வாக்கு செலுத்த முடியவில்லை (attempts to agree on joint efforts undertaken by the US or their partners were doomed. None of them exerted real influence on the situation on the ground.) என்று அறிவித்தார்.



Sergei Lavrov, the Russian foreign minister (centre), hosted his Iranian and Turkish counterparts at an unprecedented summit in Moscow CREDIT: NATALIA KOLESNIKOVA / AFP



Sergei Lavrov (right) met regularly with American Secretary of State John Kerry throughout the year but US was not invited to the Moscow talks CREDIT: AFP / FABRICE COFFRINI

### Russia, Iran and Turkey Meet for Syria Talks, Excluding U.S.

By BEN HUBBARD and DAVID E. SANGER DEC. 20, 2016

BEIRUT, Lebanon & Russia, Iran and Turkey met in Moscow on Tuesday to work toward a political accord to end Syria's nearly six&year war, leaving the United States on the sidelines as the countries sought to drive the conflict in ways that serve their interests.

Secretary of State John Kerry was not invited. Nor was the United Nations consulted.

With pro&government forces having made critical gains on the ground, the new alignment and the absence of any Western powers at the table all but guarantee that President Bashar al&Assad will continue to rule Syria under any resulting agreement, despite President Obama's declaration more than five years ago that Mr. Assad had lost legitimacy and had to be removed.

Mr. Obama's reluctance to back that demand with more involvement as the war escalated leaves Washington with little leverage on a geopolitical crisis as President&elect Donald J. Trump prepares to take office.

Mr. Trump's only recent statement on Syria came last week, when he declared at a Pennsylvania rally that the situation was so sad and promised, We're going to help people. He vowed to extract funds from Persian Gulf nations to build safe zones in Syria so people will have a chance, without addressing the question of who would enforce those zones on the ground or in the air.

But by the time Mr. Trump is sworn in next month, such safe zones may be irrelevant, if the evacuation of Aleppo and political negotiations proceed.

More than a year after launching the air campaign that remade the battlefield in Mr. Assad's favor, Russia appears to be looking for a way out of the war. Analysts say that Moscow sees in the transition an opportunity to end the conflict on favorable terms both for Mr. Assad and for Russia's broader interests in the region.

Russia understands that nobody gives you anything, you just have to take it, and in this environment, with the U.S. retreating faster than the other side can advance, it's just a free for all, said Andrew J. Tabler, a fellow at the Washington Institute for Near East Policy who studies Syria. When the Turks, the Iranians and the Russians all agree on a process without the U.S. being in the room, you realize there is a problem for us.

Russian officials have made little effort to hide their disdain for American diplomatic efforts.

Last week, Foreign Minister Sergey V. Lavrov said working directly with Turkey on the evacuation deal was more efficient than fruitless get&togethers with the U.S. On Tuesday, Mr. Lavrov said the International Syria Support Group, which he and Mr. Kerry led since 2015, had turned out important documents, but has been unable to play its due important role in seeing to it that adopted decisions are implemented.

The State Department spokesman, John Kirby, said on Tuesday that Mr. Kerry had spoken with Mr. Lavrov and Turkey's foreign minister by phone, and he expressed skepticism that the new effort would be successful.

யுத்தத்தின் ஆரம்ப வருடங்களில் அமெரிக்க ஆதரவு குழுப் படைகளுக்காக துருக்கி அளித்த ஆதரவிலிருந்து ஒரு முற்றுமுழுதான திருப்பமெடுத்து, இம் முன்முயற்சியானது துருக்கியிலிருந்து வந்த அதிகாரிகளால் புகழப்பட்டன. இப்பொழுது நாம் போராளிகளிடமிருந்து கிழக்கு அலெப்போவை விடுவிப்பதற்கு, அலெப்போவிலிருந்து எதிர்த்தரப்பு குடும்பங்களை வெளியேற்றுதற்கு ஒரு மிகப் பெரிய வெற்றிகரமான நடவடிக்கையை அவதானித்துக் கொண்டிருக்கிறோம், என்று துருக்கி தேசிய பாதுகாப்பு அமைச்சர் விக்ரி இஸிக் கூறினார். ( Now we are observing a very successful operation to liberate eastern Aleppo from fighters, the evacuation of the families of the opposition from Aleppo, said Turkish National Defence Minister Fikri Işık)

(கேள்வி தொடரும்...)





# தமிழ்த் தேசிய எழுச்சி

ஈழத் தமிழினத்தின் தேச விடுதலை பற்றி சிந்தனைப் புரட்சியை முன்னெடுத்தவர்களுள் விடுதலைப் புலிகளின் தத்துவ ஆசிரியரான அன்ரன் பாலசிங்கம் மிக முக்கியமானவர். அரசியல் ஞானம்மிக்க தத்துவ ஆசிரியர்.

ஈழத் தமிழினத்தின் உயரிய வரலாற்றுப் பதிவு ஏடான 'போரும் சமாதானமும்' என்ற நூலை அவர் படைத்திருக்கின்றார். இலங்கைத் தீவில் தமிழ்த் தேசிய எழுச்சி பற்றி அந்நூலில் அவர் குறிப்பிடும் நுட்பமான – நுண்ணியமான – விடயங்களை இக்கட்டுரைத் தொடரில் நாம் அறிந்து கொள்ளலாம்.



11

## தனியரசு நிறுவ தமிழ் மக்கள் கொடுத்த ஆணை

விடுதலைப் புலிகள் இயக்கம் தமது அரசியல் இராணுவக் கட்டமைப்பை நிறுவி, அவற்றை வலுப்படுத்தி விரிவாக்கம் செய்வதில் ஒருபுறம் ஈடுபட்டிருக்க மறுபுறம் தமிழ் அரசியல் அரங்கில் முன்னெப்பொழுதும் நிகழாத மாபெரும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் இடம்பெற்றன.

தமிழர்களுக்கு எதிராக ஒடுக்குமுறை தாங்கொணா அளவுக்கு உக்கிரமடைந்த காலகட்டம் அது. தமிழ், சிங்கள தேசங்கள் மத்தியில் முரண்பாடு முற்றி, இன இணக்கப்பாடும் சகவாழ்வும் சாத்தியமற்றது என்ற நிலைமை உருவாகியிருந்தது. இக்கால கட்டத்தில்தான் தமிழீழ விடுதலைப் புலிகள் வலுமிக்க இயக்கமாக உருவாகி, உருப்படியான செயற்திட்டத்தை முன்வைக்குமாறு தமிழ் அரசியல் கட்சிகள் மீது அழுத்தம் செலுத்தியது. இப்படியான வரலாற்றுச் சூழ்நிலையில், 1976 மே மாதம் தமிழர் ஐக்கிய முன்னணி யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டையில் தேசிய மாநாடு ஒன்றைக் கூட்டியது. அம் மாநாட்டில் தமிழ் இனத்துக்கு தேசிய விடுதலை கோரும் வரலாற்றுத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இந்த முக்கிய கூட்ட அமர்வுக்கு, எஸ்.ஜே.வி.செல்வநாயகம் தலைமை தாங்கினார். தமிழர் ஐக்கிய முன்னணி என்ற பெயரை மாற்றி தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணி என்று அழைக்கும் தீர்மானமும் இம் மாநாட்டில் நிறைவேறியது. தமிழீழத் தனியரசை நிறுவும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தீர்மானமும் இங்கு நிறைவேறியது. அந்தத் தீர்மானம் வருமாறு:

''தமிழர் விடுதலை முன்னணியின் முதலாவது தேசிய மாநாடு, வட்டுக்கோட்டைத் தொகுதியில் உள்ள பண்ணாகத்தில் 1976 மே 14ஆம் நாள் நடைபெற்றபோது கீழ்க் கண்ட பிரகடனம் செய்யப்பட்டது. இலங்கை தமிழ் மக்கள், ஐரோப்பிய ஆக்கிரமிப்பாளர்களின் ஆயுத பலத்தால் வெற்றி கொள்ளப்படும் வரை, சிறப்பு வாய்ந்த பழம்பெரும் மொழி, மதங்கள்,தனித்துவமான பண்பாடு, பாரம்பரியம் ஆகியனவற்றை கொண்டிருந்ததோடு, பல நூற்றாண்டுகளாக ஒரு தனித்துவமான பிரதேசத்தில் தனியரசை அமைத்து சுதந்திரமாக வாழ்ந்த வரலாறும் உடையவர்கள். இவற்றுக்கு மேலாக, தங்களது சொந்த மண்ணில் தனி இனமாக தங்களைத் தாங்களே ஆட்சிபுரிந்து வாழவேண்டும் என்ற உறுதிப்பாடும் உடையவர்கள். இத்தகைய பண்புகளைப் பெற்றவர்கள் என்பதால் தமிழர்கள் சிங்களவர்களிடம் இருந்து வேறுபட்ட தனித்துவமான தேச அமைப்பைக் கொண்டவர்கள். இலங்கையின் 1972 ஆம் ஆண்டின் குடியரசுக்கான அரசியல் யாப்பு, புதிய குடியேற்ற எஜமான்களாகிய சிங்களவர்களின் ஆட்சியின் கீழ் தமிழர்களை ஓர் அடிமை இனமாக மாற்றியுள்ளது. தவறான வழியில் பெற்றெடுத்த ஆட்சி அதிகாரத்தைக் கொண்டு சிங்களவர்கள் தமிழ் மக்களின் நிலவுரிமை, மொழியுரிமை, குடியுரிமை, பொருளாதார வாழ்வுரிமை, கல்வி உரிமை, வேலைவாய்ப்புரிமை ஆகியனவற்றை மறுத்து, அவர்களது தேசியக் கட்டமைப்பின் அடிப்படைகளையே அழித்துள்ளனர். ஆகவே, தமிழீழ தனியரசு நிறுவுவது குறித்து வடகிழக்குக்கு வெளியே வாழும் பெருந்தோட்ட தொழிற்சங்கமாகிய இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தெரிவித்த தயக்கத்தை கருத்தில் எடுக்கும் அதே வேளை, தமிழர் தேசத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும்பொருட்டு, ஒவ்வொரு தேசத்துக்கும் உரித்தான சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில், சுதந்திரமான இறையாண்மையுடைய, மத சார்பற்ற, சோசலிச தமிழீழ அரசு மீளப்பட்டு மீள்நிர்மாணம் செய்யப்பட வேண்டுமென இம் மாநாடு தீர்மானிக்கிறது.''

தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணியினர் முன்வைத்த தனியரசு கோரிக்கையின் பரீட்சார்த்த களமாக 1977 ஜூலை பொதுத்தேர்தல் அமைந்தது. அரசியல் சுதந்திரம் கோரி தேசியப் போராட்டம் ஒன்றைத் தொடுப்பதற்குத் தெளிவான மனு ஒன்றைத் தமிழ் மக்களிடம் கேட்டு கூட்டணியினர் தேர்தலில் போட்டியிட்டனர். அதற்கேற்ப அவர்களது தேர்தல் விஞ்ஞாபனமும் பின்வருமாறு அமைந்தது:

''தமிழ் இனம் சுயநிர்ணய அடிப்படையில் தனது தாயக பூமியில் இறையாண்மையை நிறுவத் தீர்மானம் எடுத்தாக வேண்டும். சிங்கள அரசுக்கும் உலகத்துக்கும் இந்தத் தீர்மானத்தைப் பிரகடனம் செய்வதற்கு ஒரே வழி, தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணிக்கு வாக்களிப்பதேயாகும். இவ் வாக்குகளால் தேர்தெடுக்கப்படும் தமிழ் பேசும் பிரதிநிதிகள், இலங்கைத் தேசிய அரச மன்ற உறுப்பினர்களாக இயங்கும் அதேவேளை, தமிழீழத் தேசிய மன்றமாகவும் தம்மை வரித்துக் கொண்டு தமிழீழ அரசுக்கான அரசியல் யாப்பு ஒன்றை வரைந்து, அந்த யாப்பை அமைதி வழிகளாலோ, நேரடி நடவடிக்கையாலோ, போராட்டத்தாலோ நடைமுறைக்குக் கொண்டு வந்து தமிழீழத்தின் சுதந்திரத்தை நிறுவ வேண்டும்.''

தமிழரின் தேசிய இனப்பிரச்சினையைப் பொறுத்தவரையில் இப் பொதுத்தேர்தலின் தீர்ப்பு மிகவும் முக்கியமானதாக அமைந்தது. சுதந்திரமான தமிழ் அரசை நிறுவுவதற்கான மக்கள் ஆணை கோரியே இந்தத் தேர்தல் நடைபெற்றது. கூட்டணியினர் கோரிய மனுவுக்கு அமோக ஆதரவு தெரிவித்து தமிழ் மக்கள் வாக்களித்தனர். இத்தேர்தல் வாயிலாக வடகிழக்கில் கூட்டணியினர் 17 ஆசனங்களில் வெற்றி பெற்றனர். உருப்படியான நடவடிக்கைகளை மேற்கொண்டு தனித் தமிழ் அரசை நிறுவும் பெரும் பொறுப்பு, இந்தத் தேர்தலில் தீர்ப்பு மூலம் கூட்டணி தலைமையிடம் ஒப்படைக்கப்பட்டது. ஆனால் தாம் எதற்காக தெரிவு செய்யப்பட்டார்களோ அந்த இலட்சியத்தை அடைவதற்கான அரசியல் தூரநோக்கோ, நடைமுறைச்சாத்தியமான செயற்திட்டமோ தமிழ் நாடாளுமன்ற தலைவர்களிடம் இருக்கவில்லை. அரசியல் சுதந்திரம் நோக்கிய பாதையில் உருப்படியான நடவடிக்கைகள் எதையுமே எடுக்கத்தவறிய அவர்கள் நாடாளுமன்ற இருக்கைகளில் ஒட்டிக்கொண்டிருந்தார்கள்.



ஜே.ஆர்.ஜெயவர்த்தன தலைமையில் இயங்கிய வலதுசாரி ஐக்கியதேசிய கட்சி, 1977 பொதுத் தேர்தலில் மிகப்பெரும் வெற்றியீட்டி 85 விழுக்காடு இருக்கைகளை நாடாளுமன்றத்தில் கைப்பற்றியது. பாரம்பரிய இடதுசாரிக் கட்சிகள், ஓர் இருக்கையையேனும் பெறாது முற்றாகத் தோற்கடிக்கப்பட்டன. வரலாற்றில் முதல் தடவையாக நாடாளுமன்றத்தின் முதல் நிலை எதிர்க்கட்சியாக தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி இடம் வகித்தது. இறையாண்மையுடைய தனித் தமிழ் அரசாக திகழ்வதற்கான கோரிக்கையோடு தமிழர் ஒரு புறமும், சுதந்திரமாக வாழவிரும்பும் தமிழினத்தை அடிமைப்படுத்தி, மேலாண்மை செலுத்துவதற்கு முற்றுமுழுதான அரசதிகாரம் கொண்ட சிங்களக் கட்சி மறுபுறமுமாக நாடாளுமன்றம் மோதலுக்கான களமாகியது. தேர்தல் முடிந்தகையோடு, இன முரண்பாடு கூர்மை அடைந்தது. தமிழருக்கு எதிராகத் தொடுக்கப்பட்ட இனக் கலவரம் முன்பைவிட குரூரம் மிகுந்ததாக தோற்றம் எடுத்தது.

நாடெங்கும் பரவிய இனவெறிக் கலவரத்தில் நூற்றுக்கணக்கான தமிழர் படுகொலை செய்யப்பட்டனர். ஆயிரக்கணக்கானோர் அகதிகளாயினர். பலகோடி பெறுமதியான தமிழர் சொத்துக்கள் அழிக்கப்பட்டன. அரச காவல் துறையினரும், ஆயுதப் படையினரும் பகிரங்கமாக காடையருடன் இணைந்து தீ வைத்தல், கொள்ளையடித்தல், பாலியல் வல்லுறவாடல், கொலை புரிதல் ஆகியனவற்றில் ஈடுபட்டனர். நாடு முழுவதையும் உலுப்பிக் கொண்டிருந்த இனவெறி வன்செயல்களைக் கட்டுப்படுத்துவதற்குப் பதிலாக, அரச தலைவர்கள் இனவெறியை மேலும் தூண்டும் அறிக்கைகளை வெளியிட்டுக் கொண்டிருந்தனர்.

இந்த இனவெறிக் கலவரம் தமிழ் அரசியல் களத்தில் ஆழமான பாதிப்பை ஏற்படுத்தியது. தனியரசை நிறுவும் தேசிய சுதந்திரத்துக்காகப் போராட வேண்டும் என்ற தீவிரவாத இளைஞரின் உறுதிப்பாட்டுக்கு இந்த நிகழ்வானது மேலும் உரமேற்றியது. தமிழ் நாடாளுமன்றத் தலைமையின் கையாலாகாத்தனத்தையும் இது அம்பலப்படுத்தியது. தமிழ் மக்களுக்கு அளித்த வாக்குறுதியை நிறைவேற்றத் தவறிய தமிழ் அரசியல் தலைவர்கள், தங்களது அரசியல் வாழ்வை நியாயப்படுத்த அரசுடன் இணைந்து போகவும் வழி தேடினார்கள். அதிபர் ஜே.ஆர்.ஜெயவர்த்தன தனக்கேயுரிய சாணக்கிய தந்திரத்தோடு செயற்பட்டார். சுதந்திரத் தனித் தமிழ் அரசை நிறுவும் கொள்கையில் தமிழ்த் தலைவர்கள் உறுதியாக இருக்கவில்லை என்பதையும் மாற்று அரசியற் தீர்வுக்கு வழிதேடிக் கொண்டிருக்கிறார்கள் என்பதையும் ஜெயவர்த்தன அறிந்து கொண்டார். ஆகவே, சிங்கள அரசுக்கு உண்மையான அச்சுறுத்தல், போராளி இளைஞரின் புரட்சிகர அரசியலே என்று அவர் உணர்ந்து கொண்டார். எனவே, விடுதலைக்கான போரொலி எந்தத் தளத்திலிருந்து வருகிறதோ, அந்தப் புரட்சிகர இளைஞர் தளத்தை நசுக்குவதற்கு அனைத்து அடக்குமுறை வழிகளையும் புதிய அரசு கையாண்டது. ஈவிரக்கமற்ற ஒடுக்குமுறையைக் கைக்கொண்ட சிங்கள அரசு, தமிழ் இளைஞர்களை ஒடுக்குவதற்கு மேலதிக அதிகாரங்களை காவல்துறைக்கும் இராணுவத்தினருக்கும் வழங்கியது. அரச அடக்குமுறை ஒரு புறமும் அதற்குச் சவாலாக ஆயுத எதிர்ப்புமுறை மறுபுறமுமாக, ஆயுதப் போராட்டம் அனல் கக்கும் உக்கிரத்தில் தமிழர் தாயகம் எங்கும் பரவியது.

(தொடரும்...)

## உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் ஜன. 12 இற்கு முன் வெளியிடப்படும்

கொழும்பு, டிசெ.30

நடைபெற்று முடிந்த க.பொ.த. உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் எதிர்வரும் 12 ஆம் திகதிக்கு முன்னர் வெளிவரும் என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் டபிள்யு. எம்.என்.ஜே.புஷ்பகுமார தெரிவித்துள்ளார்.

இம்முறை தொழில்நுட்ப விஞ்ஞானப் பிரிவில் தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கை 30 ஆயிரத்துக்கும் அதிகமாகக் காணப்படுகின்றமை பெறுபேறுகள் தாமதமடைவதற்கு காரணம் என்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இதேவேளை 2015 ஆம் ஆண்டுக்கான உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள், 2016 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 3 ஆம் திகதியே வெளியிடப்பட்டது என்றும் பெறுபேறுகள் தாமதமாகவுள்ளதாக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்களை ஏற்க முடியாது என்றும் ஆணையாளர் நாயகம் மேலும் கூறியுள்ளார். (எ)

## இரத்தினக் கல் தோண்டிய இருவர் சாவு

கொழும்பு, டிசெ.30

இரத்தினபுரி மாவட்டத்தில் அமைந்துள்ள களுகங்கை, லக்கல பகுதிக்கு அருகிலுள்ள இரத்தினக்கல் தோண்டும் போது இடிந்து விழுந்ததில், பணியாளர்கள் இருவர் உயிரிழந்துள்ளனர். அத்துடன் 3 பேர் படுகாயமடைந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

ஹொட்டடுயமுன்ன மற்றும் அட்றகல்லவே பகுதிகளைச் சேர்ந்த கமதேகெதர ரட்ணபால (வயது 52) மற்றும் சிமான் பெரேரா (வயது 75) ஆகியோரே, சம்பவத்தின் போது உயிரிழந்தவர்களாவர்.

காயமடைந்தவர்கள் பல்லேகம பகுதியிலுள்ள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை லக்கல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

## இந்துக்கோயில்களில் திருப்பணி செய்ய எவருடைய அனுமதியும் தேவையில்லை

### சிவசேனை அமைப்பு தெரிவிப்பு



திருகோணமலை, டிசெ.30

புத்தசாசன அமைச்சின் விதிகளுக்கு அமையப் புராதன இந்துக் கோயில்களில் திருப்பணி செய்வதற்கு எவரிடமும், எப்பொழுதும் அனுமதி பெறத் தேவையில்லை என்று சிவசேனை அமைப்பின் தலைவர் மறவன்புலவு க. சச்சிதானந்தன் தெரிவித்துள்ளார் .

திருக்கோணேஸ்வரம் அன்னதான மடம் கட்டுமானப் பணியில் ஈடுபட்டுள்ள அறங்காவலர் அருள் சுப்பிரமணியம் மீது சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இலங்கை அரசு முயற்சிப்பது கடும் கண்டனத்துக்குரியது என்று தெரிவித்து நேற்றுமுன்தினம் அவர் விடுத்துள்ள செய்திக்குறிப்பிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்தச் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

''திருகோணமலையின் மூத்த குடிமகன், எழுத்தாளர், கவிஞர், படைப்பாளியுமான அருள் சுப்பிரமணியம் மீது சட்ட நடவடிக்கை என்பது இலங்கையில் வாழும் இந்து மக்கள் மீதான சட்ட நடவடிக்கைக்கு ஒப்பானதாகும்.

திருகோணமலையின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் திருக்கோணேஸ்வரம் ஆலய அறங்காவலராக இருந்தவர். சிறந்த இந்துவான அவரும் அருள் சுப்பிரமணியம் மீதான சட்ட நடவடிக்கையை ஏற்றுக் கொள்ளமாட்டார்.

இந்துக்கள் இலங்கையில் சமாதானமாகவும், அமைதியாகவும் வாழ்வதற்குரிய சூழ்நிலையில்லை என்பதை உலகில் வாழும் இந்துக்கள் கவ்னத்தில் எடுத்துக் கொள்வார்கள்.

அருள் சுப்பிரமணியம் மீதான சட்ட நடவடிக்கை மேற்கொள்ள முயல்வதைச் சிவசேனை கடுமையாகக் கண்டிப்பதை உறுதி செய்கிறது.'' என்றுள்ளது. (எ)

## தினசரி ராசி பலன் 30.12.2016

| | |
|---|---|
| சுபநேரம் | : காலை : 9.15 – 10.15 |
| | மாலை : 4.45 – 5.45 |
| ராகு காலம் | : 10.30 – 12.00 |
| குளிகன் | : 7.30 – 9.00 |
| எமகண்டம் | : 3.00 – 4.30 |

ஜோதிட ஜோதி P.ராமன் பட்டாச்சாரியார்
ஸ்ரீ ஜெய மாருதி ஜோதிட நிலையம்
கும்பகோணம், தமிழ்நாடு.
(maruthi_jaya2003@yahoo.co.in)

கீழ் நோக்கு நாள்

**மேஷம்:** சாந்தம் - மனக் குழப்பங்கள் குறைந்து வாழ்வில் சாந்தம் காணும் நாள்.

**ரிஷபம்:** உயர்வு - அனைத்துக் காரியங்களிலும் முயற்சியுடன் செயற்பட்டால் உயர்வு ஏற்படும்.

**மிதுனம்:** இன்று உங்களுக்கு சந்திராஷ்டமம் என்பதால் எடுக்கும் அனைத்துக் காரியத்திலும் நிதானம் தேவை. சந்திராஷ்டமம் : மிருகசீரிடம் 3,4 ஆம் பாதங்கள் , திருவாதிரை

**கடகம்** : சிந்தனை - வளமான வாழ்க்கைக்குத் தேவையான ஆற்றல்கள் அறிவுச் சுடர்விடும்.

**சிம்மம்** :ஆதரவு - இன்று உறவினர்களாலும், அந்நியர்களாலும் ஆதரவு கிடைக்கும் நன்னாள்.

**கன்னி:** முயற்சி - நம்பிக்கையுடன் ஈடுபடும் அனைத்துக் காரியங்களிலும் முன்னேற்றம் ஏற்படும்.

**துலாம்:** பொறுமை - நிதானத்தைக் கடைப்பிடித்து நிம்மதியை நாடும் நாள்.

**விருச்சிகம்:** நஷ்டம் - அளவான ஆசைகள் இருப்பது இழப்பின் அளவைக் குறைக்கும்.

**தனுசு:** கவலை - பண்டம் பரிமாற்றங்களில் வாக்குத் தவறுவதால் கவலைகள் மனதை ஆளும்.

**மகரம்:** ஆர்வம் - செய்யும் செயல்களில் கூடுதல் ஈடுபாட்டுடன் வாழ்வில் முன்னேற்றம் காணும் நாள்.

**கும்பம்:** பக்தி - தெய்வ வழிபாடுகள் செய்ய முயற்சிகள் முன்னேற்றம் காணும்.

**மீனம்:** நன்மை - நீண்ட நாளைய ஆசைகள் நிறைவேறி நன்மைகள் பலவும் ஏற்படும்.

## 2017 ஆம் ஆண்டுக்கான எண்கணித பலன்கள்

'எண்கள் எதையும் செய்யும்'
2017ஆம் ஆண்டுக்கான எண்கணித பலன்கள்
அன்பான வாசகர்களே, பிறந்த திகதி தெரியாதவர்கள் தங்களது ஆங்கிலப் பெயரின் முதல் எழுத்தின் அடிப்படையிலும் கீழ்க்கண்டவாறு பலன்களைத் தெரிந்து கொள்ளலாம்.

### பொதுப்பலன்


இந்த ஆண்டு தன்பலம் தனக்கே தெரியும் என்பதுபோல ஒவ்வொருவரும் மிக உத்வேகமாக தனது பணிகளை கவனிக்க துவங்கவிருப்பதால் உற்பத்தித்துறை மிகப்பெரிய அளவில் முன்னேற்றம் பெறும். அரசாங்கத்தின் ஆதரவு மிக அதிகமாக வந்து குவியும் மக்களுக்கு. கால்நடைகள் அதிகரிக்கும். நில விற்பனை பெருகும். சாதாரண பதவியில் இருப்போர் தமது விடாமுயற்சியால் நம்பமுடியாத ஏற்றங்களை அடைவர். கண் சம்பந்தமான நோய்கள் பலருக்கு வரலாம். இதற்கான முன்னெச்சரிக்கை அவசியம். அதிகளவில் துன்புறுத்தி வந்த நோய்கள் அகன்றுவிடும். ஆசாரமாக நடந்து ஆண்டவன் பற்றுடையவர்கள் அதிக அளவில் ஆனந்தமான வாழ்வை பெறுவர். பொதுப்பணிகளில் மிகுந்த ஆர்வம் கொண்ட பலர் அரசாங்க திட்டங்களை மக்களுக்கு கொண்டு செல்வதில் அதிகமான உதவிகரமாக இருப்பதால் மக்கள் கூடுதல் பலன்களை பெற்று மகிழ்வர்.

குறிப்பாக உலகத்தின் கிழக்குப் பகுதியில் அமைந்துள்ள நாடுகள் வெற்றிமேல் வெற்றி பெறும். பொருளாதார ஏற்றத்தை அள்ளிக் குவிக்கும். நாட்டின் தலைவர்கள் உலக மத்தியில் போற்றப்படும் அளவுக்கு அரசின் திட்டங்களை வகுத்து செயற்படுவர். இந்த ஆண்டின் துவக்கம் 1ஆம் எண்ணிலும், ஞாயிறு அன்று துவங்குவதாலும், 1.1.2017 இன் கூட்டு எண் 3–ஆக வருவதாலும், எல்லா இடங்களிலும் நீதி, நேர்மை, ஒழுங்கு, கட்டுப்பாடு மிகுந்து காணப்படுவதால் தேசத்தில் விரோதத்தை ஏற்படுத்துவோர் பெரும் பின்னடைவைச் சந்திக்க நேரிடும். நாட்டின் பெயர் எண் 1ஆக வரும் நாடுகளும், 3ஆம் எண்ணைக் கொண்ட நாடுகளும் உலக மத்தியில் பெரும் செல்வாக்கை நிலை நாட்டும்.

மேலும் இந்தியாவின் பொருளாதார ஏற்றம் வானளவில் உயரும். இரும்பு, பெற்றோலிய உற்பத்தி, புடைவைத் தொழில், மருந்து, மருத்துவ நிலையங்கள், கல்வி, அரசாட்சி கொடி கட்டிப் பறக்கும். மொத்தத்தில் நல்லாட்சியாளர்களின் நிலை நினைத்துப் பார்த்திராத அளவுக்கு உயர்ந்திடும்.


### எண் 4

- 4, 13, 22, 31 திகதிகளில் பிறந்தவர்களுக்கும், பெயரின் முதல் எழுத்தாக D, T, M -ஐ பெற்றவர்களுக்கும், பெயர் எண் 4 என அமைந்தவர்களுக்கு இந்த ஆண்டு, அவ்வப்போது சிறு சிறு பிரச்சினைகள் வந்தாலும், சுமுகமாகவே முடியும்.
- செலவுகளை திட்டமிட்டு செய்யத் தவறினால் நாலாபக்கமும் நற்பெயர் கெடும். கவனம்.
- மனதில் நினைத்ததுபோல் காதலில் வெற்றி பெற்றாலும், பெற்றோர்களால் தொடர் அவதிக்கு உள்ளாகலாம் இளைஞர்கள்.
- நீர் சம்பந்தமானதும், மூட்டு வலியும், வயிறு பிரச்சினைகளும் அவ்வப்போது உபாதைகளை ஏற்படுத்தலாம். கவனம்.
- குறிப்பாக பொருள்களை ஏற்றுமதி, இறக்குமதி செய்யும் நிறுவனங்கள் சட்டச் சிக்கல்களை ஏற்படுத்திக்கொள்ளாமல் இருக்க கூடுதல் கவனம் செலுத்த வேண்டும்.
- நண்பர்களை நம்பி ஏமாந்து போகும் வாய்ப்பும், அரசாங்கத்தில் கேட்ட உதவிகள் கிடைப்பதும் என நன்மைகளையும் மாறுதலான பலன்களையும் பெறுவர் வியாபாரிகள்.
- எதிர்பாராத பதவி உயர்வு நிறைவைத் தரும். கார், வீடு போன்றவை பெற கடன் தொகைகளும் கிடைத்து மகிழ்வர் பணியாளர்கள்.
- அரசியல் பதவிகள் தேடி வரலாம். கூடவே இருப்பவர்களால் ஆபத்துக்களும் வரலாம். உசார் அரசியல்வாதிகளே.
- வெளிநாடுகளுக்குச் சென்று தங்களின் திறமைகளை மேம்படச் செய்து வெற்றி பெற்றாலும் மனதில் சஞ்சலம் இருக்கும் கலைஞர்களுக்கு.
- ஏற்றமும் இறக்கமும் உண்டு. விவசாயிகள் கடன் பெற கால்கடுக்க அலைய நேரிடும். கால்நடைகளால் நன்மை உண்டு.
- குடும்ப சூழ்நிலையில் ஏதேனும் குதர்க்கங்களை ஏற்படுத்த சுற்றமும் நட்பும் அதன் பணிகளைச் செவ்வனே செய்யலாம். பெண்களே உசார்.
- குறைவில்லா கூடுதல் உழைப்பு அதிக புள்ளிகளைப் பெற்றுத் தரலாம் மாணவர்களுக்கு.



கலாநிதி ஜே.என்.எஸ்.செல்வன் Ph.D.,
எண் கணித ஆலோசகர்
வாஸ்து நிபுணர்.நிலத்தடி நீர் நிபுணர்.
Email : jnsnumerro@yahoo.co.in

# சந்தேகங்கள் ஏற்படுத்திய ரவிராஜ் கொலைத் தீர்ப்பு




செல்வரட்ணம் சிறிதரன்

ரவிராஜ் கொல்லப்பட்டு பத்து வருடங்களுக்குப் பின்னர், 2016 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 24 ஆம் திகதி நள்ளிரவு 12.25 மணி.

இலங்கை அரசின் நீதித்துறை, அமைதியும் மகிழ்ச்சியும் கூடிய கிறிஸ்மஸ் பண்டிகைப் பரிசாக ரவிராஜ் கொலை வழக்கின் எதிரிகள் ஐந்து பேரையும் குற்றமற்றவர்கள், நிரபராதிகள் என பிரகடனம் செய்து தீர்ப்பளிக்கின்றது.

இந்த நள்ளிரவுத் தீர்ப்பையடுத்து, கிறிஸ்மஸ் பண்டிகைக் காலத்து மகிழ்ச்சியில் திளைத்திருந்த பலரும் அதிர்ச்சியில் உறைந்து போகின்றனர்.

ரவிராஜ் கொலைச் சம்பவம் தொடர்பில், உடனடியாக ஆரம்பிக்கப்பட்ட விசாரணைகள் ஓய்ந்து, ஒன்பது வருடங்களுக்குப் பின்பே, சந்தேகத்தின் பேரில் ஆள்கள் கைது செய்யப்பட்டனர்.

அதனைத் தொடர்ந்து ஒரு வருடம் கழித்து, இந்தக் கொலை வழக்கு 2016 செப்ரெம்பர் மாதம் 7 ஆம் திகதி கொழும்பு மேல் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

ரவிராஜ் கொலை வழக்கின் நீதிமன்ற விசாரணைகளுக்காக பத்து வருடங்கள் காத்திருக்க வேண்டியதாக இருந்தது என்று இந்த வழக்கில் பாதிக்கப்பட்டவர்கள் தரப்பில் நீதிமன்றத்தில் முன்னிலையாகியிருந்த தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும், சட்டத்தரணியுமாகிய எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்திருந்தார்.

இந்த வழக்கில் ஆறு பேருக்கு எதிராக 5 குற்றச்சாட்டுக்களைக் கொண்டதாக சட்டமா அதிபர் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் 2016 ஜூலை மாதம் குற்றப்பத்திரம் தாக்கல் செய்திருந்தார்.

ஒக்ரோபர் மாதம் 27 ஆம் திகதி ஏழு பேர் கொண்ட சிங்கள அறங்கூறும் விசேட அவையினர் முன்னிலையில் இந்த வழக்கை விசாரணை செய்வதற்கான அனுமதியை மேல் நீதிமன்ற நீதிபதி மணிலால் வைத்தியதிலக்க வழங்கியிருந்தார்.

எதிரித்தரப்பு சட்டத்தரணிகள் முன்வைத்த வேண்டுகோளை ஏற்று இந்த அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

இதனையடுத்து தொடர்ச்சியாக ஒருமாத காலம் நடைபெற்ற விசாரணைகளின் முடிவில் 23 ஆம் திகதி நள்ளிரவு வரையில் ஆலோசனைகளை நடத்திய அறங்கூறும் அவையினர் முதல் தடவையாக நள்ளிரவுக்குப் பின்னர் 24 ஆம் திகதி அதிகாலை 12.25 மணியளவில் இந்த வழக்கில் எதிரிகள் ஐந்து பேரும் நிரபராதிகள் என்ற தமது ஏகமனதான முடிவை வெளியிட்டு, அவர்களை விடுதலை செய்வதாகத் தீர்ப்பளித்தனர்.

**முரண்பாடுகளும் கேள்விகளும்**

ரவிராஜ் கொலை வழக்கு விசாரணைகளில் காணப்படுகின்ற முரண்பாடுகளும், அவை தொடர்பில் எழுந்துள்ள கேள்விகளுமே இதற்குக் காரணமாகும் பொதுமக்கள் மற்றும் அரசியல்வாதிகளிடத்தில் பெரும் விசனத்தையும் சீற்றத்தையும் ஏற்படுத்தியுள்ளன.

இந்த வழக்கில் ஆறு பேருக்கு எதிராகக் குற்றம் சுமத்தப்பட்டிருந்தது. இவர்களில் சம்பத் என்றழைக்கப்படுகின்ற பிரசாத் சந்தன குமார, காமினி செனவிரத்ன, வஜிர என்றழைக்கப்படுகின்ற பிரதீப் சமிந்த என்ற மூவரும் கடற்படையைச் சேர்ந்தவர்களாவர்.

இவர்களில் இருவர் அதிகாரிகள் தரத்தினர். அத்துடன் சாமி என்றழைக்கப்படுகின்ற பழனிச்சாமி சுரேஷ், சிவகாந்தன் விவேகானந்தன் ஆகிய இருவரும் விடுதலைப்புலிகள் அமைப்பில் இருந்து பிரிந்து சென்ற கருணா குழுவைச் சேர்ந்தவர்கள். அத்துடன் பபியன் ரொய்ஸ்டன் டுசைன் என்பவர் மீதும் குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

வழக்கு விசாரணைகள் நடைபெற்ற போது குற்றம் சுமத்தப்பட்ட ஆறு எதிரிகளில் ஒருவர் உயிரிழந்துவிட்டதாக நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது. மிகுதி ஐந்து பேரில் இருவர் தலைமறைவாகிவிட்டனர் என்றும் அறிவிக்கப்பட்டு, அவர்கள் இல்லாமலேயே இந்த வழக்கு விசாரணை நடைபெற்றது.

ஐந்து எதிரிகளுக்கும் எதிராக சாதாரண குற்றச் சட்டம் மற்றும் விசேட சட்டமாகிய பயங்கரவாதத் தடைச் சட்டம் என்பவற்றின் கீழ் ஐந்து குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டிருந்தன.

விசேட சட்டமாகிய பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழேயும் குற்றம் சுமத்தப்பட்டிருப்பதால், இந்த வழக்கில் சாதாரண குற்றவியல் சட்டம் வலுவிழந்து போகின்ற நிலையில், அறங்கூறும் அவையினராகிய ஜூரிகள் சபை முன்னிலையில் இந்த வழக்கை விசாரணை செய்ய முடியாது என்று சட்டத்தரணி சுமந்திரன் ஆட்சேபனை தெரிவித்து, வாதம் புரிந்திருந்தார்.

அவருடைய வாதம் புறந்தள்ளப்பட்டது. அறங்கூறும் அவையினர் முன்னிலையில் விசாரணை நடத்துவதற்கான அனுமதி வழங்கப்பட்டது. இது ஒரு முரண்பாடு.

சுமந்திரனுடைய வாதத்தின்படி, இந்த வழக்கில் கையளிக்கப்பட்ட குற்றப்பத்திரிகையில் குற்றம் சுமத்தப்பட்ட ஆறு எதிரிகளுடன் சட்டமா அதிபரால் இன்னார் என்று அடையாளம் காணப்படாத வேறு சிலரும் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள எதிரிகளுடன் இணைந்து இந்தக் குற்றச் செயலைச் செய்திருந்தனர் என தெரிவிக்கப்பட்டிருந்தது.

> ஜூரிமார் மனச்சாட்சிப்படி நடப்பார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டாலும், ரவிராஜ் கொலை வழக்கில் மனச்சாட்சியும் செயற்படவில்லை; உண்மையான நீதியும் செயற்படவில்லை.

குற்றப் பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளபடி, சட்டமா அதிபருக்குத் இன்னார் என்று தெரியாதவர்கள் - அடையாளம் காணப்படாதவர்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளவர்களைக் கண்டுபிடித்து, அவர்களுக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று சுமந்திரன் தனது வாதத்தின்போது நீதிமன்றத்திடம் கோரியிருந்தார். ஆனால் அவருடைய கோரிக்கை உரிய முறையில் கவனத்தில் கொள்ளப்பட்டதாகத் தெரியவில்லை.

குற்றப்பத்திரம் ஒன்றில் பெயர் குறிப்பிட்ட எதிரிகளுடன் பெயர் குறிப்பிட முடியாத - இன்னார் என்று அடையாளம் காணப்படாதவர்களும் குற்றச் செயல்களுடன் சம்பந்தப்பட்டிருக்கின்றார்கள் என்று தெரிவித்து வழக்கு விசாரணை நடத்தப்பட்டிருக்கின்றது.

நீதிமன்றத்தில் குற்றம் சுமத்தப்படும்பொழுது யார் என்ன குற்றம் செய்தார் என்பது துல்லியமாகத் தெரிவிக்கப்பட வேண்டியது அவசியமாகும். ஆனால், இந்த வழக்கில் குற்றம் செய்தவர்கள் யார் என்பது முழுமையாகத் தெரிவிக்கப்படவில்லை.

பெயர் குறிப்பிடப்பட்டவர்களுடன் வேறு சிலரும் இந்தக் குற்றச் செயலில் சம்பந்தப்பட்டிருந்தார்கள் அல்லது குற்றச் செயலைத் திட்டமிட்டிருந்தார்கள் அல்லது குற்றச் செயலைச் செய்யுமாறு உத்தரவிட்டிருந்தார்கள் என்ற அனுமானத்துக்குரிய வகையில் தெரிவிக்கப்பட்டிருப்பது, இந்தக் குற்றப்பத்திரம் முழுமையானதா என்ற கேள்வியைச் சாதாரண மக்களிடமே ஏற்படுத்தியுள்ளது.

முழுமை பெறாத ஒரு குற்றப் பத்திரத்தின் அடிப்படையில் ஒரு வழக்கை விசாரணை செய்து தீர்ப்பளிப்பது, முழுமையானதொரு நீதித்துறை நடவடிக்கையாகுமா என்ற கேள்வியும் மக்கள் மனங்களில் எழுந்திருக்கின்றது.

இதற்கு சட்ட ரீதியான - சரியான விளக்கம் அளிக்கப்பட்டதாகவும் தெரியவில்லை.

அதே நேரத்தில் இந்த வழக்கு, நாட்டின் சட்டங்களை இயற்றும் ஓர் உயர்ந்த சபையாகிய நாடாளுமன்றத்தின் உறுப்பினர் ஒருவராகிய ரவிராஜுடன், அவருடைய மெய்ப்பாது காவலரானசிங்களவர்ஒருவரும்கொல்லப்பட்ட சம்பவம் பற்றியதாகும். அத்துடன் இந்த வழக்கில் நான்கு சிங்களவர்களும் இரண்டு தமிழர்களும் எதிரிகளாகக் குற்றம் சுமத்தப்பட்டிருந்தனர்.

இந்த நிலையில் முழுமையாக சிங்கள இனம் சார்ந்த அறங் கூறும் அவையினரைக் கொண்ட சபை - ஜூரி சபையால் விசாரணை செய்யப்பட்டு குற்றம் சாட்டப்பட்டவர்கள் அனைவருமே விடுதலை செய்யப்பட்டிருக்கின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

**மனச்சாட்சியுமில்லை நீதியுமில்லை**

போர்க்குற்ற வழக்குகளில் நீதி கிடைக்கமாட்டாது என்பது இலங்கையின் நீதித்துறையில் தமிழ் மக்களுக்குக் கிடைத்த அனுபவமாகும்.

அந்த வகையில் குமாரபுரம் கொலை வழக்கு, மயிலந்தனை கொலை வழக்கு என்ற வரிசையில் ரவிராஜ் கொலை வழக்கும் இணைந்து விட்டது. இந்த வழக்கின் தீர்ப்பு நீதிபதிகளைத் தலை குனியச் செய்திருக்கின்றது.

இலங்கையின் நீதித்துறை சுயாதீனமற்றது. படையினருக்கு எதிராக நீதி வழங்கமாட்டாது என்ற நிலைப்பாட்டை மீண்டும் ஒருமுறை உறுதியாக வெளிப்படுத்தியிருக்கின்றது.

இன ரீதியான போர்க் குற்றம் சார்ந்த வழக்குகளில் ஜூரி விசாரணை முறைமை பயன்படுத்தப்படும் போது நீதி கிடைக்கமாட்டாது என்பதற்கு குமாரபுரம் கொலை வழக்கு, மயிலந்தனை கொலை வழக்கு என்பன ஏற்கனவே உதாரணங்களாகியிருக்கின்றன.

குமாரபுரம், மயிலந்தனை மற்றும் ரவிராஜ் கொலை ஆகிய மூன்று வழக்குகளிலும் ஜூரிமார்கள் முழுப்பேரும் சிங்களவர்களாகவே இருந்தனர்.

ரவிராஜ் கொலைச் சம்பவத்தில் சிங்களவர் ஒருவர் கொல்லப்பட்டிருந்த போதிலும், இனரீதியான பார்வை மட்டுமல்ல, கடற்படையினரைக் குற்றம் சாட்டி எந்தவொரு சிங்களவரும் தீர்ப்பளிக்கமாட்டார் என்பதை நிரூபிக்கும் வகையில் அவர்களுடைய தீர்ப்புக்கான தீர்மானம் அமைந்திருக்கின்றது.

ஜூரிமார் மனச்சாட்சிப்படி நடப்பார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டாலும், ரவிராஜ் கொலை வழக்கில் மனச்சாட்சியும் செயற்படவில்லை; உண்மையான நீதியும் செயற்படவில்லை.

இனரீதியான பார்வையும் கடற்படையினரைக் காப்பாற்றுகின்ற நோக்கும் ரவிராஜ் வழக்கின் நிலைமையை மாற்றியமைத்துவிட்டது என்று சட்ட வல்லுநர்கள் கூறுகின்றார்கள்.

அரச படையைச் சேர்ந்தவர்களை குற்றவாளி என்று நீதிபதி தீர்ப்பளித்தால், அவர் பாதுகாப்புடன் இருக்க வேண்டியுள்ளது. அத்தகைய தீர்ப்பின் பின்னர் அவருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டால், அரசின் பாதுகாப்பு அவருக்கு உறுதியாகக் கிடைக்கும்.

அதேநேரம் சிங்கள ஜூரிகள், படை அதிகாரிகளைக் குற்றவாளி என்று தீர்ப்பளித்தால் அவர்கள் துரோகிகளாகத்தான் பார்க்கப்படுவார்கள்.

இத்தகைய ஆபத்தான நிலைமை இருப்பதை ரவிராஜ் வழக்கில் ஜூரிகளாகச் செயற்பட்டவர்கள் முன் கூட்டியே தெரிந்திருந்தார்களா என்பது தெரியவில்லை.

**ட்ரயல் அட் பார்**

ஒரு தமிழ் மகன் அதுவும் நாடாளுமன்ற உறுப்பினராகிய ரவிராஜ் கொலை செய்யப்பட்ட கொலை வழக்கில் 3 நீதிபதிகளைக் கொண்ட ட்ரயல் அட் பார் விசாரணை நடத்தியிருக்க வேண்டும். ஆனால் அது நடக்கவில்லை என்பது சட்டத்துறை சார்ந்தவர்களின் ஆதங்கமாகும்.

பொதுவாக தேசிய முக்கியத்துவம் மிக்க வழக்குகளையே ட்ரயல் அட் பார் முறையில் விசாரிப்பார்கள். எனவே, ரவிராஜ் கொலை வழக்கு தேசிய முக்கியத்துவம் வாய்ந்ததா என்ற கேள்வி இயல்பாகவே எழுகின்றது.

(16 ஆம் பக்கம் பார்க்க)

காலைக்கதிர் Kalaikkathir



# ஜெயலலிதாவின் இறப்பில் சந்தேகம்

## சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி அதிரடி

சென்னை, டிசெ.30

மறைந்த தமிழக முதல்வர் ஜெயலலிதாவின் மரணத்தில் தனக்குச் சந்தேகம் உள்ளதாக சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி வைத்தியநாதன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான வழக்கை, தலைமை நீதிபதி தலைமையிலான அமர்வுக்கு மாற்றியும் அவர் பரிந்துரை செய்துள்ளார்.

சென்னை, அப்பலோ மருத்துவமனையில், கடந்த செப்ரெம்பர் மாதம் 22 ஆம் திகதி அனுமதிக்கப்பட்ட முதல்வர் ஜெயலலிதா, கடந்த 5 ஆம் திகதி இரவு 11:30 மணிக்கு மரணமடைந்தார். அவர் மரணத்தில் சந்தேகம் உள்ளதாகக் கூறி, சென்னை உயர் நீதிமன்றத்தில் பல்வேறு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. சென்னை உயர் நீதிமன்ற நீதிபதிகள் வைத்தியநாதன், பார்த்திபன் ஆகியோர் அடங்கிய அமர்வு முன்பாக இது தொடர்பான வழக்கு நேற்றுக்காலை விசாரணைக்கு வந்தது.

இதன்போது, நீதிபதி வைத்தியநாதன் தனது கருத்தாகக் கூறியதாவது:

''முதல்வர் ஜெயலலிதா மரணத்தில் எனக்கு சந்தேகம் உள்ளது. அவர் குணமடைந்து வருகிறார், உணவு சாப்பிடுகிறார், நடைப்பயிற்சி மேற்கொள்கிறார் என்ற செய்திகள் வெளியாகின. ஆனால், திடீரென அவர் மரணம் அடைந்தது எப்படி? அவரைப் பார்க்க அவரது உறவினர்களை ஏன் அனுமதிக்கவில்லை. ஜெயலலிதாவின் உடல் நிலை குறித்து முழுமையான தகவல்களை ஏன் வெளியிடவில்லை.

இந்த வழக்கு விசாரணை தலைமை நீதிபதி தலைமையிலான அமர்வுக்கு மாற்றப் பரிந்துரைக்கப்படுகிறது.''

இவ்வாறு நீதிபதி கூறினார். (எ)

# கச்சதீவு ஒப்பந்தத்தை ரத்துச் செய்ய வேண்டும்

## மத்திய அரசிடம் தமிழக முதலமைச்சர் வலியுறுத்து



சென்னை, டிசெ.30

கச்சதீவை மீட்க இலங்கையுடனான ஒப்பந்தத்தை ரத்துச் செய்ய இந்திய மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தமிழக முதலமைச்சர் ஓ.பன்னீர் செல்வம் வலியுறுத்தியுள்ளார்.

கேரளா மாநிலம், திருவனந்தபுரத்தில் 27 ஆவது தென்மண்டல சபைக் கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் பன்னீர் செல்வத்தின் உரையை அமைச்சர் திண்டுக்கல் சீனிவாசன் வாசித்தார்.

அந்த உரையிலேயே இவ்வாறு முதலமைச்சர் வலியுறுத்தியுள்ளார்.

அதில் மேலும் கூறப்பட்டுள்ளவை வருமாறு:

'ஜெயலலிதாவின் மறைவுக்கு உங்களில் பலர் வருத்தமும், ஆறுதலும் தெரிவித்து இருந்தனர். அதற்கு நன்றி.

பாக்கு நீரிணைப் பகுதியில் மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமையைப் பாதுகாக்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இலங்கைச் சிறையில் அடைக்கப்பட்டுள்ள 51 தமிழக மீனவர்களையும் 114 படகுகள் மற்றும் உபகரணங்களையும் விடுவிக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

கச்சதீவை மீட்க 1974 ஆம் ஆண்டு இலங்கையுடன் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தை ரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.' என்றுள்ளது. (எ)

# 'ஜெ'க்கு நோபல் பரிசு வழங்குமாறு பொதுக்குழுக் கூட்டத்தில் தீர்மானம்

சென்னை, டிசெ.30

மறைந்த தமிழக முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கு நோபல் பரிசு வழங்கப்பட வேண்டும் என்று அ.தி.மு.க. பொதுக் குழுக் கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

மிகவும் பரபரப்பான அரசியல் சூழ்நிலையில், அ.தி. மு.க. பொதுக் குழு கூட்டம் சென்னை, வானகரம் ஸ்ரீவாரு திருமண மண்டபத்தில் நேற்று நடைபெற்றது. இதன்போது 14 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அதில் 11 ஆவது தீர்மானமாக ஜெயலலிதாவுக்கு நோபல் பரிசு வழங்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது.



எல்லோருக்கும் எப்பொழுதும் சத்தான உணவு என்பது சாத்தியமான இலட்சியமே என்பதை மெய்ப்பித்த முதலமைச்சர் அம்மாவுக்கு, மானுட சேவைக்கான பிலிப்பைன்ஸ் நாட்டின் ரமோன் மக்சையாய் விருது மற்றும் அமைதிக்கான நோபல் பரிசு வழங்கப்பட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும் என்று தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, ஜெயலலிதாவின் பிறந்த நாளை தேசிய விவசாயிகள் தினமாக மத்திய அரசு அறிவிக்க வலியுறுத்தியும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மேலும் நாடாளுமன்றத்தில் முதலமைச்சர் அம்மாவின் திருவுருவ வெண்கலச் சிலையை நிறுவ வேண்டும் என்று மத்திய அரசுக்குக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டத்தில் முதல்வர் ஓ. பன்னீர் செல்வம் உள்ளிட்ட கட்சியின் முக்கிய நிர்வாகிகள் பங்கேற்றிருந்தனர். (எ)

# 'காஷ்மீர் ரீடர்' பத்திரிகைக்கான தடை நீக்கம்

டில்லி, டிசெ.30

'காஷ்மீர் ரீடர்' தினசரிப் பத்திரிகைக்கு இந்திய அரசால் விதிக்கப்பட்டிருந்த தடை நீக்கப்பட்டது. இதற்கான தடை 2 நாள்களுக்கு முன்பு நீக்கப்பட்டது.

காஷ்மீரில், கடந்த ஒக்ரோபர் மாதம் தீவிர கிளர்ச்சி வெடித்த சமயத்தில், பொது அமைதியைக் குலைப்பதாகக் குற்றம் சாட்டப்பட்டு ஆங்கில மொழியில் வெளியாகும் 'காஷ்மீர் ரீடர்' பத்திரிகை மீது தடை விதிக்கப்பட்டது.

இந்நிலையில் உண்மையான செய்திகளை அரசு முடக்க முயற்சிப்பதாக மனித உரிமை அமைப்புகள் பத்திரிகைக்கான தடை தொடர்பில் கருத்துத் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (எ)

# 20ஆயிரம் தொண்டு நிறுவனங்களின் உரிமங்கள் இந்தியாவில் ரத்து!

டில்லி, டிசெ.30

வெளிநாடுகளில் இருந்து நிதியுதவி பெற்றுவரும் இந்தியாவில் உள்ள 20 ஆயிரம் தொண்டு நிறுவனங்களின் உரிமங்கள் ரத்துச் செய்யப்பட்டுள்ளன.

முறையான ஆவணங்கள் இல்லாமையால் உரிமம் ரத்துச் செய்யப்பட்டுள்ளதாக இந்திய மத்திய உள்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

இவ்வாறு வெளிநாடுகளிடமிருந்து நிதியுதவி பெறும் தொண்டு நிறுவனங்கள் ஜூன் மாதத்துக்குள் தங்களின் உரிமங்களைப் புதுப்பித்திருக்க வேண்டும். எனினும் அவகாசம் கொடுத்தும் இதுவரை புதுப்பிக்கப்படாமல் இருந்த தொண்டு நிறுவனங்களின் உரிமங்களையே இந்திய மத்திய உள்துறை அமைச்சகம் ரத்துச் செய்துள்ளது.

கடந்த நவம்பர் 4 ஆம் திகதி இதேபோன்று புதுப்பிக்கப்படாத 11 ஆயிரத்து 319 தொண்டு நிறுவனங்களின் உரிமங்கள் மத்திய அரசால் ரத்துச் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ)

# அழைப்பு வந்தால் அ.தி.மு.கவில் இணைவது குறித்து முடிவெடுப்பேன்

## இலட்சிய தி.மு.க. நிறுவனத் தலைவர் ராஜேந்தர் கூறுகிறார்



சென்னை, டிசெ.30

காங்கிரஸோடு கூட்டணி வகித்த தி.மு.கவோடு எந்தக் காலத்திலும் கூட்டணி வைக்க மாட்டேன், அ.தி.மு.கவில் இருந்து அழைப்பு வந்தால் அந்தக்கட்சியில் இணைவது குறித்து முடிவு செய்வேன் என்று தெரிவித்தார் இலட்சிய தி.மு.க. நிறுவனத் தலைவரும், திரைப்பட இயக்குநருமான டி. ராஜேந்தர்.

இதுதொடர்பில் திருச்சியில் அவர் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

''நான் ஜெயலலிதாவின் அபிமானி. ஏன் என்றால், ஈழத்தமிழர் விவகாரத்தில் அவர் கொண்டு வந்த தீர்மானம் என்னைக் கவர்ந்தது. அந்தக் கட்சியில் இருந்து அழைப்பு வந்தால் அ.தி.மு.கவில் இணைவது குறித்து முடிவு செய்வேன்.

காங்கிரஸ் கூட்டணியில் அங்கம் வகித்த தி.மு.க., காவிரி விவகாரத்தில் ஒரு துரும்பைக் கூடக் கிள்ளிப்போடவில்லை. இத்தனை நாள் ஜல்லிக்கட்டுக்குக் குரல் கொடுக்காத பா.ஜ.க. தற்போது குரல் எழுப்புவது ஏன்? முன்னாள் தலைமைச் செயலர் ராமமோகன ராவ் பின்னணி தொடர்பில் விசாரணை நடத்த வேண்டும். நாம் பலவீனப்பட்டு விட்டோம். இதை பா.ஜ.க. பயன்படுத்திக் கொள்கிறது.''- என்றார்.

# பிரதமர் மோடி இரங்கல்



டில்லி, டிசெ.30

இலங்கையின் முன்னாள் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்காவின் மறைவுக்கு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இரங்கல் வெளியிட்டுள்ளார்.

ரட்ணசிறி விக்ரமநாயக்காவின் ஆத்மா சாந்தியடைய வேண்டும் என்றும் அவரது குடும்ப உறுப்பினர்களுக்கு அனுதாபத்தையும் இந்திய பிரதமர் தெரிவித்துள்ளார். (எ)

# டில்லி துணை ஆளுநராகின்றார் அஜய் பைஜால்

டில்லி, டிசெ.30

டில்லியின் துணை நிலை ஆளுநராக அஜய் பைஜால் மிக விரைவில் பதவியேற்க உள்ளார்.

டில்லி துணை நிலை ஆளுநராக இருந்த நஜீப் ஜங் தனது பதவியை சமீபத்தில் ராஜினாமாச் செய்தார். அவரது ராஜினாமாக் கடிதத்தை நேற்று இந்திய ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி ஏற்றுக் கொண்டார்.

இந்தநிலையில், டில்லியின் துணை நிலை ஆளுநர் பதவிக்கு அஜய் பைஜால் பெயர் முன்மொழியப்பட்டுள்ளது. அதை சுஷ்மா ஸ்வராஜும் வழிமொழிந்துள்ளார். எனவே, அவர் கூடிய விரைவில் டில்லியின் துணை நிலை ஆளுநராகப் பொறுப்பேற்பார் என்று தெரிகிறது.



அஜய் பைஜால் முன்னாள் ஐ.ஏ.எஸ். அதிகாரியாகப் பணியாற்றியவர். அத்துடன் மத்திய அரசின் முக்கிய பொறுப்பான உள்துறைச் செயலாளராகவும் பதவி வகித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

# குடியேற்றங்களை நிறுத்தினால் இஸ்ரேலுடன் பேச்சுக்குத் தயார்!

## இஸ்ரேல் பிரதமரை விசாரிக்க உத்தரவு




ஜெருசலேம், டிசெ.30

இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு மீதான இரு ஊழல் வழக்குகளை விசாரிக்கும்படி அந்தநாட்டின் தலைமை சட்டமா அதிபர் உத்தரவிட்டுள்ளார்.

ஜேர்மன் நாட்டில் இருந்து நீர்மூழ்கிக் கப்பல்களை வாங்கியபோது ஊழலில் ஈடுபட்டார் என்று இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு மீது பரவலான குற்றச்சாட்டு இருந்து வருகிறது. இந்தக் குற்றச்சாட்டை அவர் தொடர்ந்து மறுத்து வந்துள்ளார்.

இந்தநிலையில், நீர்மூழ்கிக் கப்பல் ஊழல் மற்றும் விவரம் வெளியிடப்படாத மற்றொரு ஊழல் தொடர்பாக இஸ்ரேல் பிரதமர் மீது வழக்குப்பதிவு செய்து விசாரணையை ஆரம்பிக்குமாறு அந்தநாட்டின் தலைமைச் சட்டமா அலுவலகம் நேற்று முன்தினம் உத்தரவு பிறப்பித்துள்ளது. (எ)



## பலஸ்தீன ஜனாதிபதி தெரிவிப்பு

ரமல்லாஹ், டிசெ.30

பலஸ்தீனப் பகுதிகளில் குடியேற்றங்கள் அமைப்பதைத் தடுத்து நிறுத்தினால் இஸ்ரேலுடன் அமைதிப் பேச்சுக்குத் தயார் என்று பலஸ்தீன ஜனாதிபதி முஹ்மத் அப்பாஸ் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேல்-பலஸ்தீனம் இடையே நீண்ட காலமாகப் பகை நிலவி வருகிறது. இஸ்ரேலின் ஆக்கிரமிப்பு பலஸ்தீனப் பகுதிகளில், குறிப்பாக கிழக்கு ஜெருசலேம் உள்ளிட்ட பகுதிகளில் இஸ்ரேல் வலுக்கட்டாயமாகக் குடியிருப்புகளை அமைத்து வருகிறது.

இதைத் தடுத்து நிறுத்தக்கோரி, ஐ.நா. பாதுகாப்புச் சபையில் மலேசியா, நியூசிலாந்து, செனகல், வெனிசுலா ஆகிய நாடுகள் ஒன்றிணைந்து ஒரு தீர்மானத்தைத் தாக்கல் செய்தன.

அந்தத் தீர்மானத்தில், கிழக்கு ஜெருசலேம் உள்ளிட்ட ஆக்கிரமிப்பு பலஸ்தீனப் பகுதிகளில் குடியிருப்புக்களை அமைப்பதை இஸ்ரேல் முழுமையாக நிறுத்திக்கொள்ள வேண்டும். இது தொடர்பான சட்ட திட்டங்களை இஸ்ரேல் மதித்து நடக்க வேண்டும் என்று கூறப்பட்டிருந்தது.

இந்தத் தீர்மானத்தின் மீது கடந்த 23 ஆம் திகதி வாக்கெடுப்பு நடைபெற்றது. இந்த வாக்கெடுப்பில் 15 நாடுகளில் 14 நாடுகள் தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களித்தன. அமெரிக்கா வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாமல் புறக்கணித்து விட்டது. இதனால் தீர்மானம் நிறைவேறியது.

இதனையடுத்து தீர்மானத்துக்குக் கடும் கண்டனம் தெரிவித்த இஸ்ரேல், ஐ.நா. சபையுடனான தமது உறவை முறித்துக் கொள்ளப் போவதாகத் தெரிவித்தது. இருப்பினும், பின்னர் தனது நடவடிக்கைகளை நிறுத்திக் கொள்ள ஒப்புதல் அளிப்பதாக இஸ்ரேல் அரசு தெரிவித்துள்ளது.

1979 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இப்போது தான், குடியிருப்புக் கொள்கையில் இஸ்ரேலுக்குக் கண்டனம் தெரிவிக்கும் தீர்மானம் ஒன்று நிறைவேற அமெரிக்கா வழி விட்டுள்ளது.

### ஜோன் கெரி கருத்து

மேலும், இது தொடர்பாக அமெரிக்க வெளியுறவுத் துறை செயலாளரான ஜோன் கெரி இஸ்ரேலுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் பேசினார்.

இரு நாடுகளுக்கான தீர்வு குறித்த ஒரு சமாதான உடன்படிக்கையின் வாய்ப்பானது பெரும் ஆபத்தில் இருக்கின்றது.

ஆக்கிரமிக்கப்பட்ட நிலத்தில் இஸ்ரேலியக் குடியிருப்புக் கட்டடங்களைக் கட்டுவது ஒரு பெரிய பிரச்சினை என்று கெரி தெரிவித்திருந்தார்.

### கெரியின் கருத்துக்கு நெதன்யாகூ கண்டனம்

இந்தநிலையில் கெரியின் பேச்சுக்கு இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் கண்டனம் தெரிவித்தார்.

இஸ்ரேலுக்கு எதிராக பலஸ்தீனத்தின் முரட்டுத்தனமான பயங்கரவாதப் பிரசாரத்தை அடக்குவதாகக் கெரி கூறி இருந்தார். ஆனால் அதற்காக அவர் எதையுமே செய்யவில்லை என்று கடுமையாகச் சாடியிருக்கிறார் நெதன்யாகூ.

இந்தநிலையில் தங்கள் நாட்டுப் பகுதிகளில் குடியேற்றங்களைத் தடுத்து நிறுத்தினால் இஸ்ரேலுடன் அமைதிப் பேச்சுக்குத் தயார் என்று பலஸ்தீன ஜனாதிபதி முஹமத் அப்பாஸ் தெரிவித்துள்ளார். (எ)

## நியூசிலாந்து ஜப்பானில் நில அதிர்வு

நியூசிலாந்தில் மீண்டும் நில அதிர்வு நேற்று ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. இது ரிச்டர் அளவுகோலில் 5.5 ஆகப் பதிவாகியுள்ளது.

இந்த நில அதிர்வால் ஏற்பட்டுள்ள சேத விவரங்கள் தொடர்பில் இதுவரை எவ்வித தகவல்களும் வெளியாகவில்லை.

இதேவேளை, ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் நிலநடுக்கம் ஒன்று உணரப்பட்டுள்ளது. இது ரிச்டர் அளவுகோலில் 6.3 ஆகப்பதிவாகியுள்ளது. எனினும் நிலநடுக்கத்தால் ஏற்பட்ட சேத விவரங்கள் எவையும் அறிவிக்கப்படவில்லை. (எ)

## சிரிய ரஷ்யத் தூதரகம் மீது இருமுறை குண்டு வீச்சு!

டமஸ்கஸ், டிசெ.30

சிரியத் தலைநகர் டமஸ்கஸில் உள்ள ரஷ்யத் தூதரகம் மீது இருமுறை குண்டுவீச்சு தாக்குதல் சம்பவங்கள் நடைபெற்றுள்ளன.

ரஷ்யா, ஈரான் ஆகிய நாடுகளின் துணையுடன் சிரியாவில் வாழும் கிளர்ச்சியாளர்கள் மீது பஷர் அல் ஆசாத் தலைமையிலான அந்தநாட்டு அரசு தாக்குதலை நடத்தி வந்தது.

ரஷ்ய ஆதரவுடன் நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலால் அலெப்போ நகர் முழுவதும் அரசு படைகளின் கட்டுப்பாட்டுக்குள் வந்துவிட்டதாகச் செய்திகள் வெளியாகி உள்ளன.

இந்த நிலையில், டமஸ்கஸில் உள்ள ரஷ்யத் தூதரகம் மீது இருமுறை குண்டுவீச்சுத் தாக்குதல் சம்பவம் நடைபெற்றுள்ளது. ரஷ்ய வெளியுறவுத்துறை அமைச்சகம் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.

அதில், ரஷ்யத் தூதரகம் மீது இரண்டு முறை இந்தக் குண்டுவீச்சுத் தாக்குதல் சம்பவங்கள் நடைபெற்றுள்ளன. இந்தத் தாக்குதலில் ஒன்று தூதரக வளாகத்தில் உள்ள முற்றம் பகுதியிலும், மற்றைய தாக்குதல் தூதரக ஆணையத்தின் அருகிலும் நடத்தப்பட்டுள்ளது. (எ)

## சிரியாவில் போர்நிறுத்தம்: ரஷ்யா-துருக்கி யோசனை



அங்கரா, டிசெ.30

சிரியாவில் போர் நிறுத்தத்தை நடைமுறைப்படுத்துவது குறித்து ரஷ்யாவும் துருக்கியும் யோசனை ஒன்றை முன்வைக்க உள்ளது.

துருக்கியின் வெளிவிவகார அமைச்சர் மெவ்லுட் கவுஸொக்லு இதனைத் தெரிவித்துள்ளார். துருக்கியும் ரஷ்யாவும் கூட்டாக இணைந்து போர் நிறுத்த உடன்படிக்கை ஒன்றைத் தயாரித்துள்ளன என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

எனினும், ரஷ்யா மற்றும் துருக்கி ஆகிய தரப்பின் இந்த யோசனைக்கு சிரிய ஜனாதிபதி அஸாட்டின் ஒத்துழைப்பு அவசியமானது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சிரியாவுக்கான தீர்வுத்திட்டங்கள் குறித்த எழுத்து மூலமான 2 யோசனைத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

அவற்றில் ஒன்று அரசியல் தீர்வுத் திட்டம் என்றும் மற்றையது போர் நிறுத்தம் பற்றியது என்றும் தெரிவிக்கப்படுகிறது. இந்தத் திட்டங்களை எந்த நேரத்திலும் நடைமுறைப்படுத்தப்பட முடியும் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (எ)

## தாய்லாந்தில் இனங்காணாத நிலையில் சுனாமியில் சிக்கிய 400 சடலங்கள் !

பாங்கொக், டிசெ.30

தாய்லாந்தில் 2004 ஆம் ஆண்டு இடம்பெற்ற சுனாமியில் சிக்கி அடையாளம் காணப்படாத நிலையில் இன்னமும் 400 சடலங்கள் உள்ளன என்று அதிர்ச்சித் தகவல்கள் வெளியாகியுள்ளன.

2004 ஆம் ஆண்டு டிசெம்பர் 26 ஆம் திகதி இடம்பெற்ற சுனாமி அனர்த்தத்தில் 9.15 ரிச்டரில் நிலநடுக்கம் ஏற்பட்டுத் தென்கிழக்கு ஆசிய நாடுகளில் பெரிய சுனாமி அலைகள் தாக்கின.

இதன்போது உலகம் முழுதும் சுமார் 2 லட்சத்து 26 ஆயிரம் பேர் கொல்லப்பட்டனர். தாய்லாந்தில் இந்த



அனர்த்தத்துக்குப் பின்னர் இதுவரை சுமார் 5000 உறவினர்கள் வரை இறந்தவர்களின் சடலங்களை அடையாளம் காண்பதற்காக அழைக்கப்பட்டனர் என்று கூறப்படுகின்றது. ஆனால் பாங்கா மாகாணத்தைச் சேர்ந்த தக்குவாபா மாவட்டத்தின் பிரதிப் பொலிஸ் மா அதிபர் ஆனந்த் பூங் கெர்காவ் இன் கூற்றுப்படி, இன்னமும் 400 சடலங்கள் அடையாளம் காணப்படாத நிலையில் இருக்கின்றன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை 2004 ஆம் ஆண்டு ஏற்பட்ட சுனாமியில் தாய்லாந்தில் மாத்திரம் 5 ஆயிரத்து 395 பேர் மரணமடைந்தனர்.


அத்துடன் இதில் 2 ஆயிரம் பேர் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

# நல்லாச் சொன்னீங்க போங்கோ...

சித்திரபுத்திரனார்




“மாடுமோ செத்தல் மாடு.... வண்டியுமோ ஓட்டை வண்டி....
மாடிழுக்கமாட்டாமல் மாய்கிறாண்டி உன் புருஷன்....”
நாட்டார் பாடல் எல்லாருக்கும் தெரியுமெல்லோ....!
எங்கட கைதடிச் சபை நிலை வேற மாதிரியுங்கோ....
“உறுப்பினரோ குளு குளு, தள தள உறுப்பினர்கள்....
வண்டியுமோ நாலைந்து மில்லியனில ஏ.ஸி வண்டி....
சேர்த்திழுக்கமாட்டாமல் மாய்கிறாண்டி சபை ஞானம்....”
கைதடிச் சபையின்ரை 2016 நிறைவுக்கவட்டம் நேற்றைக்கு....
ஒரு முஸ்பாத்தி பாருங்கோ.... நேற்று....
கைதடிச் சபைக்காரருக்கு ஹோட்டலிலை மத்தியான விருந்து....
ஒழுங்குபடுத்தியிருந்தவர் சபை ஞானத்தார்....
உறுப்பினர்மாரெல்லாம் ரிப் ரொப்பாத்தான் வந்தவை....
ஒராளுங்கோ.... இல்லை இல்லை.... ரண்டுபேர்....
முல்லையில இருந்து வாற அண்ணை ஒராளும்
சாவாவில இருந்து வாற சட்டத்தம்பி ஒராளும்
கோட்,சூட் ,ரையில....
மிச்சம் எல்லாரும் தமிழ் தேசிய உடை....
அதுக்குள்ள ஒரு பொம்பிளைப்பிள்ளை இருக்கிறா தெரியுமே....
சித்தங்கேணியோ சுழிபுரப்பக்கமிருந்து வாறவா....
அவாவும் நல்ல வடிவா திறம் சாறி கட்டி
ஆயத்தமா வெளிக்கிட்டு வந்தவா விருந்துக்கு....
கைதடிச் சபையார் எல்லாரும் சேர்ந்து குறூப் போட்டோவும்
எடுத்தவை பாருங்கோ....அதுக்கும் சேர்த்துத்தான் வடிவா
வெளிக்கிட்டு எல்லாரும் வந்தவை போல....
இந்த நரைச்ச தாடிக்காரர் ரண்டுபேரும் குறூப் போட்டோவிலை
பக்கத்திலை இருந்து படம் எடுத்தவை பாருங்கோ....
வசிட்டரும் விசுவாமித்திரரும் போல தெரிஞ்சுது.
யார் விசுவாமித்திரர் எண்டு கேளாதீங்கோ....
பதில் சொல்லத்தான் விருப்பம்.
ஆனால் பிறகு கைதடிப்பக்கம் போக ஏலாது....
சரி நான் சொல்ல வந்த பகிடியைக் கேளுங்கோ....
வடிவா வெளிக்கிட்டு வந்த அந்த பொம்பிளைப்பிள்ளை
அதுதானுங்கோ....
அவாதான் ஒரேயொரு ஆள் தாய்க்குலத்தின்ரை பிரதிநிதி
கைதடிச் சபை அமர்வில எழும்பி.....
“சும்மா விருந்து, சாப்பாடு, கொண்டாட்டம் எண்டு
சனத்தின்ரை காசைச் செலவழிக்கிறியள்.... சனம் பாவம்
கஷ்டப்படுகுதுகள் ..... ஏன் இப்பிடிப் பெரிய ஹோட்டலில
மத்தியானச் சாப்பாடு ஒழுங்குபடுத்தினீங்கள்....?
சிக்கனமில்லாமல் நடக்காதீங்கோ....!” என்று
சபை ஞானத்தாருக்கு உபதேசம் செய்தவா....!?
அட... பகிடியைப் பாருங்கோ....
அவள் பிள்ளை ஞானத்தாருக்கெல்லே சிக்கனம் படிப்பிக்கிறா....!
தமிழ்லை ஒரு அச்சாப் பழமொழி இருக்கு.....
‘குளம் எத்தினை ....டியைக் கண்டது....?
....டி எத்தினை குளத்தைக் கண்டது?’
சபை ஞானத்தார் எத்தினை கணக்கு வழக்குப் பாத்தவர்
அவருக்கு சிக்கனக் கணக்கு.........
இல்லாட்டிச் ‘சிக்கின்’ கணக்கு.....
வேற யாரும் சொல்லிக் கொடுக்கலாமே......?
கைதடிச் சபையிலை சிக்கனம் சிக்கனம் எண்டு
உரத்துச் சொல்லிப்போட்டு
ரவுணில ஹோட்டலுக்கு வந்து சிக்கின் புரியாணி
ஐஸ்கிறீம் எல்லாம் வடிவாச் சாப்பிட்டா பாருங்கோ
எங்கடை பொம்பிளப் பிள்ளை....!



# சிறந்த காலநிலை வேண்டி புத்தாண்டில் விசேட விழிபாடு

## நல்லூர் பிரதேச செயலக வளாக ஆலயத்தில்

நாட்டின் சகல பிரதேசங்களிலும் அதிக வறட்சியான கால நிலை நில்வுவதால் சகல பெரு நீர்ப்பாசனங்கள் உள்ளிட்ட மற்றும் நீர்த்தேக்கங்களில் நீர் நாளுக்கு நாள் குறைந்து வருகின்றது.

இவ்வாறான நிலையால் நாட்டின் பொருளாதாரத்திலும் மக்களின் அன்றாட நடவடிக்கைகளிலும் பெரும் தாக்கம் ஏற்பட்டுள்ளது.

இந்த நிலைமை நீங்கி மலரும் புத்தாண்டின் ஆரம்பத்தில் நாட்டில் நல்ல காலநிலை நிலவ வேண்டும் என்பதற்காக நல்லூர் பிரதேச செயலக வளாகத்தினுள் அமைந்துள்ள பிள்ளையார் ஆலயத்தில் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு விசேட பூசை வழிபாடுகள் பிரதேச செயலகத்தினரால் நடத்தப்படவுள்ளன. இதற்கான ஏற்பாடுகளை பிரதேச செயலாளர் செய்துள்ளார்.

(இ)

# காரைநகர் டிப்போ பொன்விழா நிகழ்வு

இலங்கைப் போக்குவரத்துச் சபை காரைநகர் டிப்போவின் பொன் விழா நிகழ்வுகள் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு முகாமையாளர் ந.குணசீலன் தலைமையில் நடைபெறவுள்ளன.

யாழ்ரன் கல்லூரி மாணவர்களின் பாண்ட் வாத்திய இசையுடன் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவர். தொடர்ந்து காரை மத்தி மேம்பாட்டுக் கழக மாணவிகளின் வரவேற்பு நடனம், விருந்தினர்கள் உரை, கௌரவிப்பு நிகழ்வு என்பன இடம்பெறும்.

1966ஆம் ஆண்டில் இந்த டிப்போ ஆரம்பிக்கப்பட்டு இவ்வாண்டுடன் 50 ஆண்டு களைப் பூர்த்தி செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(இ)

# சந்தேகங்கள் ஏற்படுத்திய...

(13 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

இந்த வழக்கில் கொலை செய்யப்பட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தேசிய முக்கியத்துவம் மிக்கவரா அல்லது அந்தக் கொலை வழக்கில் எதிரிகளாகக் கூண்டில் நிறுத்தப்பட்ட கடற்படை அதிகாரிகள் தேசிய முக்கியத்துவம் பெற்றவர்களா என்பதை அரசாங்கத் தரப்பு நிச்சயமாக சீர்தூக்கிப் பார்த்திருக்கும். பார்த்திருக்க வேண்டும்.

உண்மையில் என்ன நடந்தது, என்ன காரணத்திற்காக ஜூரிகள் முன்னால் இந்த வழக்கை விசாரணை செய்ய வேண்டும் என்ற முடிவெடுக்கப்பட்டது என்பது வெளியிடப்படவில்லை. இனிமேலும் வெளியிடப்படுமா என்பதும் சந்தேகமே.

இந்த வழக்கு 3 நீதிபதிகளைக் கொண்ட ட்ரயல் அட் பார் முறையில் விசாரிக்கப்பட்டு எதிரிகள் குற்றவாளிகள் என தீர்ப்பளிக்கப்பட்டிருந்தால், படையினரைத் தண்டிப்பதற்காகத்தான் 3 நீதிபதிகளை அரச தரப்பினர் வழக்கை விசாரணை செய்ய நியமித்தார்களா என்ற சந்தேகமும் கேள்வியும் சிங்கள மக்கள் மத்தியில் நிச்சயமாக எழுந்திருக்கும்.

சிங்கள மக்கள் மத்தியில் இருந்து அத்தகைய கேள்வி எழும் ஒரு நிலைமை ஏற்பட்டுவிடக் கூடாது என்று அரச தரப்பினர் அஞ்சியிருக்கலாம். அதுதான் இந்த வழக்கை ஜூரிகள் முன்னிலையில் விசாரணை நடத்துவதற்குத் தூண்டியிருக்கலாம் என்று எண்ணுவதற்கும் இடமுண்டு.

பாரதரத்ன பிரேமச்சந்திர கொலை வழக்கில் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா எதிரியாகக் குறிப்பிடப்பட்டு ட்ரயல் அட் பார் விசாரணை நடத்தப்பட்டது.

இதில் கொல்லப்பட்டவரும், கொலைக் குற்றம் சாட்டப்பட்டவரும் இருவருமே நாடாளுமன்ற உறுப்பினர்கள். ஒரே கட்சியைச் சேர்ந்தவர்கள்.

தேர்தல் பரப்புரையின் போது இருவரும் மோதிக்கொண்டார்கள். ஒரு தேர்தல் கால ‘ரவுடி’ச் சண்டையின் விளைவாகவே இங்கு கொலை விழுந்தது.

ஆயினும் அதற்குத் தேசிய முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு ட்ரயல் அட் பார் முறையில் 3 நீதிபதிகள் முன்னிலையில் விசாரணை நடைபெற்றது. இந்த வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பில் குற்றம் சாட்டப்பட்டவர் குற்றவாளியாகக் காணப்பட்டிருந்தார்.

ஆனால் ரவிராஜ் கொலை வழக்குக்கு அந்த முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை. தமிழ் மக்களுடைய விடுதலைப் போராட்டத்துக்காக உரத்துக் குரல் கொடுத்த ஒரு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினரே இந்தச் சம்பவத்தில் கொலை செய்யப்பட்டிருந்தார்.

இதனை காரணமாகக் கொண்டுதான் ட்ரயல் அட் பார் முறையிலான விசாரணை நடத்தப்படவில்லையோ என்ற சந்தேகம் எழுகின்றது.

பாதாள குழுச் சண்டையின் கொலைக்குக் கூட ட்ரயல் அட்பார் விசாரணை நடத்தப்பட்ட முன் உதாரணம் உள்ளது.

### காரணம் கேட்க முடியாது மாற்றமும் செய்ய முடியாது

சட்டமும் சட்ட நுணுக்கங்களும் ஒரு வீதம் கூட தெரியாத ஜூரிகள் சபையினர் அளித்த தீர்ப்பின் காரணமாக இந்த வழக்கில் நீதிபதிகளுக்குத் தலைக்குனிவு ஏற்பட்டுள்ளது. நீதித்துறைக்கு அவமானம் ஏற்படுத்திய தீர்ப்பாக இந்தத் தீர்ப்பு கருதப்படுகின்றது.

இந்த வழக்கில் நீதிபதி தவறிழைக்கவில்லை என்பது சட்டத்துறை சார்ந்தவர்களின் வாதமாகும்.

ஏனெனில் ஜூரிகள் சபையொன்றின் முன்னால் நடைபெறுகின்ற வழக்கில் ஜூரி சபையினர் எடுக்கும் முடிவின்படி தீர்ப்பை அறிவிக்க வேண்டிய பொறுப்பும் கடமையும் நீதிபதியைச் சார்ந்திருக்கின்றது.

அதேவேளை, ஜூரி சபையினர் எடுக்கின்ற முடிவுக்கு, அவர்களிடம் நீதிபதி காரணம் கேட்க முடியாது. அதேபோன்று ஜூரி சபையினர் எடுக்கும் முடிவில் மாற்றம் செய்யவும் அவரால் முடியாது.

அத்தகைய அதிகாரம் நீதிபதிக்கு சட்டரீதியாக வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. ஜூரிகளின் முடிவுக்கு அமைய தீர்ப்பை மட்டுமே அவரால் வழங்க முடியும்.

இந்த நிலையில், தமிழ் அரசியல்வாதியும் சட்டவாக்கத்துக்கான உயர்ந்த சபையாகிய நாடாளுமன்றத்தின் உறுப்பினருமாகிய ஒருவருடைய கொலை வழக்கில் நீதித்துறை தோல்வி கண்டிருக்கின்றது.

போர்க்குற்றம் சம்பந்தப்பட்ட வழக்குகளை விசாரிப்பதற்கு இலங்கையின் நீதித்துறை சுதந்திரமானதல்ல. சுயாதீனத்தைக் கொண்டதல்ல என்று குற்றம் சுமத்தி, சர்வதேச நீதிபதிகளும் சர்வதேச விசாரணையாளர்களும் தேவை என்ற கோரிக்கை ஏற்கனவே சர்வதேச அரங்கில் முன்வைக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் அதனை உறுதிப்படுத்தும் வகையில் வெளிவந்துள்ள ரவிராஜ் கொலை வழக்கின் தீர்ப்பானது, எதிர்வரும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்று நிச்சயமாக எதிர்பார்க்கலாம்.

# ஊக்கமருந்து பாவனை குறித்து முதல் தடவையாக ரஷ்யா ஒப்புதல்!

மொஸ்கோ, டிசெ.30

உலகின் பல்வேறு பிரதான விளையாட்டுப் போட்டிகளைப் பாதிக்கும் வகையில் அமைந்த ஊக்க மருந்து பயன்பாடு தொடர்பாக முதல் தடவையாக ரஷ்ய அதிகாரிகள் ஒப்புக் கொண்டுள்ளனர்.

2011 முதல் 2015 வரையான ஐந்து வருட காலப்பகுதியில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட ரஷ்ய விளையாட்டு வீர, வீராங்கனைகள் ஊக்கமருந்தை பயன்படுத்தியிருந்தனர் என்று கடந்த 9ஆம் திகதி வெளியிடப்பட்ட அறிக்கை ஒன்றில் குறிப்பிடப்பட்டிருந்தது.

எவ்வாறாயினும் ஊக்க மருந்து பயன்பாட்டை ரஷ்ய அதிகாரிகள் ஒப்புக் கொண்டபோதிலும் அதில் எந்தவகையிலும் அரசுக்கு சம்பந்தமில்லை என நியூயோர்க் டைம்ஸுடனான நேர்காணலின் போது குறிப்பிட்டனர்.

''அது நிறுவனங்களால் செய்யப்பட்ட ஒரு சதி'' என தடைசெய்யப்பட்ட ஊக்க மருந்து பாவனைக்கு எதிரான முகவர் நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம் அனா ஆன்ட்சிலோவிச் தெரிவித்தார்.





''இதற்குப் பொறுப்பானவர்கள் குறித்து நான் பேச விரும்பவில்லை'' என சோவியத் யூனியன் காலந்தொட்டு முன்னணி விளையாட்டுத்துறை அதிகாரியாக கடமையாற்றும் 81 வயதான விட்டலி ஸ்மிர்னோவ் தெரிவித்தார்.

இவர் ஊக்கமருந்து பயன்பாட்டைத் தடுப்பதற்கான சீர்திருத்த அமைப்பின் பொறுப்பாளியாக ரஷ்ய ஜனாதிபதி விளாடிமர் புட்டினினால் நியமிக்கப்பட்டுள்ளவர் என்பது குறிப்பிடத்தக்கது.

''முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சராகவும் ஒலிம்பிக் குழுவின் தலைவராகவும் பதவி வகித்தவர் என்ற வகையில் என்னைப் பொறுத்தமட்டில் நாங்கள் பெருமளவு தவறுகளை இழைத்துள்ளோம்'' என்று தெரிவித்துள்ளார்.

ரஷ்ய விளையாட்டு வீர. வீராங்கனைகளால் ஒப்படைக்கப்பட்ட சிறுநீர் மாதிரிகளை ரஷ்ய விளையாட்டுத்துறை அமைச்சு சூட்சுமமாக மாற்றியமைத்தது என்பது தொடர்பான செய்தி, தடை செய்யப்பட்ட ஊக்கமருந்து பாவனையைத் தடுக்கும் உலக முகவர் நிறுவனமான வாடாவின் நடத்தப்பட்ட புலன்விசாரணைகள் மூலம் கடந்த ஜூலை மாதம் வெளிவந்திருந்தது.

இதனைத் தொடர்ந்து கனேடிய சட்ட நிபுணரும் விளையாட்டுத்துறை சட்டத்தரணியுமான டாக்டர் றிச்சர்ட் மெக்லெரனால் 'வாடா' சார்பாக வெளியிடப் பட்ட இரண்டாவது அறிக்கையிலும் ரஷ்யாவுக்கு எதிராகவே குறிப்பிடப்பட்டிருந்தது.

அவ்வறிக்கையில், 'முன்னொருபோதும் இல்லாதவாறு லண்டன் 2012 ஒலிம்பிக் போட்டிகளின் போது மோசடிகள் இடம் பெற்றுள்ளன' எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

மெக்லெரனின் அறிக்கை பிரகாரம், ரஷ்ய விளையாட்டு வீர, வீராங்கனைகளின் சிறுநீர் மாதிரிகளின் தன்மையை மாற்றுவதற்கு உப்பும் கோப்பியும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

இவை யாவும் லண்டன் 2012 ஒலிம்பிக் போட்டிகள், 2013 மொஸ்கோவில் நடைபெற்ற உலக மெய்வல்லுநர் வல்லவர் போட்டிகள், சொச்சி 2014 குளிர்கால ஒலிம்பிக் போட்டிகள் ஆகியன நடைபெற்ற காலப்பகுதியில் இடம் பெற்றவை என்று அவரது அறிக்கையில் குறிப்பிடப்பட் டுள்ளது.

லண்டன் ஒலிம்பிக் விழாவில் 21 தங்கங்கள் உட்பட 72 பதக்கங்களையும் சொச்சியில் 13 தங்கங்கள் உட்பட 33 பதக்கங்களையும் ரஷ்யா வென்றிருந்தது.

எவ்வாறாயினும் ரஷ்யாவில் ஊக்க மருந்து பாவனைத் திட்டம் எதுவும் இடம்பெறவில்லை என ஆரம்பத்தில் கூறியிருந்தமை முழு உலகும் அறிந்த விடயமாகும். .

இந்த விடயம் தொடர்பாக ஒழுக்கவியல் விசாரணையை சர்வதேச ஒலிம்பிக் குழு ஆரம்பித்ததுடன் பல்வேறு போட்டிகளை நடத்தும் வாய்ப்பையும் ரஷ்யா இழந்தது.

அத்துடன் மெய்வல்லுநர் சம்மேளனங்களுக்கான சர்வதேச சங்கத்தினால் சர்வதேச போட்டிகளில் ரஷ்யா பங்குபற்றுவதற்கு தடை விதித்துள்ளது.

## அதிக சம்பளம் பெறும் உதைபந்தாட்ட வீரர்!




உலகள:வில் அதிக சம்பளம் பெறுகிற உதைபந்தாட்ட வீரராக ஆர்ஜென்டினா வீரர் கார்லோஸ் டெவெஸ் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

சீன உதைபந்து கிளப்பான சாங்காய் சென்ஹுவாவுடன் கார்லோஸ் சமீபத்தில் ஒப்பந்தம் செய்துள்ளார்.

இதற்காக அவருக்கு ஒரு சீசனுக்கு 40 மில்லியன் டொலர் அதாவது 273 கோடி இலங்கை ரூபா சம்பளம் வழங்கப்படவுள்ளது. இதையடுத்து, உதைபந்து உலகில் அதிக சம்பளம் பெறும் வீரர் என்கிற பெருமையைப் கார்லோஸ் பெற்றுள்ளார்.

# முதல்தர டென்னிஸ் வீராங்கனை அனா இவானோவிச் ஓய்வு பெறுகிறார்

பெல்கிறேட் டிசெ.30

செர்பியாவின் டென்னிஸ் வீராங்கனை அனா இவானோவிச் (வயது 29) டென்னிஸ் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுகிறார் என்று அறிவித்துள்ளார்.

உலகதர உயர்நிலைப் போட்டிகளில் தன்னால் இனி விளையாட முடியாது என்பதால் அவர் இந்த முடிவை எடுத்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

2008 ஆம் ஆண்டு பிரெஞ்ச் ஓபன் டென்னிஸில் சம்பியன் பட்டம் பெற்று, தரவரிசையில் முதலிடம் பெற்றிருந்தார். இதன் மூலம் கிரான்ட்ஸ்லாம் பட்டம் பெறும் முதல் செர்பிய வீராங்கனை என்ற பெருமைக்கும் சொந்தக்காரராக இவர் திகழ்கிறார். 12 வாரங்கள் தொடர்ந்து தரவரிசையில் முதல் இடம் வகித்த இவர் 15 மகளிர் டென்னிஸ் ஒற்றையர் பட்டங்களை வென்றுள்ளார்.

டென்னிஸில் அதிகம் பேர் ரசிக்கும் வீராங்கனை யார் என்று 2015 ஆம் ஆண்டில் ஆங்கில பத்திரிகை ஒன்று நடத்திய கருத்துக் கணிப்பில் இவர் முதலிடத்தைப் பிடித்திருந்தார். முன்னணி வீராங்கனையாக வலம் வந்த இவா னோவிச் சமீப காலமாக தொடர் தோல்விகளால் தரவரிசையில் பின் தங்கியிருந்தார்.



இந்த நிலையில் டென்னிஸ் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவதாக தனது டுவிட்டர் பக்கத்தில் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-தற்போது ஓய்வை அறிவிப்பதை தவிர வேறு வழியில்லை. இது ஒரு கடினமான முடிவாகும். ஆனால், கொண்டாட இன்னும் நிறைய விட யங்கள் இருக்கின்றன. டென்னிஸ் மூலம் நான் கனவிலும் எதிர்பாராத வெற்றிகளையும் பாராட்டுகளையும் பெற்றுள்ளேன். ஆதரவளித்த குடும்பத்தினர்கள், நண்பர்கள், ரசிகர்கள், மற்றும் அனுசரணையாளர்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன் என்றும் தெரிவித்துள்ளார்.

தற்போது தரவரிசைப் பட்டியலில் 63 ஆம் இடத்தில் உள்ள அனா இவானோவிச், இந்த ஆண்டு ஜேர்மனியின் முன்னாள் உதைபந்து வீரர் பாஸ்டியன் ஸ்வச்வெய்டிஜரை திருமணம் செய்து கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

# இலங்கைக்கு எதிரான முதலாவது டெஸ்ட் போட்டி: 488 ஓட்டங்களை நிர்ணயித்தது தென்னாபிரிக்கா!

இலங்கை மற்றும் தென்னாபிரிக்க அணிகளுக்கிடையிலான டெஸ்ட் போட்டியில் இலங்கை அணிக்கு வெற்றியிலக்காக 488 ஓட்டங்களை தென்னாபிரிக்க நிர்ணயித்துள்ளது.

தென்னாபிரிக்காவின் போர்ட் எலிசபெத் நகரில் நடைபெற்று வரும் இந்தப் போட்டியின் முதல் இன்னிங்ஸில் தென்னாபிரிக்கா 98.5 ஓவர்களில் 286 ஓட்டங்களை சேர்த்தது. அந்த அணியில் அதிகபட்சமாக டுமினி 63 ஓட்டங்களை எடுத்தார்.

இலங்கைத் தரப்பில் சுரங்கா லக்மல் 5 விக்கெட்டுகளைச் சாய்த்தார்.

பின்னர் முதல் இன்னிங்ஸை ஆடிய இலங்கை அணி 2 ஆவது நாள் ஆட்டநேர முடிவில் 57 ஓவர்களில் 7 விக்கெட் இழப்புக்கு 181 ஓட்டங்களை எடுத்திருந்தது.

3 ஆவது நாளான நேற்று முன்தினம் தொடர்ந்து ஆடிய அந்த அணி 64.5 ஓவர்களில் 205 ஓட்டங்களில் சுருண்டது. தென்னாபிரிக்கத் தரப்பில் பிலாண்டர் 5 விக்கெட்டுக ளையும், கைல் அபாட் 3 விக்கெட்டுகளையும் சாய்த்தனர்.

இதையடுத்து முதல் இன்னிங்ஸில் 81 ஓட்டங்கள் முன்னிலை பெற்ற நிலையில், 2 ஆவது இன்னிங்ஸ ஆடிய தென்னாபிரிக்க அணியில் ஸ்டீபன் குக் 117 ஓட்டங்களைக் குவித்து ஆட்டமிழந்தார். டீன் எல்கர் 52, அம்லா 48 ஓட்டங்களை எடுத்தனர். 3 ஆவது நாள் ஆட்டநேர முடிவில் தென்னாபிரிக்கா 80 ஓவர்களில் 5 விக்கெட் இழப்புக்கு 351 ஓட்டங்களை எடுத்தது. டூபிளெஸ்ஸிஸ் 41, டி கொக் 42 ஓட்டங்களுடன் களத்தில் இருந்தனர். இலங்கைத் தரப்பில் டி சில்வா 2 விக்கெட் வீழ்த்தியுள்ளார்.

இந்நிலையில், 351 ஓட்டங்களுடன் நேற்றைய ஆட்டத்தை ஆரம்பித்த தென்னாபிரிக்க அணி 406 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுகளை இழந்த நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்திக் கொண்டது.

ஆகவே, இலங்கை அணிக்கு வெற்றியிலக்காக 488 ஓட்டங்களை நிர்ணயித்துள்ளது.

தென்னாபிரிக்க அணி சார்பில் டுபிளசிஸ் ஆட்டமிழக்காமல் 67 ஓட்டங்களை பெற்றுக்கொண்டதுடன், டி கொக் அரைச்சதத்தை பூர்த்திசெய்து 69 ஓட்டங்களுடன் ஆட்டம் இழந்தார்.

488 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்குடன் தனது 2 ஆவது இன்னிங்ஸை ஆரம்பிப்பதற்கு இலங்கை அணியின் கருணாரட்ண மற்றும் சில்வா ஆகியோர் களமிறங்கினர்.

நீண்ட நேரம் களத்தில் இருந்து 113 பந்துகளைச் சந்தித்து 43 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ரன் அவுட்டானார் கருணாரட்ண.

தொடர்ந்து வந்த பெரேரா 13 பந்துகளை மாத்திரம் எதிர்கொண்டு 6 ஓட்டங்களுடன் மகராஜ்ஜின் பந்தில் ஹொக்கிடம் பிடிகொடுத்தார்.

அடுத்த வந்த மெண்டிஸ் சில்வாவுடன் சேர்ந்து சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய நேரம் சில்வா 48 ஓட்டங்களுடன் றபாடாவின் பந்துக்கு எல்.பி.டபிள்யூ ஆனார்.

அதைத் தொடர்ந்து மெண்டிஸும் 58 ஓட்டங்களில் றபாடாவின் பந்தில் வெளியேறினார்.

நேற்றைய ஆட்டம் முடிவை நெருங்கும்போது மகாராஜ் சந்திமலை 8 ஓட்டங்களுடன் வெளியேற்றினார்.

பந்துவீச்சில் மகாராஜ் மற்றும் றபாடா ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

நேற்றைய நாள் ஆட்டநேர முடிவில் இலங்கை அணி 83 ஓவர்களில் 5 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 240 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

மத்தியூஸ் மற்றும் டி சில்வா ஆகியோர் முறையே 58, 9 ஓட்டங்களுடன் களத்தில் இருந்தனர்.

# பாகிஸ்தானுக்கு எதிரான 2 ஆவது டெஸ்ட்: ஆஸ்திரேலியா 22 ஓட்டங்களால் முன்னிலை

மெல்போர்ன் டிசெ.30

பாகிஸ்தானுக்கு எதிரான இரண்டாவது டெஸ்டின் முதன் இன்னிங்ஸில் ஆஸ்திரேலிய அணி முன்னிலை பெற்றது.

ஆஸ்திரேலியா சென்றுள்ள பாகிஸ்தான் அணி 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது.

முதல் போட்டியில் ஆஸ்திரேலியா வென்றது. இரண்டாவது டெஸ்ட் மெல்போர்னில் இடம் பெற்று வருகிறது. முதல் இன்னிங்ஸில் பாகிஸ்தான் அணி 9 விக்கெட்டுக்கு 443 ஓட்டங்களை எடுத்து ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது. மூன்றாம் நாள் முடிவில், முதல் இன்னிங்ஸில் ஆஸ்திரேலிய அணி 2 விக்கெட்டுக்கு 278 ஓட்டங்களை எடுத்திருந்தது.

கவாஜா (95 ஓட்டங்கள்), கப்டன் ஸ்மித் (10 ஓட்டங்கள்) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

நான்காம் நாள் ஆட்டத்தில் முதல் இன்னிங்ஸை தொடர்ந்த ஆஸ்திரேலிய



அணியின் உஸ்மான் கவாஜா (97 ஓட்டங்கள்) சதமடிக்கும் வாய்ப்பை இழந்தார். அடுத்து வந்த பீட்டர் ஹேண்ட்ஸ்கோம்ப் (54 ஓட்டங்கள்) அரைச் சதமடித்தார். மடின்சன் (22 ஓட்டங்கள்), மாத்யூ வேட் (9 ஓட்டங்கள்) நிலைக்கவில்லை. பொறுப்பாக ஆடிய அணித்தலைவர் ஸ்டீவ் ஸ்மித், டெஸ்ட் அரங்கில் தனது 17ஆவது சதத்தை அடித்தார்.

இரண்டாவது இன்னிங்ஸில் ஆஸ்திரேலிய அணி 6 விக்கெட்டுக்கு 465 ஓட்டங்கள் எடுத்து, 22 ஓட்டங்கள் முன்னிலை வகித்திருந்த போது, மழையால் போட்டி நிறுத்தி வைக்கப்பட்டது.

தொடர்ந்து மழை பெய்ததால், 4 ஆம் நாள் ஆட்டம் முன்னதாகவே முடிவுக்கு வந்தது. மொத்தம் 55.5 ஓவர்கள் மட்டுமே வீசப்பட்டன. ஸ்மித் (100 ஓட்டங்கள்), மிட்சல் ஸ்டார்க் (7 ஓட்டங்கள்) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

பாகிஸ்தான் அணி சார்பில் சோகைல் கான், யாசிர் ஷா, வாகாப் ரியாஸ் தலா 2 விக்கெட் வீழ்த்தினர்.

இன்னும் ஒரு நாள் மட்டுமே மீதமிருப்பதால் இப்போட்டி சமநிலையில் முடிய அதிக வாய்ப்பு உள்ளது.

## பங்களாதேஷுக்கு எதிரான ஒருநாள் போட்டி:

# 67 ஓட்டங்களால் நியூஸிலாந்து வெற்றி!



நெல்சன், டிசெ.30

பங்களாதேஷுக்கு எதிரான இரண்டாவது ஒருநாள் போட்டியில் நியூஸிலாந்து அணி 67 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளது. இதன்மூலம் ஒருநாள் தொடரையும் தன்வசப் படுத்தியுள்ளது.

நியூஸிலாந்து சென்றுள்ள பங்களாதேஷ் அணி, மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் பங்கேற்கிறது. முதல் போட்டியில் நியூஸிலாந்து வென்றது.

இரண்டாவது போட்டி நெல்சன் நகரில் இடம் பெற்றது. நாணயச் சுழற்சியில் வென்ற பங்களாதேஷ் அணி, களத்தடுப்பை தேர்வுசெய்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து அணிக்கு மார்டின் கப்டில் ஓட்டங்கள் எதுவும் இல்லாமல் மோசமான ஆரம்பத்தைக் கொடுத்தார். அணித் தலைவர் வில்லியம்சன் (14 ஓட்டங்கள்), டொம் லதாம் (22 ஓட்டங்கள்), நீஷம் (28 ஓட்டங்கள்) பெற்றனர்.

மொர்டசாவின் வேகப் பந்தில் முன்ரே 3 ஓட்டங்களில் போல்டானார். லூக் ரான்கி 35 ஓட்டங்களை எடுத்து ஆறுதல் கொடுத்தார். அபாரமாக ஆடிய நீல் புரூம், ஒருநாள் போட்டி அரங்கில் தனது முதல் சதத்தை அடித்தார்.

சான்ட்னர் (9 ஓட்டங்கள்), டிம் சவுத்தி (3 ஓட்டங்கள்), பெர்குசன் (4 ஓட்டங்கள்), பவுல்ட் (12 ஓட்டங்கள்) எடுத்து ஆட்டமிழந்தனர்.

நியூசிலாந்து அணி 50 ஓவரில் 251 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது. புரூம் (109 ஓட்டங்கள்) ஆட்டமிழக்காமல் இருந்தார். பங்களாதேஷ் சார்பில் மொர்டசா 3 விக்கெட் வீழ்த்தினார்.

தொடர்ந்து பங்களாதேஷ் அணி துடுப்பெடுத்து ஆடியது. பங்களாதேஷ் அணிக்கு தமிம் இக்பால் (16 ஓட்டங்கள்) சுமாரான துவக்கம் கொடுத்தார். சபிர் ரஹ்மான் (38 ஓட்டங்கள்) ஆட்டமிழந்தார். மகமதுல்லா (1 ஓட்டம்) ஏமாற்றினார். வில்லியம்சன் பந்தில் சாகிப் அல் ஹசன் (7 ஓட்டங்கள்), மொசாதக் ஹொசைன் (3 ஓட்டங்கள்), தன்பிர் ஹைதர் (2 ஓட்டங்கள்) வெளியேறினர். இம்ருல் கெய்ஸ் (59 ஓட்டங்கள்) அரைச் சதம் கடந்து ஆறுதல் கொடுத்தார். அணித்தலைவர் மொர்டசா (17 ஓட்டங்கள்), நூருல் ஹசன் (24 ஓட்டங்கள்) நிலைக்கவில்லை. பங்களாதேஷ் அணி 42.4 ஓவரில் 184 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்து தோல்வி அடைந்தது.

நியூஸிலாந்து சார்பில் வில்லியம்சன் 3 விக்கெட் கைப்பற்றினார். இந்த வெற்றியின்மூலம் மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரை நியூஸிலாந்து அணி 2-0 எனக் கைப்பற்றி முன்னிலையில் உள்ளது. ஆட்டநாயகன் விருதை நியூஸிலாந்தின் புரூம் வென்றார். மூன்றாவது மற்றும் கடைசி போட்டி நெல்சன் நகரில் நாளை இடம்பெறவுள்ளது.



# வடக்கு மாகாணக் கீதத்துக்கு ஆக்கங்கள் சமர்ப்பிக்க முடியும்

## அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் கோரிக்கை


சுன்னாகம், டிசெ.30

வடக்குமாகாணசபைக்கான மாகாணக்கீதம் ஒன்றினை உருவாக்குவதற்கு வடக்கு மாகாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட புத்திஜீவிகள், துறைசார் நிபுணர்கள், கலைஞர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், பொதுமக்கள் மற்றும் புலம்பெயர்ந்து வாழும் மக்கள் ஆகியோரிடம் ஆக்கங்களை எதிர்ப்பார்க்கின்றோம் என வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் அறிவித்துள்ளார்.

மாகாண கீதத்திற்கான ஆக்கங்கள் வடக்கு மாகாண மக்களின் வாழ்வியல் மரபுகள், கலைகள், கலாசாரங்கள் மற்றும் பண்பாடுகள் ஆகியவற்றைத் தழுவியனவாகவும் பாரம்பரிய இசை யினைக் கொண்டனவாகவும் அமைந்திருத்தல் வேண்டும்.

மாகாண கீதத்தினை எழுத்துருவில் தயாரித்து சமர்ப்பிக்க விரும்புவோர் வன்பிரதி (hard copy) மற்றும் மென் பிரதி (soft copy) ஆகியவற்றை சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறு சமர்ப்பிப்போர் கீதத்திற்கான ராகத்தையும் இணைத்தல்வேண்டும். ராகத்தைச் சமர்ப்பிக்க விரும்புவோர் அதனை வன்பிரதி மற்றும் இறுவெட்டில் பதிவு செய்து சமர்ப்பித்தல் வேண்டும்.

ஆக்கங்களினைச் சமர்ப்பிப்பவர்களுடன் தொடர்புகொள்ளக் கூடியவாறு பெயர், முகவரி, தொலைபேசி இலக்கங்களை குறிப்பிடுதல் வேண்டும்.



ஆக்கங்கள்சுயமாகத்தயாரித்தவையாக இருத்தல் வேண்டும் என்பதுடன் ஏனையவர்களுக்கு சொந்தமானவையாகவோ பத்திரிகைகள், புத்தகங்கள், சஞ்சிகைகளில் பிரசுரிக்கப்பட்டனவாகவோ இருத்தல் தவிர்க்கப்பட வேண்டும்.

ஆக்கங்கள் எதிர்வரும் 2017 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் தலைவர், சபைநடவடிக்கைக்குழு, பேரவைச் செயலகம், வடக்கு மாகாண சபை ஏ-9வீதி, கைதடி என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலமாகவோ council affairsnpc@yahoo.com என்ற மின்னஞ்சல் மூலமாகவோ அல் லது பேரவைச் செயலகத்தில் நேரடியாகவோ சமர்ப்பிக்க முடியும். – என்று தெரிவித்துள்ளார். (ம-54)

## இடைக்கால அறிக்கை..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டத்தில் புதிய அரசமைப்பு நகல் வரைவைத் தயாரித்து முன்வைப்பதற்காக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் 21எம்.பிக்களைக்கொண்ட அரசமைப்பு வழிகாட்டல் குழு அமைக்கப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்தஅரசமைப்புவழிகாட்டல் குழு, அரசமைப்புதயாரிப்புக்கு அடிப்படையாக 12 தலைப்புக்களில் விடயங்களை அடையாளம் கண்டு வரிசைப்படுத்தியுள்ளது.

இந்த 12 தலைப்புக்களில் ஆறு தலைப்புக்களுக்கான விடயங்களை ஆராய்ந்து உரிய சிபார்சுகளை முன்வைப்பதற்காக அரசமைப்பு வழிகாட்டல் குழு தனக்குக் கீழ் ஆறு உப குழுக்களை நியமித்தது. அந்த உப குழுக்களுக்கு நாடாளுமன்றுக்குவெளியில் இருந்தும் நிபுணர்களை அது நியமித்திருந்தது.

அந்த உபகுழுக்கள் தமது இடைக்கால அறிக்கைகளைச் சமர்ப்பித்துவிட்டன.

அதேவேளை, வழிகாட்டல் குழுவின் உறுப்பினர்களை மட்டும் கொண்டதான 'விசேட நோக்கத்துக்கான உபகுழு' ஒன்றையும் அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தலைமையில் வழிகாட்டல் குழு அமைந்துள்ளது.

அந்தக் குழுவும் தனது இடைக்கால அறிக்கையைத் தயார் செய்து சமர்ப்பித்திருப்பதாகக் கூறப்படுகின்றது.

இதேசமயம், இதுவரை நாற்பது அமர்வுகளை நடத்தியுள்ள அரசமைப்பு வழிகாட்டல் குழு, தான் கையாளும் ஆறு விடயங்கள் தொடர்பிலும் இடைக்கால அறிக்கை ஒன்றைத் தயாரித்திருந்தது என்றும் –

இது, ஏனைய ஆறு உபகுழுக்கள் மற்றும் விசேட நோக்கத்துக்கான உபகுழு ஆகியவற்றின் இடைக்கால அறிக்கையுடன் சேர்ந்து இந்த மாத முற்பகுதியில் நாடாளுமன்றம் அரசமைப்புச் சபையாகக் கூடிய போது அங்கு சமர்ப்பிக்கப்படும் என எதிர்ப்பார்க்கப்பட்டது.

ஆனால், ஆறு உப குழுக்களின் அறிக்கைகள் மட்டுமே சமர்ப்பிக்கப்பட்டன. அரசமைப்பு வழிகாட்டல் குழுவின் இடைக்கால அறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை.

எதிர்வரும் 9, 10, 11 ஆம் திகதிகளில் நாடாளுமன்றம் மீண்டும் அரசமைப்புச் சபையாகக் கூடி விவாதிக்க இருக்கின்றது. அதற்கு முன்னர் வழிகாட்டல் குழுவின் இடைக்கால அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுவிடும் என்றும், மேற்படி மூன்று நாள் விவாதத்தின்பேது அந்த இடைக்கால அறிக்கை பரிசீலனைக்கு எடுக்கப்பட்டுவிரிவாக ஆராயப்படும் என்றும், அந்த மூன்று நாள் விவாதத்தின் கருத்துக்களை உள்வாங்கி அதனடிப்படையில் உத்தேச புதிய அரசமைப்பின் நகல் வடிவத்தை அரசமைப்பு வழிகாட்டல் குழு உடனடியாகவே தயாரிக்கும் என்றும் முன்னர் கூறப்பட்டு வந்தது.

அதாவது, எதிர்வரும் ஜனவரி 9, 10, 11 ஆம் திகதிகளில் நாடாளுமன்றம் அரசமைப்புச் சபையாகக்கூடியதை அடுத்து, அரசமைப்புத் தயாரிப்பு தீர்க்கமான கட்டத்தை அடைந்துவிடும் என்று நம்பப்பட்டு வந்தது.

ஆனால், அவை எவையும் இப்போது இடம்பெறா என்றும், புதிய அரசமைப்புத்தயாரிக்கும் முயற்சி இனி மந்தகதியிலேயே நகரும் என்றும் கொழும்புவட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

அரசமைப்புவழிகாட்டல்குழுவின் இடைக்கால அறிக்கை திட்டமிட்டபடி இந்த மாத முற்பகுதியில் வந்திருக்க வேண்டும். தவறியிருந்தால், எதிர்வரும் 9, 10, 11 ஆம் திகதியில் அரசமைப்புச் சபையாக நாடாளுமன்றம் கூடும்போதோ அல்லது அதற்கு முன்னரோ அது வந்திருக்க வேண்டும். அப்போதும் வராது என்று உறுதியாகியுள்ளது.

இனி, அது எப்போது வரும் என்றும் தெரியவில்லை.

ஆக, அரசமைப்பு வழிகாட்டல் குழு நியமித்த ஆறு உப குழுக்கள் மற்றும் விசேட நோக்கத்துக்கான உபகுழு ஆகியவற்றின் இடைக்கால அறிக்கைகள் மட்டுமே இந்த 9, 10, 11 ஆம் திகதிகளில் அரசமைப்புச் சபையாக நாடாளுமன்றம் கூடும்போது அங்கு விவாதத்துக்கு எடுக்கப்படவுள்ளன.

இந்த ஆறு உபகுழுக்கள் மற்றும் விசேட நோக்கத்துக்கான உபகுழு ஆகியவற்றின் இடைக்கால அறிக்கைகளும் எந்தத் தரப்பையாவது கட்டுப்படுத்தும் ஆவணமல்ல என்பதும் –

அந்த அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை ஏற்பதும், ஏற்காததும் அவரவரைப் பொறுத்தது என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஏற்கனவே கூறிவிட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கனவாகும்.

ஜனவரி 9, 10, 11 ஆம் திகதிகளின் விவாதத்துக்குப் பிற்பட்ட ஒரு நாளில் அரசமைப்பு வழிகாட்டல் குழு தனது இடைக்கால அறிக்கையைச் சமர்ப்பித்து, அதன் பின்னர் அதன் மீது ஒரு விவாதம் நடத்தி, அத்தகைய விவாதங்கள், கலந்துரையாடலின் பயனாக ஒரு நகல் யாப்புத் தயாரிப்பது என்றால் அதுக்கு மேலும் மாதக்கணக்கான கால அவகாசம் தேவைப்படும் எனச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

வழிகாட்டல் குழுவின் இடைக்கால அறிக்கை பிரதமர் தலைமையிலான குழுவினரால் ஏற்கனவே தயாரிக்கப்பட்டுவிட்டது என்றும் –

எனினும் அதனை வெளியிடுவது உடனடியாக நாடாளுமன்ற அமர்வுகளிலும், வெளியிலும் பெரும் குழப்பத்தை ஏற்படுத்தும் என்று கொழும்பு கருதுகின்றது என்றும் – கூறப்படுகின்றது.

அப்படி விடயம் குழம்பினால் எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனீவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் இலங்கை விடயம் எடுக்கப்படும்போது நிலைமை மோசமாகிவிடும் என்றும் கொழும்பு அரசு கருதுவதாகவும் கூறப்படுகின்றது.

2014 இல் இலங்கை தொடர்பில் – இலங்கையின் அனுசரணையுடன் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படி பல விடயங்களை இலங்கை ஒப்பேற்ற வேண்டியுள்ளது. அதற்காக இலங்கைக்கு ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸில் கொடுத்த இரண்டு வருடகால அவகாசம் இந்த மார்ச்சுடன் முடிவடைகிறது. ஆனால், இலங்கைத் தரப்பு தனக்குள்ள கடப்பாடுகள், பொறுப்புகள் எதனையும் நிறைவு செய்யாத நிலையில் இந்த கால அவகாசத்தை மேலும் ஒரு வருடம் நீடிக்கக் கோருவதன் மூலம் சர்வதேச அழுத்தத்திலிருந்து தற்காலிகமாகத் தப்பிக்கலாம் என அது எண்ணுகின்றது.

இலங்கையில் சிறுபான்மையினரான தமிழருக்கு உரிய நீதி வழங்குவது என்பதும் அந்த ஜெனீவாத் தீர்மானம் மூலம் வலிறுத்தப்பட்ட விடயமாகும்.

அரசமைப்புவழிகாட்டல்குழுவின் இடைக்கால அறிக்கையை வெளியிட்டு, அதன் மூலம் தென்னிலங்கை குழம்பினால், ஐ.நா.மனித உரிமைகள் கவுன்ஸிலில் இலங்கைக்கு எதிரான நிலைப்பாடு தீவிரமடையலாம் எனக் கருதும் கொழும்பு, அதற்காகத் தீர்வு முயற்சி தீர்க்கமான கட்டத்தை அடைவதை மார்ச் ஜெனீவாக் கூட்டம் முடிவடையும் வரை தள்ளிப்போட விரும்புகின்றது.

அதற்காகவே அரசமைப்பு வழி காட்டல் குழுவின் இடைக்கால அறிக்கை சமர்ப்பித்தவை காலம் குறிப்பிடாது இழுத்தடிக்க முடிவுசெய்திருக்கின்றது கொழும்பு.

ஆகவே, மார்ச் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸில் கூட்டம் முடிவடையும் வரை இடைக்கால அறிக்கை வருவது இழுபடலாம் என்கின்றன விடயமறிந்த அந்த வட்டாரங்கள். (உ)

## பகல் கனவு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காரத்தை முன்னெடுத்து வந்தார்.

தற்போது நடைமுறையில் உள்ள அரசமைப்புச்சட்டத்தைக் கொண்டு வந்த ஜே.ஆர். ஜெயவர்த்தனவைக் கடுமையாக விமர்சித்து வந்த மஹிந்த ராஜபக்ஷ அதே அரசமைப்புச் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொண்டு அவரதும், தனது குடும்பத்தினரதும் அதிகாரங்களைப் பலப்படுத்திக் கொண்டார்.

மஹிந்த ராஜபக்ஷவின் சர்வாதிகாரத்தை ஒழித்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் நாங்கள் கொண்டு வந்துள்ள நல்லாட்சி அரசு பதவியேற்ற காலத்தில் இருந்து அரசைக் கவிழ்ப்பதற்கு இவர்கள் சதித்திட்டம் தீட்டி வருகின்றனர்.

இந்தக் கோஷ்டியினர் தலைகீழாக நின்றாலும் மக்கள் ஆணையைக் கொண்டு ஆட்சியை நடத்தி வரும் நல்லாட்சி அரசை அவர்கள் பறித்துக் கொள்வதற்கு இடமளிக்க மாட்டோம்.

2017ஆம் ஆண்டு அரசைக் கவிழ்க்கப் போகின்றார் என வெளிநாட்டு ஊடகங்களிடம் மஹிந்தராஜபக்ஷ கூறியமையிலிருந்து யார் சர்வதேச சதியில் ஈடுபட்டுள்ளனர் என்பது தெரியவந்துள்ளது எனவும் அமைச்சர் கபீர் காசிம் தெரிவித்துள்ளார். (உ)

## 2017இல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னாள் ஜனாதிபதி ஒருவர் மீண்டும் ஜனாதிபதியாக முடியாதா என சர்வதேச ஊடக வியலாளர் ஒருவர் இதன்போது கேள்வி எழுப்பியிருந்தார்.

இதற்குப் பதிலளித்த முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, ஜனாதிபதியாகும் எண்ணம் தனக்குக் கிடையாது எனக் கூறியுள்ளார்.

ஜனாதிபதியாகாமலே தனக்கு நாட்டை மீண்டும் ஆட்சி செய்ய முடியும் எனவும் மஹிந்த ராஜபக்ஷ நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் கீழ் பிரதமர் பதவியொன்று வழங்கப்படும் பட்சத்தில் ஜனாதிபதியுடன் இணைந்து பணியாற்றுவதற்குத் தயாரா என ஊடகவியலாளர் ஒருவர் கேள்வி எழுப்பினார்.

தற்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு அது முடியுமாயின், 1970ஆம் ஆண்டு முதல் நன்றாகத் தெரிந்த ஒருவருடன் இணைந்துபணியாற்றுவதற்குத் தனக்கு முடியாதா என அவர் பதிலளித்தார்.

அவ்வாறான நிலைமையொன்று உருவாகும் பட்சத்தில் அது தனது நிபந்தனைகளின் பிரகாரமே இடம்பெற வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

புதிய அரசமைப்பு உருவாக்கம் தொடர்பில் பிரதமர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோருடன் நடத்தப்பட்ட பேச்சுக்கள் தொடர்பிலும் இதன்போது கேள்வி எழுப்பப்பட்டது.

புதிய அரசமைப்பு உருவாக்கம் நடைபெறுகின்ற விதம் தொடர்பில் மாத்திரமன்றி அரசமைப்புத் தொடர்பான அரசின் நிலைப்பாடு தொடர்பிலும் அவர்கள் தன்னுடன் கலந்துரையாடவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசமைப்பில் மாற்றங்கள் ஏற்படுத்தப்படுகின்றமை தனக்குச் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது எனவும் முன்னாள் ஜனாதிபதி கூறியுள்ளார்.

யுத்த வெற்றிக்காக இந்தியா இலங்கைக்கு உதவிகளை வழங்கியுள்ளது என முன்னாள் இந்தியப்பாதுகாப்பு ஆலோசகர் தெரிவித்த கருத்துக்கள் தொடர்பிலும் வெளிநாட்டு ஊடகவியலாளர்கள் இதன்போது கேள்வி எழுப்பினர்.

அதற்குப் பதிலளித்த அவர் –

யுத்த வெற்றிக்காக இந்தியா உதவிகளை வழங்கியுள்ளது எனத் தான் ஏற்கனவே கூறியிருந்தார் என்றும், தமிழ் நாட்டில் காணப்படுகின்ற பிரச்சினைகள் காரணமாக அதனை வெளிப்படுத்துவதற்கான தேவை இந்தியாவுக்கு இருக்கவில்லை என்றும் தெரிவித்தார்.

இந்தியா இலங்கைக்கு உதவிகளை வழங்கும் நிலைப்பாட்டில் இருந்த நிலையில், அந்த நிலைப்பாட்டில் திடீரென மாற்றம் ஏற்பட்டமைக்கான காரணம் என்னவென ஊடகவியலாளர்கள் அவரிடம் கேள்வி எழுப்பினர்.

சிலவற்றைத் தவறாகப் புரிந்து கொண்டிருந்தமை மாத்திரமன்றி அமெரிக்காவின் அழுத்தமும் அதற்கான காரணமாக அமைந்திருக்கலாம் என அவர் பதிலளித்துள்ளார்.

இதேவேளை இந்தியா, அமெரிக்கா, இந்தியாவின் புலனாய்வு அமைப்பான 'றோ' மற்றும் மேற்குலக நாடுகளின் தலையீடுகள் காரணமாக தேர்தல் பிரசாரச் செயற்பாடுகளில் தன்னால் தலையீடு செய்யமுடியாமை ஏற்பட்டது. எனவும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir

# சுசந்திகா விசேட விமானம் மூலம் கொழும்பு ஆஸ்பத்திரிக்கு மாற்றம்

## டெங்குக் காய்ச்சலால் பாதிப்பு





கொழும்பு, டிசெ.30

ஒலிம்பிக் பதக்கம் வென்ற இலங்கையின் குறுந்தூர ஓட்ட வீராங்கனையான சுசந்திகா ஜெயசிங்க நேற்று விசேட ஹெலிகொப்டர் மூலம் கொழும்பு தேசிய வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

தியத்தலாவ வைத்தியசாலையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்றுவந்த சுசந்திகா ஜெயசிங்க மேலதிக சிகிச்சைக்காக இலங்கை விமானப்படையின் ஹெலிகொப்டரில் கொழும்புக்குக் கொண்டுசெல்லப்பட்டார்.

ஹெலிக்கொப்டருக்கான செலவை விளையாட்டுத்துறை அமைச்சு பொறுப்பேற்கும் எனத் தெரிவிக்கப்பட்டது.

இவர் கடந்த 27 ஆம் திகதி திடீர் சுகயீனம் காரணமாக தியத்தலாவ வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். இவர் டெங்கு காய்ச்சலால் பீடிக்கப்பட்டிருக்கிறார் என தியத்தலாவ வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சுசந்திகா ஜெயசிங்க, விளையாட்டுத் துறையில் தனக்கிருந்த திறமைகள்மூலம் இலங்கைக்கு சர்வதேசரீதியாக பெரும்புகழை ஈட்டிக்கொடுத்தவர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (ம)

# முதலமைச்சருக்கு முற்கூட்டியே ஐ.தே.கட்சி தெளிவுபடுத்தவில்லை!

## அதனாலேயே சட்டமூலம் தோற்கடிப்பு

அபிவிருத்தி விசேட ஏற்பாடுகள் சட்டமூலம் தொடர்பில் நாட்டின் ஒன்பது மாகாண சபைகளினதும் முதலமைச்சர்களுடன் ஐக்கிய தேசியக்கட்சி கலந்துரையாடவில்லையெனநிதிஇராஜாங்க அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன குற்றம் சாட்டியுள்ளார்.

அபிவிருத்தி விசேட ஏற்பாடுகள் சட்டமூலம் மீளத்தயாரிக்கப்பட்டு, நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னர் மாகாண சபைகளில் முன்வைக்கப்பட வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

இந்தச் சட்டமூலத்தை மாகாணசபைகளில் சமர்ப்பிக்க முன்னர், முதலில் அது தொடர்பில் மாகாண முதலமைச்சர்களுக்குத் தெளிவுபடுத்தியிருக்க வேண்டும் எனவும் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்ட போது அவர் சுட்டிக்காட்டினார்.

அவ்வாறு தெளிவுபடுத்தியிருந்தால் அபிவிருத்தி விசேட ஏற்பாடுகள் சட்டமூலம் மாகாண சபைகளால் நிராகரிக்கப்பட்டிருக்காது எனக் குறிப்பிட்ட நிதி இராஜாங்க அமைச்சர், மாகாண சபைகளால் சட்டமூலம் நிராகரிக்கப்பட்டமை தொடர்பில் அரசு கவலை அடையவில்லை எனவும் தெரிவித்தார்.

# அதிபர் பரீட்சையில் சித்தியடைந்த அனைவருக்கும் நாளை நியமனம்

## வடமாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.30

வடக்கு மாகாணத்தில் அதிபர் சேவைப் பரீட்சையில் சித்தியடைந்த அனைவருக்கும் நாளை சனிக்கிழமை யாழ். வலயக் கல்வி அலுவலகத்தில் வைத்து நியமனம் வழங்கப்படும் என வடமாகாண கல்வி அமைச்சின்செயலாளர் இ.ரவீந்திரன் தெரிவித்தார்.

பரீட்சையில் சித்தியடைந்தவர்கள், தமது நியமனத்தை வலியுறுத்தியும், நியமனத்திற்கு தடையாக உள்ள வடமாகாண கல்வி அமைச்சரை பதவிவிலகுமாறு கோரியும், நேற்று முன்தினம் வட மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளரது அலுவலகம் முன்பாக போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இப்போராட்டத்தை அடுத்து வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் மற்றும் கல்வி அமைச்சின் செயலாளர் இ.ரவீந்திரன் ஆகியோர் இவ்விடயம் தொடர்பில் ஆராய்ந்தனர். இதன் பின்னரே நியமனம் வழங்கும் முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

வட மாகாணத்தில் 388 பேர் அதிபர்சேவைதரம் - 3 போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்துள்ளனர். தமக்கு வழங்கப்பட்ட வாக்குறுதிகளுக்கு அமைவாகவும், மத்திய அரசின் சுற்று நிருபங்களுக்கு அமைவாகவும் தமக்கு நியமனம் வழங்குமாறு கோரி அவர்கள் போராட்டங்களை நடத்தினர். இந்த நிலையிலேயே அவர்களுக்கு நியமனம் வழங்கும் நடவடிக்கைஎடுக்கப்பட்டுள்ளது.

வட மாகாணத்தில் உள்ள 207 பாடசாலைகளுக்கு புதிய அதிபர்கள் எதிர்வரும் 2 ஆம் திகதி நியமிக்கப்படுவார்கள். ஏனையவர்கள் பாடசாலைகளில் உப அதிபர்களாகவும், பிரதி அதிபர்களாகவும் நியமிக்கப்படுவார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ம)

### அ.தி.மு.க....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சென்னை ஸ்ரீவாரு திருமண மண்டபத்தில் நேற்றுக் காலையில் அவைத் தலைவர் மதுசூதனன் தலைமையில் கட்சியின் பொதுக்குழுக் கூட்டம் நடைபெற்றது. இதன்போது முதலில், தமிழகமுன்னாள்முதலமைச்சர் ஜெ.ஜெயலலிதாவுக்கு இரங்கல் தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அ.தி.மு.கவின் அவைத் தலைவர் மதுசூதனன், அ.தி.மு.க நாடாளுமன்ற கட்சித் தலைவர் தம்பித்துரை, தமிழக முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் உட்பட 23 பொதுக்குழு உறுப்பினர்களால் அ.தி.மு.க பொதுச் செயலாளராக சசிகலாவை நியமிக்கும் பிரேரணை முன்மொழியப்பட்டது. பின்னர் அது பொதுக்குழு உறுப்பினர்களின் ஆதரவோடு ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

இந்த தீர்மானங்கள் நிறைவேறிய பின்னர் செய்தியாளர்களைச் சந்தித்த தமிழக முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம், "அ.இ.அ.தி.மு.கவின் பொதுச் செயலாளராகவி.கே.சசிகலாவை நியமிக்க கட்சியின் பொதுக்குழு தீர்மானம்நிறைவேற்றியுள்ளது. இதனை சசிகலாவுக்கு தெரியப்படுத்த நாங்கள் இப்பொது போயஸ்கார்டன் இல்லம்செல்கிறோம்" என்று கூறிவிட்டு அங்கிருந்து சென்றார்.

இதேவேளை, 'சசிகலா அ.தி.மு.கவின்முழுமையானபொதுச் செயலாளராக இன்றுஏன்தேர்ந்தெடுக்கப்படவில்லை' என்று அ.தி.மு.க செய்தித் தொடர்பாளர் பொன்னையனிடம் பி.பி.ஸி. செய்திச் சேவை கேள்வியெழுப்பியபோது பதிலளித்த அவர் - 'முழுமையான பொதுச் செயலாளர், அடிப்படை உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என கட்சியின் வேறு ஒரு விதியில் குறிப்பிடப்படுவதால் தான் முழுமையான பொதுச் செயலாளராகசசிகலா தேர்ந்தெடுக்கப்படவில்லை'. - என்றார்.

மேலும், 'அடிப்படை உறுப்பினர்கள் ஒரு கோடியே 64 லட்சம் பேர் இருக்கிறார்கள். அவர்கள் 64 ஆயிரம் கிராமங்களில் உள்ளனர். அங்கெல்லாம் வாக்குப் பெட்டி வைத்து, பணிகளை முடிக்க 3 முதல் 6 மாதம் ஆகும். அது தனியாக மீண்டும் நடத்தப்படும்.

காலதாமதத்தை தவிர்ப்பதற்காக, இந்த முறை கையாளப்பட்டுள்ளது. இது எப்போதும் உள்ள நடைமுறைதான். இதற்கு முன்னர், உ.சண்முகம், ராகவானந்தம் போன்றோர் இடைக்காலமாக இப்படி நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்'. - என்றும் கூறினார்.

சசிகலா, அடிப்படை உறுப்பினராகத் தொடர்ந்து ஐந்து ஆண்டுகளை நிறைவு செய்யாததால் தான், தாற்காலிகமாக இந்தப் பொறுப்பு கொடுக்கப்பட்டுள்ளதாகவும், ஐந்து ஆண்டுகள் நிறைவு செய்த பிறகு பொதுச் செயலாளராக முழுமையாகத் தேர்ந்தெடுக்கப்படுவார் என்று வெளியாகும் செய்திகளில் உண்மையில்லை என்ற அவர், ஆனால் அது தவறும் இல்லை என்று தெரிவித்தார்.

சட்டச்சிக்கல்வந்துவிடக்கூடாது என்பதற்காகத்தான் இந்த தாற்காலிக ஏற்பாடா என்று கேட்ட போது, 'அந்த சட்ட விதிகளை பொதுக்குழு கூடி தளர்த்தலாம்' என்றார்.

தளர்த்துவது தொடர்பாக இன்று ஏன் விவாதிக்கவில்லை என்று கேட்டபோது, 'தளர்த்த வேண்டிய தேவையே இல்லை. தேர்தல் நடத்தி, தேர்தல் மூலமாகவே தேர்வு செய்யலாம் என்று முடிவு செய்யப்பட்டுள்ளது' என்று கூறினார்.

'பொதுக்குழுவின் முடிவுகள் கொண்ட விவரங்கள் சசிகலாவிடம் சமர்ப்பிக்கப்பட்டு அவர் அதை ஏற்றுக்கொண்டார். அதனால் அவர் அப்போதே பதவியேற்றுக் கொண்டதாகத்தான் அர்த்தம். சசிகலா அடுத்த இரண்டு தினங்களுக்குள் அ.தி.மு.க. தலைமையகத்துக்கு வருவார்.' - என்றும் பொன்னையன் தெரிவித்தார். (ம)

### பலாலியிலிருந்து....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிகழ்த்தப்படவுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது முப்படைகளின் தளபதிகளும் பிரசன்னமாகியிருப்பர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் எந்த விடயம் குறித்து அவர் உரை நிகழ்த்தவுள்ளார் என்ற விடயம் தெரியவரவில்லை.

இலங்கையின் ஆங்கில இணையத் தளம் ஒன்று இவ்வாறு செய்தி வெளியிட்டுள்ளது.

### இலங்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

- இந்திய அரசாங்கங்களுக்கு இடையில் கடந்த நவம்பர் மாதம் புதுடில்லியில் முதற் கட்டப் பேச்சுக்கள் நடத்தப்பட்டன.

இந்தப்பேச்சுக்களில் இலங்கை வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர, கடற்றொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இரண்டாவது கட்ட இராஜதந்திரப் பேச்சுக்கள் எதிர்வரும் ஜனவரி மாதம் 2 ஆம் திகதி கொழும்பில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கு முன்னோடியாகவே தற்போது புதுடில்லியில் பேச்சுக்கள் நடைபெறுகின்றன.

ஜனவரி மாதம் கொழும்பில் நடைபெறவுள்ள இரண்டாவது கட்டஇராஜதந்திரப்பேச்சுக்களில் இந்தியத் தரப்பில் இருந்து வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா சுவராஜ், இந்திய மத்திய மீன்வளத்துறை அமைச்சர் ராதா மோகன் சிங் ஆகியோரை உள்ளடக்கிய குழு பங்கேற்கும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை - இந்திய மீனவர் பிரச்சினை கடந்த பல தசாப்த காலமாக நீடித்து வருகின்றது. ஈழ யுத்தம் தீவிரம் பெற்று, கடலில் கடற்புலிகளுக்கும் இலங்கைக் கடற்படைக்கும் இடையில் மோதல்கள் தீவிரம் பெறத் தொடங்கிய பின்னர் இந்திய மீனவர்களின் எல்லைதாண்டல் தணிந்திருந்தது.

யுத்தம் முடிவுக்கு வந்ததைத் தொடர்ந்து இந்தப் பிரச்சினை மீண்டும் தீவிரம் பெற்றுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ம)

# இரு இலங்கையர்கள் கொல்கத்தாவில் கைது

போலியான இந்தியக் கடவுச் சீட்டுக்களைவைத்திருந்த இலங்கையர்கள் இருவர் கொல்கத்தா விமான நிலையத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளனர். சுரேஷ்கரன் மற்றும் ஜெபநேசன் ரமேஷ்வானி ஆகிய இருவருமே கைது செய்யப்பட்டவர்களாவர்.

இலங்கையிலிருந்து 10 வருடங்களுக்கு முன்னர் இந்தியா சென்ற இந்த இருவரும் போலியான ஆவணங்களைக் காட்டி இந்தியப் பிரஜாவுரிமையைப் பெற்று இந்தியப் பிரஜைகளுக்குரிய அந்தஸ்துகளுடன் வாழ்ந்துள்ளனர்.

இந்நிலையில் போலி ஆவணங்களைக்கொண்டுதயாரித்த இந்தியக் கடவுச்சீட்டுக்களைப் பயன்படுத்தி இவர்கள் சீனாவிலிருந்து பிரான்ஸுக்குச் சென்றுள்ளனர்.

பிரான்ஸ் குடிவரவுத் திணைக்கள அதிகாரிகள் இவர்களின் ஆவணங்களைச் சோதித்த போது, இந்த நபர்கள் போலியான இந்தியக் கடவுச் சீட்டில் பிரான்ஸ் வந்துள்ளனர் என்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பின்னர் இந்த நபர்கள் தொடர்பிலும் இந்தியக் குடிவரவுத் திணைக்கள அதிகாரிகள், மற்றும்போலிஸாருக்கு பிரான்ஸ் குடிவரவுத் திணைக்கள அதிகாரிகளால் அறிவிக்கப்பட்டது.

இந்த இரு நபர்களும் பிரான்ஸிலிருந்து இந்தியாவுக்குத் திருப்பி அனுப்பப்பட்ட நிலையில் கொல்கத்தா சுபாஷ் சந்திர போஸ் சர்வதேச விமான நிலையத்தின் குற்றப்புலனாய்வு அதிகாரிகளால் போலி ஆவணங்கள் தயாரித்த குற்றத்திற்காகக் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

### ஐ.தே.க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மன்ற உறுப்பினர்கள் அதிருப்தி வெளியிட்டு வந்தனர்.

இந்த நிலையில் மேற்படி விடயத்தை ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டு வருவதற்கு ஐ.தே.கவின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தீர்மானித்துள்ளனர்.

இது தொடர்பில் ஜனாதிபதியிடம் விடுத்த கோரிக்கைக்கு அமைய இன்று பிற்பகல் 4 மணியளவில் சந்திப்புக்கான ஏற்பாடுகள் செய் யப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### கூட்டமைப்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளுக்கு முன்னர் சம்பந்தனுக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தமை தெரிந்ததே.

நாடாளுமன்றம் எதிர்வரும் 9,10,11ஆம் திகதிகளில் மீண்டும் அரச மைப்புச் சபையாகக் கூடவிருக்கின்றது.

அதற்கு முதல் நாள் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் கூட்டம் நடைபெறவுள்ளது.

அந்தக் கூட்டத்திற்கு இரண்டு நாட்கள் முன்னதாக கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக் குழு கூடுகின்றது.

நீண்ட பல மாதங்களின் பின்பே கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக் குழு கூடுகின்றமை குறிப்பிடத்தக்கது. (உ)

காலைக்கதிர் Kalaikkathir
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 222 3000

மாபெரும் புத்தகக் கண்காட்சியும் (புத்தகக் கடல்) மலிவு விற்பனையும்
புத்தகங்கள், பாடசாலை உபகரணங்கள், பாடசாலை சீருடைத் துணிகள் என்பவற்றை ஒரே கூரையின்கீழ் பெற்றுக்கொள்ள நாடுங்கள்.
ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்
இல. 212, 214, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.:021 222 5542, 021 567 1527, acdil@gmail.com

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 30.12.2016 இல் அச்சிடப்பட்டுவெளியிடப்பெற்றது.